சுதந்திர இயக்க வெளியீடு

தை - சனவரி 1990 - வள்ளுவராண்டு 2021 ரூபா 4-00

# வீரவேங்கை


வேங்கை 5

ஆசிரியர்: கோவை மகேசன்

உறுமல் 6 7

# புலிகளின் கட்டுப்பாட்டில் மட்டக்களப்பும், அம்பாறையும்

## லண்டன் 'கார்டியன்,' பி.பி.சி நிருபர் தகவல்!





## தலைவர் பிரபாகரன் பிறந்தநாள் சிறப்பிதழ்

இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேறிய தமிழீழ நாட்டின் தென் பகுதியான அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டனர். இந்திய ராணுவம் உருவாக்கிய "தமிழ் தேசிய இராணுவம்" என்னும் துரோகப் படையினரின் முகாம்களைத் திடீரென மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் மூலம் அவர்கள் வசமிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் (எட்டுலாரி நிறைய) கைப்பற்றி அவர்களை நிராயுதபாணிகளாக்கிய புலிகள், சரணடைந்தவர்களை ஏற்றுக் கொண்டு எதிர்த்தோரைக் கைது செய்து முகாம்களை நாசப்படுத்தினர்.

இதுகுறித்து லண்டன் "கார்டியன்" (The Guardian) எழுதியுள்ள செய்தி அறிக்கை வருமாறு:-

"அண்மையில் தமது எதிரிகளான இந்திய ராணுவம் வெளியேறியதும் கிழக்குப் பிரதேசத்தின் தலைநகரான மட்டக்களப்பை, இரண்டு நாட்கள் நடைபெற்ற கடுமையான சண்டையின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொரில்லாப் படையினர், இந்திய ராணுவம் உருவாக்கி விட்டுச் சென்ற ஏனைய மூன்று தமிழ்க் குழுக்களின் கையிலிருந்து மீட்டுக் கொண்டனர்.

ஆக்கிரமிப்பு இந்தியப் படையிடமிருந்தும், இந்தியப் படை தான் வெளியேறிய பின் செயற்பட ஈழத்தில் உருவாக்கி விட்டுள்ள தமிழ் கூலிப்படையிடமிருந்தும் தமிழீழத்தை விடுவிக்க விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டாவது தான் மட்டக்களப்பாகும்.

இந்திய ராணுவம் வெளியேறியதும் இவ்வாறான மோதல்கள் ஈழத்திலேற்படுமென்பது ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டதே. விடுதலைப் புலிகளை அதிகாரத்துக்கு வர விடாமல், புலிகளை நசுக்குவதற்காகவே, இந்தியா "தமிழ் தேசிய ராணுவம்" (TNA) என்ற அமைப்பை ஏற்படுத்தி, அவர்கட்குப் பயிற்சியும் ஆயுதங்களும் அளித்திருந்தது.

செப்டம்பரில் ஏற்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா தனது படை முழுவதையும் 31-12-89க்கு முன்பு திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும்.

"தமிழ் தேசிய ராணுவம்", கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்திய ராணுவம் வெளியேறியதும், அங்கு தனது இராணுவக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அங்கு நுழைந்து இரண்டு TNA முகாம்களைத் தாக்கி ஏராளமான நவீன ஆயுதங்களைக் கைப்பற்றினர். (இந்த ஆயுதங்கள் மட்டும் ஏழு லாரிகளில் ஏற்றி புலிகளால் எடுத்துச் செல்லப் பட்டதாம்.) தேசிய இராணுவத்தினர் அங்கிருந்து தப்பினேனும் பிழைத்தோமென்று ஓடி விட்டனர். நவம்பர் கடைசியில் அருகிலுள்ள மட்டக் களப்பிலிருந்து இந்திய ராணுவம் வெளியேறியதும், அங்கு TNA நுழைந்து கொண்டது.

T.N.A. என்பது கட்டுப்பாடற்றவர்களின் குழு. கொள்ளையடித்தல், வழிப்பறி, போன்றவைகளிலீடுபடும் சமூக விரோதிகள், என்பது பாதுகாப்பு அதிகாரிகளின் கணிப்பு. 500 பேரைக் கொண்ட விடுதலைப் புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆறு கோடி தமிழர்களுக்குள் ஒரேயொரு மாவீரன் பிரபாகரன்!

## இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின் தோன்றிய வீரத்தமிழன்

இக்கட்டுரையாளர் முதுதமிழ்ச் சான்றோர்களில் ஒருவர். முத்தமிழ்க்காவலர் என்று தமிழர்களால் அன்புடன் அழைக்கப் படுபவர். 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற (யான்பிறந்த ஆண்டு) இந்தித் திணிப்பை எதிர்த்து ஏனைய அறிஞர்களுடன் சேர்ந்து போராடி இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தியவர், "ஆகாஷ் வாணி" என்று இந்தியில் அழைப்பதை நிறுத்தி, தமிழக வானொலி நிலையத்தில், அகில இந்திய வானொலி நிலையம், என்று ஒலிபரப்பப்பட வேண்டுமென்று போராடி அதில் வெற்றியும் பெற்றவர். தமிழில் சகல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர். சிறந்த சொற்பொழிவாளர், பல நூல்களை எழுதியவர். இவர்தான் தனது தொண்ணூறாவது ஆண்டு பூர்த்தியை தொண்ணூறு இடங்களில் கொண்டாடிய முத்தமிழ் வித்தகர் உயர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்.

1949 ஆம் ஆண்டு பெரியவர் செல்வாவும், கோப்பாய்க் கோமான் அமரர் கு. வன்னிய சிங்கமும், தமிழ்க் காங்கிரசின் இனத்துரோகத்தைப் பொறுக்க முடியாது, அதிலிருந்து வெளியேறி, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து, தமிழீழத்தில் நடக்கும் போராட்டங்களையும் அரசியல் திருப்பு முனைகளையும் ஆழ்ந்த அக்கறையுடன் அவதானித்து வந்திருக்கும் இத்தொண்ணூறு வயது இளைஞர் ஈழத்தில் தமிழரசுக் கட்சி மாநாடுகளிலும், கல்லூரிகள், கல்விமான்களின் கூட்டங்களிலும் ஏராளமாக உரையாற்றியுள்ளார்.

இதோ இன்றைய தமிழீழத்தளபதி திரு. வே. பிரபாகரன் பற்றி நராக போற்சமறிலையிலிருந்து சிறப்பாக 'வீர வேங்கை'க்கென அப்பெரியார் எழுதியுள்ள பொன்னோவியம் படியுங்கள்

— ஆர்

உலகில் அரபு மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை ஆறு கோடி. தமிழ் பேசும் தேசிய இனத்தின் (THE TAMILNATION ALL OVER THE WORLD) எண்ணிக்கையும் ஆறு கோடியாகும். அரபு மொழி பேசும் மக்களுக்கு இவ்வுலகில் இருபத்தி மூன்று நாடுகளும், ஐக்கிய நாடுகள் மன்றத்தில் அவற்றுக்கென்று இருபத்தியோரு நாடுகளும் உள்ளன. அதே எண்ணிக்கை உள்ள தமிழ் மக்களுக்கு எந்த ஒரு நாடும் சொந்தமானதாக இல்லை. ஐக்கிய நாடுகள் மன்றிலும் தமிழ்நாட்டுக்கென ஒரு நாற்காலியும் இல்லை. இதுபற்றி எண்ணி வருந்திக் கொண்டிருப்பவர்கள் நம்மில் பலர்.

அதற்கான எண்ணங்களை கோடிக்கணக்கில் எண்ணினோம். பேச்சுக்களை ஆயிரக் கணக்கில் பேசினோம். கொள்கைகளை நூற்றுக்கணக்கில் வெளியிட்டோம். திட்டங்களைப் பத்துக்கணக்கில் வகுத்தோம். ஆனால் நாம் செயலில் ஒன்றையாவது நாம் செய்யவில்லை.

ஒருறுப்பு அரசியலமைப்பு (UNITARY) கொண்ட ஜனநாயக நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மைத் தேசிய இனமக்கள் பேரினவாதிகளின் பிடியிலிருந்து விடுபட்டு வாழ பேரினவாத மக்கள் அரசு அனுமதிக்க மாட்டாது. ஏனெனில் எண்ணிக்கையில் பெரும்பான்மை இனம், தமது அதிக எண்ணிக்கையை வைத்துக் கொண்டு நிரந்தரமாகத் தேசிய சிறுபான்மையினர் மீது தங்கள் ஆட்சியையே திணிப்பார்கள்.

### (அறவழி முதலில்)

சிறுபான்மை இனத்தினர், தங்கள் கோரிக்கைகளை பெரும்பான்மையினரிடம் முறையிடுவார்கள், மனுப் போடுவார்கள். மகாநாடுகள் கூட்டுவார்கள். தீர்மானங்களைப் போடுவார்கள். சட்டசபையிலும் கூக்குரலிடுவார்கள். ஆட்சியாளரிடம் தூதும் செல்வார்கள்.

### வாழ்வா சாவா?

இவையொன்றும் பயன்படாத போது தேசிய சிறுபான்மை இனத்துக்கு வாழ்வா சாவா என்ற நிலை தான் ஏற்படும். அப்போது அவர்கள் மறப் போராட்டத்திலிறங்கி விட்டார்கள். உலகில் மக்கள் ஆயுதப் போரில் இறங்குவதற்கு இவைகளே காரணங்களாகும். இதே நிலை தான் இலங்கைத் தீவிலும் ஏற்பட்டுள்ளது.

**கிளம்பினான் ஒரு தமிழ் இளைஞன்! வீரனிலும் ஒரு மாவீரன்!! அவனே ஈழத்தின் வீரமகன் பிரபாகரன்!** ஆயுதங்களைச் சேகரித்தான், தன் வாழ்விடமாகிய தமிழீழத் தாயகத்தையும் தன் மொழியையும், தன் மக்களையும் காப்பாற்றிட ஆயுதப் போரைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினான். போரில் இறங்கி விட்டான். அவனுக்கு ஆரம்பத்தில் சில இளைஞர்கள் தோள் கொடுத்தனர். சிலர் பலராகி இன்று பல்லாயிரக்கணக்கானோராகி விட்டனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் உயிரையும், உடலையும் விடுதலைக்காக அர்ப்பணித்தனர்.

போர் நடைபெற்றது. (இன்றும் நடைபெறுகிறது) ஓராண்டு ஈராண்டல்ல, பல ஆண்டுகள். அவனை எதிர்த்து அடக்க முயன்ற அரசுகள் ஒன்றல்ல, இரண்டு. பெரும்பான்மை மக்களைக் கொண்ட சிங்கள அரசு பிரபாகரனோடு போராடி வெல்ல முடியவில்லை. இறுதியில் அவனோடு போர்நிறுத்தம் செய்ய வந்தது. பேச்சுவார்த்தைக்கும் அழைத்ததே தவிர சிங்கள அரசினால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனால் பிரபாகரன் அந்த அரசுக்குச் சரிசமமாக இன்று காட்சியளிக்கிறான்.



சீனாவையும், பாக்கிஸ்தானையும் போரிட்டு வென்ற இந்தியப் பேரரசு, பிரபாகரனை அடக்க எழுபத்தி ஐயாயிரம் போர் வீரர்களைத் தமிழீழத்துக்கு அனுப்பியது. இறுதியில் அவனை அடக்கவோ பிடிக்கவோ முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி வந்து கொண்டிருக்கிறது.

இதில் ஒரு அழகு. இந்த இரு அரசுகளுக்கும் நாடு உண்டு. படையுண்டு. ஆயுதங்களுண்டு. தங்குவதற்கு இடமும் உண்டு. உணவுண்டு. உடையுண்டு. பொருள் மற்றும் போர்க் கருவிகளுமுண்டு. தரைப்படையும், கப்பற்படையும், தரைப்படையுமுண்டு.

மேற்கூறியவற்றில் எதுவுமே இல்லாதது மட்டுமல்ல காலுக்கு மிதியடி கூட இல்லாது. உடம்பிற்கு நல்ல உடையுமில்லாது சிறுசிறு காடுகளிலும் புதர்களிலும் மறைந்து நின்று ஒரு நாள் அல்ல இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இரு அரசுகளோடும் போராடியிருக்கிறான் மாவீரன் பிரபாகரன்.



முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

இத்தகைய வீரன் ஒருவன், புறநானூற்றுக்குப் பிறகு இரண்டாயிரமாண்டுகளாக எவனும் தோன்றியதில்லை.

தம்பி பிரபாகரனின் செயல் சரியா தவறா என்று ஐயப்பட்டவரும் அவனது நோக்கம் நல்லதா கெட்டதா என்று ஐயப்பட்டவரும், அவன் அடையப் போவது வெற்றியா தோல்வியா என்று ஐயப்பட்டவருமுண்டு. ஆனால் அவன் ஒரு மாவீரன் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு ஏற்பட்டதில்லை.

அத்தகைய மாவீரன் பிறந்த நாளையொட்டி அறிஞர் கோவை மகேசன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'வீரவேங்கை' இதழ் ஓர் சிறப்பிதழாக நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது.

நியாயமான காரணத்தை முன்வைத்துப் போராடுகின்ற எவனும் வெற்றியை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதில்லை. அது அவனது காலடியில் தானே வந்து விழும் என்பது பேரறிஞர் ஒருவரின் நல்வாக்கு

இது மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், தம்பி பிரபாகரன் தமது இலட்சிய வெற்றிப்பதாகையை ஏந்திய படி போர் முனையிலிருந்து மீண்டு, பன்னெடுங் காலம் நல்ல உடல் நலத்துடனிருந்து, தமிழீழ நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் நற்றொண்டுகள் பல புரிந்து நல்வாழ்வு வாழ்கவென வாழ்த்துவதுடன், மாவீரன் பிறந்த நாளைக் கொண்டாடி, மலரை வெளியிட்டு, மகிழ்ச்சி அடைகின்ற "வீரவேங்கை" இதழ் இன்னும் விரிவடைந்து சிறப்பெய்தி ஒளி வீச வேண்டுமென முழு மனத்துடன் வாழ்த்துகிறேன்.



# ஒரே வழி ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக போராடுவதே!

தமிழீழத்தின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஈழத்தின் இன்றைய நிலை குறித்து எழுதிய கடிதத்தைக் கீழே தருகிறோம். அவரது பாதுகாப்புக் கருதி அவரது பெயர் இங்கு வெளியிடப்படவில்லை

—ஆர்

*"எமது நாடு இந்திய இராணுவத்தால் அணுஅணுவாகச் சிதைக்கப்பட்டு வருகிறது".*

இலங்கையில் இப்போது தினமும் சராசரி 40 படுகொலைகள் நடக்கின்றன. சாலை ஓரங்களில், கடற்கரைகளில், ஆறுகளில் மனித சடலங்களை சர்வசாதாரணமாகப் பார்க்க முடியும். இரவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கும், காலையில் எழுந்து பார்க்கும் போது சாலை ஓரங்களில் தலை, கை, கால்கள் வெட்டப்பட்ட நிலையில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட மனித சடலங்களைப் பார்க்க முடியும். அடையாளம் காண முடியாதவாறு அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில்—உறவினர்களால் உரிமை கோரப்படாத நிலையில் அப்பிரேதங்களை காகங்கள் கொத்துவதும் நாய்கள் இழுத்துச் செல்வதும் யாவரும் காணும் நிகழ்ச்சி.

இப்படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றோ அல்லது இவற்றைக் கண்டித்தோ யாரும் மூச்சு கூடவிட முடியாது. இவை பற்றி கருத்து கூறிய ஒரு சில புத்த ஜீவிகள் கூட பகிரங்கமாகக் கொல்லப்பட்டுள்ளனர், அல்லது சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். புத்த பிட்சுக்களைக் கூட சர்வசாதாரணமாக கொலை செய்யும் சூழ்நிலை இருக்கின்றதெனில் அப்பாவி மக்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ரஜனி திரணகம (நிர்மலா நித்யானந்தத்தின் சகோதரி) பட்டப்பகலில் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் ஒரு வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் செய்த குற்றம் யாதெனில், மனித உரிமைகள் மீறல் பற்றி வெளி உலகிற்கு தெரிவித்தமை; குறிப்பாக இந்திய ராணுவத்தின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியமை.

இவர் மாணவர்களிடத்தும் மக்களிடத்தும் மிகுந்த மதிப்பு பெற்றவர். சர்வதேச மனித உரிமைகள் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளுடன் சர்வதேச அளவிலும் தொடர்புகள் உடைய ஒரு விரிவுரையாளருக்கே இந்தக் கதி என்றால் சாதாரண அப்பாவி மக்களின் கதி எப்படி இருக்கும்? நீங்களே எண்ணிப் பாருங்கள்.

இந்நிலையில் மாணவர்கள் நிலைபற்றி முதலில் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். தென் பகுதிகளில் (சிங்களப்பகுதிகள்) கடந்த நாலு வருடங்களாக பல்கலைக்கழகங்கள் நடைபெறவில்லை. எல்லாம் மூடப்பட்ட நிலையில் உள்ளன. பாடசாலைகள் திறப்பதும், மூடப்படுவதும் என இருந்து கடந்த சில மாதங்களாக நிரந்தரமாக மூடப்பட்டு விட்டன.

தமிழ் ஈழத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் இயங்கி வந்தன. ஆனால் இவற்றுக்கும் இப்போது ஆபத்து வந்து

மக்கள் தொண்டர் படைக்கு (CVF) கட்டாயமாக மாணவர்களைப் பிடிப்பதால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை. இந்திய ராணுவத்தின் கைக்கூலிகளால் பிடித்துச் செல்லப்படும் மாணவர்கள், இளைஞர்களைக் கொண்டு உருவாக்கப்படும் 'தொண்டர்படை' ஒரு பயங்கரவாதக் கும்பலாக உருவாக்கப்படுகிறது. I.P.K.F. இந்தியா திரும்பினாலும் கூட அதன் அட்டூழியங்களைத் தொடர்ந்து செய்வதற்குத் தான் இந்த 'தொண்டர்படை' 30 ஆயிரம் பேரைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.



# இந்திய ராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட இளைஞர்கள்

மாணவர்கள் மட்டுமல்ல அனைத்து தரப்பு மக்களும் கஷ்டப்படுகின்றனர். தமிழ் விவசாயிகளைப் பொறுத்தவரையில் இரு பிரிவினராகப் பிரிக்கலாம். ஒன்று நெற்பயிர்ச் செய்கை செய்வோர், மற்றது வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவுப் பயிர்ச் செய்கை செய்வோர். இந்த இரண்டு பேருமே இப்போது பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் கடந்த பல மாதங்களாக மின்சாரம் இல்லை. இதனால் நீர் பாய்ச்சுவது கடினம். போக்குவரத்து கஷ்டம்; எடுத்துச் செல்வது, அங்கு நல்ல விலைக்கு விற்பது எல்லாமே முடியாத காரியம்.

அரசாங்க, தனியார் ஸ்தாபனங்களில் வேலை செய்வோர் வேலைக்குச் செல்வதே மிகவும் கஷ்டம். ஏனெனில் பஸ் போக்குவரத்து ஒழுங்காக இல்லை. மேலும் மாலை 4 மணியுடன் சகல போக்குவரத்தும் நின்று விடும். எனவே அதற்குள் திரும்பி வந்து விட வேண்டும். அத்துடன் ஒவ்வொரு முகாமும் கடக்கும்போது இறங்கி நடக்க வேண்டும். அப்போது இந்திய ராணுவம் தரும் அடியை வாங்கிக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

ஒருமுறை எனது ஊரில் தாக்குதல் ஒன்று நடந்த போது நான் வீட்டில் இருந்தேன். புலிகள் சுட்டதில் ஒரு இந்திய இராணுவத்தான் செத்தான். புலிகள், செத்த இந்திய இராணுவத்தானின் S.L.R துப்பாக்கியையும் எடுத்துச் சென்று விட்டனர். புலிகளைப் பிடிக்க முடியாத இந்திய ராணுவம் சிறிது நேரத்தில் எமது ஊரைச் சுற்றிவளைத்தது. வீட்டில் இருந்த ஆண்கள் அனைவரையும் ஊரின் நடுவில் உள்ள சந்திக்கு அழைத்துச் சென்றனர். அழைத்துச் செல்வது என்பது ஏதோ மரியாதையாக கூட்டிச் செல்வார்கள் என்று நினைக்கிறீர்கள்.

அவர்கள் கையில் இருக்கும் துப்பாக்கிகள், மரக்கட்டைகள் ஆகியவற்றால் தரப்படும் அடி, உதைகளை வாங்கியே செல்ல வேண்டும். கூட்டிச் சென்ற ஆண்களில் சிறு காயம் கூட இல்லாமல் ஒருவரும் தப்பி வர முடியாது.

அழைத்துச் செல்லப்படும் போது, சந்தியை நெருங்கும் போது நாம் நடந்து செல்ல முடியாத நிலை. சுவாமிக்கு அங்கப் பிரதட்சணை செய்வது போன்று நடுவீதியில் உருண்டு செல்ல வேண்டும். இதில் கொடுமை என்னவென்றால் சில வேளைகளில் எமக்கு அருகில் எமது அண்ணன், தம்பி மட்டுமல்ல, எமது வயதான தந்தையும் உருண்டு வருவார். ஊரில் மதிப்பான ஆசிரியர்களும் மாணவர்களும் முன் அடி வாங்குவார்கள். மாணவர்களுடன் சேர்ந்து உருளுவார்கள். இது மட்டுமல்ல உருண்டு சென்று இடத்தை அடைந்தவுடன் மிக நெருக்கமாக நடுவீதியில் அனைவரும் உட்கார வைக்கப்படுவர்.

ஆரம்பத்தில் சித்திரவதைகள் மட்டுமே நிகழ்ந்தன. ஆனால் இன்று சித்திரவதை மட்டுமல்ல; உயிர்கொலைகள் கூட சர்வசாதாரணமாக நிகழ்கின்றது. அண்மையில் நடந்த வல்வெட்டித்துறை, பருத்தித்துறை சம்பவங்களே இதற்கு உதாரணங்கள்.

வல்வெட்டித்துறையில் சந்தை அருகில் ரோந்து சென்ற இந்திய ராணுவம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 6 வீரர்கள் உயிரிழந்தனர். புலிகள் எவ்வித இழப்புமின்றி இருந்த வீரர்களின் துப்பாக்கிகளையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டனர்.

சிறிது நேரத்தில் அனைத்து முகாம்களிலும் இருந்து வந்த இந்திய இராணுவம் தொடர்ச்சியாக 3 நாள் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி தனது கோர முகத்தை வெளிப்படுத்தியது. தியேட்டரில் படம்பார்த்துக் கொண்டிருந்த 36 பேர் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டு அடையாளம் தெரியாதபடி முகத்தில் 'பெற்றோல்' ஊற்றிக் கொளுத்தப்பட்டனர். கிட்டத்தட்ட 75 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பல வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. மனித உடல்கள் பல நாட்களாக வீதியோரங்களில் கிடந்தன. அயல் ஊர் மக்களைக் கொன்று அவற்றை எடுத்த அருகில் வெட்டிப் புதைத்தனர். பலர் பயத்தில் அருகிலுள்ள இலங்கை ராணுவ முகாமுக்குள் ஓடி தஞ்சம் புகுந்தனர்.

அப்போது இலங்கை ராணுவ அதிகாரி மக்களிடம் "தயவு செய்து இங்கு யாரும் இருக்க வேண்டாம். உங்களை இங்கு தங்க வைத்தால் எங்கள் மீது தாக்குதல் தொடுப்பார்களாம். எனவே எமக்கு பயமாய் இருக்கின்றது. தயவு செய்து அனைவரும் உடன் வெளியேறுங்கள்" என்று கெஞ்சினார்.

இதனால் அனைவரும் அங்கிருந்து வெளியேறி அருகிலுள்ள கோயிலில் தஞ்சம் புகுந்தனர்.

சம்பவம் நடந்த அன்று நல்ல மழை. இதனால் சந்தியில் எங்கும் சகதியான நிலை. (நீரும் சேறும் கலந்த நிலை) இதற்கு மேல் சுமார் ஆறு மணித்தியாலங்கள் உட்கார வைக்கப்பட்டோம். குளிர் அதிக நேரம் இருந்ததால் கை கால் எல்லாம் விறைத்து விட்டது.

சிறு அசைவு ஏற்பட்டால் கூட அந்த இடத்தில் உள்ள அனைவருக்கும் பூட்ஸ் காலால் நெஞ்சில், வயிற்றில் உதை கிடைக்கும். எனவே எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருந்தோம். ஆறு மணித் தியாலம் கழிந்து உயர் அதிகாரி ஒருவர் வந்தார். அவர் சிறு பிரசங்கம் நடத்தினார். *"எங்களை யாரும் வெல்ல முடியாது. நாங்கள் உலகில் பெரிய ராணுவம். எனவே இதைப் போய் புலிகளிடம் சொல்லுங்கள். இனிமேல் புலிகள் ஏதாவது செய்தால் உங்களுக்கு இதுதான் கிடைக்கும். எங்களை யாரும் கேட்க முடியாது. நாங்கள் நினைத்தால் உங்களைப் பூண்டோடு ஒழிப்போம்"* என்று பேசினார். இறுதியில் ஆங்கிலத்தில் ஆபாசமாக ஏசினார். அதன் பின் தான் ஆங்கில வார்த்தைகளில் ஏசியதை தமிழில் *"தந்தை இல்லாத மக்களே"* என்று மொழி பெயர்த்து ஏசினார்.

வேறு ஒரு நேரம் என்றால் இதைக் கேட்டு கொதித்து எழக் கூடிய இளைஞர்கள் எல்லாம் இப்போது வேறு வழி எதும் தெரியாத வெறும் முணுமுணுப்பை மட்டும் வெளியிட்டனர்.

உயர் அதிகாரி ஏசிய பின்பு எல்லோரும் வரிசையாக பொம்மை முன் நிறுத்தப்பட்டோம். (பொம்மை என்பது இராணுவத்திற்கு ஆட்களைக் காட்டிக் கொடுப்பதற்காக முகமூடி போட்டு வைக்கப்பட்டிருக்கும் கைக்கூலிகள் ஆகும்) பொம்மை சில இளைஞர்களைப்

இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு உடன் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மீதி பேர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

அப்போது அங்கு வந்த இந்திய இராணுவம் மக்கள் இலங்கை ராணுவ முகாமுக்குள் சென்று தஞ்சம் புகுந்த ஆத்திரம் தாங்க முடியாமல் அம்மக்களை கொடுமையாக வதைத்தது.

இன்னொரு சம்பவம். பருத்தித்துறை சம்பவம். இந்திய இராணுவ முகாம்களுக்கிடையிலான தொடர்புக்குப் பயன்படும் டெலிபோன் வயர்களை புலிகள் அறுத்து எரிப்பதுண்டு. இதனால் எரிச்சலடைந்த பருத்தித்துறை இந்திய ராணுவம் ஒரு நாள் டவுனுக்கு வந்து திடீரென மக்களைச் சுற்றி வளைத்து கண் மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றது.

பலருடைய வாய்க்குள் துப்பாக்கியை வைத்து மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றது. 11 பேர் ஸ்தலத்திலேயே இறந்தார்கள். பலர் படுகாயமடைந்தார்கள். பலருக்கு கை, கால்களை வெட்டி நீக்கும் படியாக ஆனது. இறுதியில் டவுனிலிருந்த வீடுகள், கடைகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. வயர்களை அறுத்த புலிகளைப் பிடிக்க முடியாத இந்திய இராணுவம் அப்பாவி மக்களுக்குக் கொடுத்த பரிசு இது.

இந்திய இராணுவத்தைப் புரிந்து கொள்ள இறுதியாக இன்னுமொரு சம்பவத்தைக் கூறுகின்றேன். இச்சம்பவம் மந்திகைக்கு அருகில் துன்னாலையில் நடந்தது.

கடை வைத்து மரக்கறி வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒரு பெண் ரோந்து சென்ற இந்திய இராணுவத்தால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அப்போது மகளைக் காப்பாற்ற ஓடிச்சென்ற தாய் சுட்டுக் கொல்லப்பட்டார். தாய்க்குப் பின்னால் ஓடிச்சென்ற வயோதிக மூதாட்டியும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாலு ராணுவத்தினரால் மாற்றி மாற்றி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண் பின் சுட்டுக் கொல்லப்பட்டார். இம்மூன்று பெண்களின் பிரேதங்களையும் ஏற்றிச் சென்ற காரும் மறிக்கப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல அனுமதித்தால்

# புறநானூற்றைப் புரட்டினால், அங்கே, எங்கள் தளபதி பிரபாகரன்!



- பேராசிரியர் சாலை இளந்திரையன்

பல தமிழர்கள் மறந்துவிட்ட ஒரு புத்தகம் பழந்தமிழரின் வீரப்பெட்டக மாகிய புறநானூறு தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவையுண்டு, தான் உண்டு, என்ற சின்னதொரு கடுகு போல் உள்ளம் கொண்ட சிறியவர் களாகிப் போனவர்களின் குருதி ஓட்டத்தில் வீர உணர்ச்சி முழுமையாக விடுபட்டுப் போய்விட்டது. போகவே, புற நானூறு போன்ற வீர எழுச்சிப் புத்தகங்கள் அவர்களுக்குத் தேவையில்லை. என்னைப் பொறுத்த வரை, 'வீரமே தமிழினத் தின் உயிர் மூச்சு. அது இருக்கும் வரையில் தமிழன், தன் இனமானம் காக்கும் தமிழ் மனிதனாக வாழ்கிறான். அதைத் துறந்து விட்ட உடனேயே, அவன் வெற்றுடம்பாக வீழ்ந்து போகி றான். எனவே, தமிழ் இன வழித்தோன்றலாகிய எனக்கு, வீரக் கனல் ஏற்றும் புறநானூறு அடிப்படைத் தேவைகளையும் மிஞ்சிய ஓர் உயிர்த்தேவை. அதைப் படிக் கிறேன், அடிக்கடி படிக்கிறேன்.

### ஒளியுடைய ஒருவன்!

ஒருநாள் அந்த வீர ஏட்டின் இதழ்களைப் புரட்டிக் கொண்டு இருந்த போது, தமிழ் ஈழ விடுதலை மறவன் வே. பிரபாகரனைப் பற்றிய ஒரு பாட்டு, அப்போதே, அந்தப் புத்தகத்தில் வைர வரிகளால் வரையப்பட்டிருப்பது கண்டு வியப்படைந்தேன்! வீரம் என்பது காலம் கடந்தது. அது எப்போதும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது. அதை வெளிப்படுத்தும் வீரனைப் பற்றிய நெருப்புவரிப் பாட்டும், அன்றும் இன்றும் என்றும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது! 3000 ஆண்டுகளுக்கு முன்பே, இந்தப் பிரபாகர மறவனை முன்னுணர்ந்து புறநானூற்றுப் புலவன் பாடிய (புறம் 309 ஆம்) பாடல் இது. ஒரு போர்வீரன் தன்னுடைய வீரத் தளபதித் தலைவனைப் பற்றிச் சொல்லும் பாடல்.

*இரும்பு முகம் சிதைய நூறி*
*ஒன்னார் இருஞ்சமம் கடத்தல்*
*ஏனோர்க்கு எளிதே*
*நல்லரா உறையும் புற்றம் போலவும்*
*கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்*
*மாற்றருந் துப்பின் மாற்றோர்*
*'பாசறை உளன்' என*
*வெருஉம் ஓர் ஒளி*
*வலன் உயர் நெடுவேல் என்னைக் கண்ணதுவே!*

மற்றுள்ள புகழ்வாய்ந்த வீரர்களோடு தன் தலைவனை ஒப்பிட்டுப் பார்க்கிறான் இந்தப் போர்வீரன். அந்த வீரர்களும் களம் பல கண்டு காளைகளே. பல போர்முனைகளில் மாற்றாரை வென்று ஆர்ப்பரித்த மறவர்களே. ஆனாலும், இவனுடைய தலைவனுக்கு இருக்கின்ற ஒரு புகழ் அவர்களில் யாருக்கும் கிடைத்ததில்லை, கிடைத்ததாக அவன் கேள்விப்பட்டதில்லை.

அது என்ன என்றால் அந்த மறவர்களை எதிர்த்து அவர்களின் பகைவர்கள் போர் புரிவார்கள், தோல்வி யடைவார்கள், இவர்கள், வெற்றி பெற்றுக் களிப்படை வார்கள். எனினும் அவர்களில் எவர் ஒருவரைக் கண்டும், பகைவர்கள், முன்வந்து போரிடாமல் முதுகு திருப்பி ஓடியதில்லை.

இவனுடைய தலைவனின் நிலையோ முற்றிலும் வேறுபட்டது. முழுமையான உயர்வு பெற்றது! இவனுடைய எதிரிகள் இவனிடம் போருக்கு வந்து தோல்வி அடைய வில்லை. போருக்கு வராமலே அவர்கள் தோல்வி அடைந்து போகிறார்கள்.

காரணம் இவன் பாசறையில் இருக்கிறான் என்றாலே ஒரு விதமான நடுக்கம் அவர்களின் உள்ளத்தில் கொடுக்காகக் கொட்டத் தொடங்கி விடுகிறது. அவன் போருக்கு வந்திருக்கிறானா? பாசறையிலே இருக்கிறானா? அவன் வந்து இருக்கிறான் என்றால், நம் கதி அதோகதிதான்! என்று அவனை நேரில் பார்ப்பதற்கு முன்பே, அஞ்சி நடுங்கி அலமருகிறார்கள்.

இதுதான் பகைவரை வெல்லுகின்ற மற்ற வீரர்களுக்கும் இவனுடைய தலைவனாகிய அந்த மாவீரனுக்கும் உள்ள வேறுபாடு. இவன் பாசறைக்கு வந்திருக்கிறான் என்றாலே, இந்தப் பாசறையை "நல்லரா உறையும் புற்றம் போலவும் கொல்லேறு திரிகரு மன்றம் போலவும்" கருதி அஞ்சிப் பதைபதைக்கிறார்கள். அந்த எதிரிகள். அதாவது அவன் இருக்கிற பாசறையை நினைத்தால், நல்ல பாம்பு வசிக்கிற பயங்கரமான புற்றும், யாரையும் குத்திக் கொல்லுகிற கூரிய கொம்புகளோடு முரட்டுக் காளை ஒன்று வலம் வருகிற ஊர்ப் பொது இடமும்தான் அவர்களுக்கு நினைவுக்கு வருகின்றன. அவன் இருக்கிற பக்கம் நெருங்கி நடக்கவே அவர்கள் அஞ்சுகிறார்கள்!

வள்ளுவத்தலைவன் ஒருவன், தன்னுடைய வீரத்தைக் குறித்து (குறள் 1088) 'ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு' என்று சொல்லிப் பெருமிதமடைகிறான். இவனை நினைத்தால், இவனோடு மோத முடியாது என்பது மட்டுமல்ல, நினைத்த மாத்திரத்திலேயே ஓர் அச்ச நடுக்கமும் அவனுடைய எதிரி களுக்கு உண்டாகிறது. சற்றேறக்குறைய இதே நிலையில் தான் புறநானூற்று வீரனையும் அவனுடைய படைமறவன் காண்கிறான்.

### புகழ் ஒளி புதுக்கிய பிரபாகரன்

**இந்த செய்திகளை நினைக்கும் போது தமிழ் ஈழத் தளபதி, தம்பி -பிரபாகரன் தான் நம்முடைய நினைவிலே எழுந்து நிற்கிறான்.**

தமிழ் வரலாறு பல்லாயிரம் போர் மறவர்களைச் சந்தித் திருக்கிறது. அவர்களில் சில நூறு பேர்களாவது தத்தம் அளவில் இணை சொல்ல முடியாத தறுதண்மையாளர் களாக விளங்கியவர்களே. இவர்களைப் பாராட்டும் நடுகற் களும், கல்வெட்டுக்களும், புகழ்ச்சிப் பாட்டுக்களும் வெகு தாராளமாகவே உள்ளன. இடைக்காலத்திலே கூட, கங்கை கொண்டவன் என்றும் கடாரம் வென்றவன் என்றும் களப் பிரர் இருட்டைக் களைந்தெறிந்தவன் என்றும் பலபேர் இருந்திருக்கிறார்கள். இத்தனை பேர் ஆட்சி செய்து மாட்சி கள் விளைவித்த பின்னும் தமிழ் இனத்தின் தனிப்பெரிய வீரப்புகழ் உலகின் மற்றப் பகுதிகளில் சென்று படர்ந்து நிலைக்கவில்லை.

வெகு தொலைவில் உள்ள நாடுகளிலே மட்டுமல்ல, இந்தியாவில் விந்தியமலைக்கு வடக்கே உள்ள நிலப்பரப்பிலே கூடத் தமிழர்கள் தமிழர்களாக அறியப்பட்டிருக்கவில்லை. (இன்றைக்கும் வட இந்தியாக்காரர்கள் தமிழகத்துத் தமிழர்களை மதராசிகள் என்ற பெயரிலேயே அழைக்கிறார் கள்!- மாண்புயர்ந்த தமிழ் மொழி ஒன்று உள்ளது என்பதையே, மேலை நாட்டுப் பாதிரிமார்கள்தான் கண்டெடுத்து உலகுக்குச் சொல்ல வேண்டியிருந்தது- அந்த அளவுக்கு, தமிழினத்தின் இறங்குமுக வரலாறு தாழ்ந்து தாழ்ந்து தரைதட்டிக் கிடந்தது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் இனம் என்ற ஒரு மக்கட் கூட்டம் இருக்கிறது என்கிற செய்தி உலக மக்களில் 100க்கு 99 பேருக்குத் தெரியாமலே இருந்தது- அண்மைக் காலமாக இங்கே ஆட்சிக் கட்டிலுக்குப் போட்டி போட்ட கட்சிக்காரர்கள், படுகேவலமான இந்தப் பச்சை உண்மையை மறந்துவிட்டு, புரட்சிக்கவிஞர் சொன்னது போல, "தோளிலே மிடுக்காம்? அவர் தொழுவதோ வடக்காம்!" என்ற பாணியிலேயே செயல்பட்டுக் கொண்டு திரிந்தார்கள். திசைகெட்ட இந்தத் திரிவின் விளைவாக, பல்லாயிரம் ஆண்டுகளாக மங்கிக் கொண்டு வந்த தமிழரின் இனமானம் இருளடைந்தே போய்விட்டது.

அந்தப் பெரிய இருட்டைக் கிழித்துக் கொண்டு கிழக்கிலே எழுந்தான் ஒரு மாத்தமிழ் மறவன். அவன்தான் பிரபாகரன், ஈழத் தமிழரின் விடுதலைப் போர்முனையை வெற்றித் திசையில் நடத்திவரும் தமிழர் தளபதி பிரபாகரன்!

சற்றே எண்ணிப் பாருங்கள், தாய்த் தமிழகத்திலே விடுதலை உணர்வு அநேகமாகப் புதைக்கப்பட்டுப் போன

(17.ஆம் பக்கம் பார்க்க)



## மனித உரிமைக்கு வாதாடிய விரிவுரையாளர் படுகொலை

வாழ்க்கை என்பது எங்க ளுக்கு கனவாகி விட்டது. அந்தக் கனவிலிருந்து அன் றாடம் வெடிச் சத்தங்களே எம்மை விழிக்கச் செய்கின் றன.

'எமது நாட்டில் நேரம் பிணங்களின் எண்ணிக்கை யைக் கொண்டுதான் கணக் கிடப்படுகிறது. இப்போது நேரம் பன்னிரண்டு ஆக இன்னும் அய்ந்து மரணங்கள் உள்ளன— இப்போது நேரம் நான்கு கழித்து முப்பது பிணங்கள் ...'

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி போராட்டம் நடத்திக் கொண்டிருந்த மாணவர்கள் கையில் ஏந்திப் பிடித்திருந்த முழக்க அட்டைகளின் வாசகங்களில் சில இவை. மாணவர்கள் போராட்டம் எதற்காக?

யாழ் மருத்துவமனைப் பீடத்தின் விரிவுரையாளர் டாக்டர் ரஜனி திரானகம செப்டம்பர் 21 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். ரஜனி திரானகமவின் படு கொலைக்கு கண்டனம் தெரி வித்தே யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர்.



டாக்டர் ரஜனி திரானகம பல ஆண்டுகளாக மருத்துவ பீட உடற்கூற்றியல் துறையில் ஒரே விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் இருந்து வந்தார்.

சமூக உணர்வு கொண்ட டாக்டர் ரஜனி வெறும் விரிவு ரையாளராக மட்டுமின்றி பாதிக்கப்பட்ட பெண்களின் புனர் வாழ்வுக்காகவும் பாடு பட்டார். பல்கலைக் கழக ஆசிரியர்கள் மத்தியில் மனித உரிமைகளை நிலை நாட்டுவதற் கான போராளியாக விளங்கி னார். சமீபத்தில் இலங்கையில் நடந்து வரும் நிகழ்வுகளைப் பற்றி குறிப்பாக இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் அட்டூழியங்கள் பற்றி, உடைந்த பனை மரங்கள் (Broken Palmyrah) என்ற தலைப்பில் நூலாக வெளியிட் டார்.

சுற்றிலும் நடக்கும் நிகழ் வுகளைக் கண்டு வாளாவிரா மல், மனித உரிமைகளுக் கான பல்கலைக்கழக ஆசிரி யர் சங்கத்தை உருவாக்கி இலங்கையில் மனித உரிமை கள் மீறலை தொடர்ந்து உலகுக்கு வெளிக்காட்டிய டாக்டர் ரஜனி திரானகம

(17.ஆம் பக்கம் பார்க்க)

# ஐந்து உலக விடுதலை வீரர்களின் ஒருமித்த பலம் கொண்டவர் பிரபாகரன்! தம்பியின் தலைமையில் தமிழீழம் மலரட்டும்!

20 ஆம் நூற்றுண்டில் தமிழினத்தின் பெருமையைத் தமது தியாகத்தினுலும், வீரத்தினுலும் உயர்த்திய சிறப்புக்குரிய தமிழர்கள் விரல்விட்டு எண்ணத்தக்கவர்கள் மட்டுமே.

இந் நூ ற் ரு ண் டி ன் தொடக்கத்தில் மாவீரன் செண்பகராமன் கடல் கடந்து ஐரோப்பாவிற்குப் போய் ஜெர்மானிய நாட்டில் இந்திய சுதந்திரக் கொடியை உயர்த்தினுன். இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராட அன்னிய மண்ணில் முதன்முதலாக ஒரு இராணுவத்தையும் அமைத்த பெருமை இவனுக்கே உண்டு. உலகையே நடுநடுங்க வைத்த சர்வாதிகாரி ஹிட்லரிடம் நெஞ்சை நிமிர்த்திப் பேசிய பெருமைக்குரிய தமிழன் இவன் ஒருவனே. அந்த செண்பகராமன் சாதிக்க முடியாத மாபெரும் சாதனையினை அவனுக்குப் பின்னுல் அரை நூற்றுண்டு காலம் கழித்து சாதித்துக் காட்டிய பெருமைபிரபாகரனுக்கு உண்டு.

வெள்ளையனை விரட்டியோட்ட வங்கக்கடலில் விடுதலைக் கப்பலை மிதக்கவிட்டப் பெருமைக்குரியவர் வ.உ. சிதம்பரனுர். சிறையில் செக்கிழுக்க நேர்ந்த போதிலும் சித்தம் கலங்காத தியாக வாழ்க்கை அவரது வாழ்க்கை. தமிழ் நாட்டில் தேசபக்திக் கனலை மூட்டிய தமிழன் அவர். ஆனுலும் தமிழர்கள் ஈரவிறகாக இருந்தனர். எனவே தமிழர்களைத் தட்டியெழுப்பி வெள்ளையருக்குஎதிராக வீரப்போராட்டத்தில் ஈடுபடச் செய்யும் பணியில் தியாக சீலர் சிதம்பரனுரும் முழுமையான வெற்றி பெற்றுரில்லை. செக்கிழுத்த செம்மலால் சாதிக்க முடியாததை அரை நூற்றுண்டு காலம் கழித்து தமிழீழ மண்ணில் சாதித்துக் காட்டிய பெருமைக்குரியவர் பிரபாகரன்.

தொலைதூர தென்னாப்பிரிக்காவில் வெள்ளையரின் அடக்கு முறையை எதிர்த்து உயிர்த்தியாகம்செய்யும் துணிவினை ஒரே ஒரு தில்லையாடி வள்ளியம்மைக்கு மட்டுமே ஊட்ட காந்தியடிகளால் முடிந்தது.

கொங்குநாட்டில் திருப்பூர் மண்ணில் தடியடிக்கு ஆளானபோதிலும் கொடியை உயர்த்திப்பிடித்து தீரமுடன் போராடி வரலாற்றில் என்றும் அழியாத காவியம் படைத்த ஒரே ஒரு திருப்பூர் குமரனை மட்டுமே காந்திய யுகம் தமிழகத்தில் ஈன்றெடுத்தது.

சிங்கப்பூர் மண்ணில் இந்தியாவின் சுதந்திரக் கொடியை நேதாஜி உயர்த்திய போது அவருடன் அணிவகுத்து நின்று வெள்ளையருக்கு எதிராக ஆயுதம் தூக்கிய பெருமை ஜெனரல் அழகப்பன், கர்னல்லோக நாதன், காப்டன் இலட்சுமி போன்ற ஆயிரமாயிரம் தமிழருக்கு உண்டு. ஆனுலும் தாயக மண்ணில் வெற்றி நடைபோட அவர்கள் கண்டகனவு நனவாகவில்லை.

ஆனுல் ஆயிரமாயிரம் செண் பகராமன்களையும், சிதம்பரனுர்களையும், தில்லையாடி வள்ளியம்மைகளையும், திருப்பூர் குமரன்களையும், காப்டன் இலட்சுமிகளையும், கர்னல் லோகநாதன்களையும், ஜெனரல் அழகப்பன்களையும் தமிழீழத் திருமண்ணில் உருவாக்கிய பெருமையும், தாயக மண்ணில் வெற்றி நடை போட வைத்த பெருமையும் பிரபாகரனுக்கு உண்டு.

மாவீரன் செண்பகராமன் கண்ட கனவினை நனவாக்கி தமிழர்களை மட்டுமே கொண்ட விடுதலைப்புலிப்படையை உருவாக்கி, கொடிய சிங்கள இராணுவத்தை மட்டுமல்ல உலகின் ஐந்தாவது இராணுவமான இந்திய இராணுவத்தையும் களத்தில் நேருக்குநேர் சந்தித்துப் போராடும் நெஞ்சுத்துணிவு பிரபாகரனுக்கு மட்டுமே இருந்தது.



மகாத்மா காந்தியடிகள் உண்ணு நோன்பு என்னும் வலிமை வாய்ந்த ஆயுதத்தினைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பல முறை பணிய வைத்தார். ஆனுல் காந்தியடிகளை தேசத் தந்தையாகக் கொண்ட இந்தியாவின் அரசு செய்த வஞ்சனைக்குஎதிராக அதே உண்ணு நோன்பு ஆயுதத்தை பிரபாகரனின் படையில் ஒருவனுன திலீபன் பயன்படுத்தினுன்.



பழ. நெடுமாறன் எம்.ஏ.,
தலைவர், தமிழ் தேசிய இயக்கம்

பிரிட்டன் ஏகாதிபத்திய அரசானுலும் சத்திய வேட்கைக்கு அடிபணிந்தது. ஆனுல் 'சத்தியமேவ ஜெயதே' என முழங்கும் இந்தியாவின் சற்புத்திரர்கள் திலீபன் என்ற சத்திய தீபத்தை அணைத்தனர். இதன்மூலம் பிரபாகரன் யார் என்பதும், ராஜீவ் யார் என்பதும் உலகிற்கு வெட்ட வெளிச்சமாயிற்று.

இரண்டாண்டு காலமாக இந்திய அரசின் தொலைக்காட்சி, வானெலி, ஆதரவு பத்திரிகைகள் இவற்றின் மூலம் பிரபாகரனுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிராகச் செய்யப்பட்ட பொய்ப்பிரச்சாரங்களை தன்னுடைய செயலாற்றலால் தவிடு பொடியாக்கியவர் பிரபாகரன். இவற்றுக்கெல்லாம் அச்சாரம் வைத்தது போல பிரபாகரன் மாண்டார் என பொய்ச் செய்தியை இந்திய அரசு பரப்பியது. இச்செய்தியைக்கேட்டு தமிழகம் எப்படியெல்லாம் குலுங்கியது என்பதைப் பார்த்த போது இந்திய அரசு மிரண்டது. தமிழகத்தின் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களில் வாழும் பாமர மக்கள் கூடி பிரபாகரனை எந்த அளவுக்கு நேசிக்கிருர்கள் என்பது அப்போது புலனுயிற்று.

சிங்களப் பேரின வாதியான பிரேமதாசா புலிகளுடன் பேச முன் வந்தது ஏன்? என்ற கேள்விக்கு விடைகாண முயன்றபோது ஒரு மகத்தான உண்மை அனைவருக்கும் புரிந்தது. இரண்டாண்டு காலம் முயன்று பார்த்தும்கூட இந்திய இராணுவத்தினுலேயே பிரபாகரனை வீழ்த்த முடியவில்லை என்பதைக் கண்ட சிங்கள மக்களே ஒரு பெரிய தேச பக்தனுகவும் வீரனுக பிரபாகரனை கருத தொடங்கினுர்கள். அதன் விளைவே பிரேமதாசாவின் போக்கில் ஏற்பட்ட மனமாற்றம் ஆகும் என்பதை உலகம் உணர்ந்தது.

தமிழர்கள் என்று சொன்னுல், கோழைகள், நல்ல கொத்தடிமைகள் என உலகம் முழுவதும் நம்மை அவமதித்து அலட்சியப்படுத்திக் கொண்டிருந்தபோது தமிழர்கள் எத்தகைய வீரமிக்கவர்கள் என்பதைத் தமது செயற்பாட்டினுல் நிரூபித்துக் காட்டினுர் பிரபாகரன். இதன் விளைவாக உலகம் முழுவதும் தமிழர்கள் என்ருல் ஒரு பெரும் மரியாதை ஏற்பட்டிருக்கிறது. தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது.

மாவீரன் செண்பகராமனின் தொலை நோக்குப் பார்வையும், அஞ்சா நெஞ்சமும், வ. உ. சிதம்பரனுரின் தியாக உணர்வும், தில்லையாடி வள்ளியம்மையின் துன்பம் தாங்கும் மன உறுதியும், திருப்பூர் குமரனின் சாவை சந்திக்கும் துணிவினையும் ஒருங்கே பெற்றவராகத் திகழுகிருர் பிரபாகரன்.

தமிழ்த்தாய் 'ஒராயிரமாண்டு தவமிருந்து பெற்ற வாராது வந்த மாமணியாக அவர் திகழுகிருர்.

வீரமே ஆரமாகவும், தியாகமே அணியாகவும் பூண்ட 'தம்பி' பிரபாகரனுக்கு உலகத் தமிழினம் பல்லாண்டு! பல்லாண்டு கூறுகிறது! வாயார! நெஞ்சார வாழ்த்தி மகிழுகிறது.



# ஈரோசினருக்கும் 'ரா' ஆயுதப்பயிற்சி!

**அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்திய இராணுவத்தினர் வெளியேறிய சில முகாம்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ், டெலோ, ஈ.என்.டி.எல்.எவ் கூலிப்பட்டாளங்கள் தமது முகாம்களை அமைத்துக் கொண்டதைப் போல ஈரோஸ் இயக்கத்தினரும் தமது முகாம்களை அமைத்துள்ளனர்.**

அத்தகைய முகாம் ஒன்றிலிருந்து ஈரோஸ் உறுப்பினர்களில் இருவர் 21.11.89 அன்று ஆயுதங்களுடன் வந்து எம்மிடம் சரணடைந்துள்ளனர். அவர்கள் இருவரும் தெரிவித்த தகவலின்படி இந்திய உளவு நிறுவனமான 'ரா' வை (RAW) சேர்ந்த சில அதிகாரிகள் ஈரோஸ் உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சியை வழங்குவதுடன் பெருமளவு ஆயுதங்களையும் கொடுத்துள்ளனர்.

இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்குத் தடையாக இருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க தன்னுலான முழு முயற்சிகளையும் இந்திய அரசும் அதன் நாசவேலை நிறுவனமான 'ரோ' அமைப்பும் செய்துவருவது அனைவரும் அறிந்ததே.

பெருந்தொகையான தனது படைகளைப் பயன்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க இந்திய அரசு எடுத்த முயற்சிகள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் எமது மண்ணில் குழப்ப நிலையை உருவாக்குவதற்காக சிறிய சிறிய ஆயுதக் குழுக்களை உருவாக்கி அவற்றிற்கு பயிற்சியளித்து ஆயுதங்களை வழங்குகின்றது. பின்னர் ஒரு ஆயுதக்குழுவைத் தூண்டிவிட்டு தமிழீழ மக்களின் ஓர் அங்கமான முஸ்லிம்களை படுகொலை செய்வித்திருக்கின்றது. அதே சமயம் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களிடையேயும் ஆயுதக்குழுக்களை உருவாக்கி பழிவாங்கும் படுகொலைகளில் ஈடுபடுமாறு அவர்களைத் தூண்டிவிடுகின்றது. இதன் மூலம் தமிழ் பேசும் மக்களிடையே குழப்பத்தையும், மனக் கசப்பையும், பகைமை உணர்வையும், கலவரங்களையும் தூண்டி வருகின்றது.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் 42 முஸ்லிம்கள் இந்திய அரசின் கைக்கூலிகளினுல் படுகொலை செய்யப்பட்டதும் கிழக்கு மாகாணம் முழுவதும் பரவலாக முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளும் மேற்படி நோக்கத்தைப் பூர்த்திசெய்யும்முகமாக தனது கூலிப்பட்டாளங்களை இந்திய அரசு தொடர்ந்தும் பயன்படுத்திக் கொண்டு வருவதையே காட்டுகின்றது.

இந்தக் காரணங்களுக்காகவே ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், டெலோ கும்பல்களுக்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கி கைக்கூலிகளாக வைத்திருந்து தனது நோக்கங்களை நிறைவேற்றுகின்றது.

இன்று அதே வழியில் ஈரோஸ் இயக்கத்திற்கும் இந்திய நாசகார நிறுவனமான 'ரோ' ஆயுதங்களையும், பயிற்சியையும் வழங்கி தனது கைக்கூலியாக ஆக்கிக் கொண்டிருக்கின்றது.

இந்திய அரசின் ஏகாதிபத்திய நலனுக்காக தமிழீழ மக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் பிரித்து வைக்க முயலும்மேற்படி ஆயுதக் குழுக்களின் சதி நடவடிக்கைகளை தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருந்து முறியடிக்க வேண்டும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழு யாழ்ப்பாணத்திலிருந்து 27.11.89 இல் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



# பொங்கட்டும் புரட்சிப் பொங்கல்!

**தை** பிறக்கிறது –தமிழர் புத்தாண்டு மலர்கிறது. "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய" மூத்த இனமான தமிழினத்தின் பெரும்புலவர் – செந்நாப்போதார் – உலக மக்களுக்கு நாகரீகமான வாழ்க்கை முறையை வகுத்தளித்த திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் ஆண்டும் 2021ல் அடியெடுத்து வைக்கிறது.

இந்தியப் பெருநாட்டைப் பீடித்திருந்த லஞ்சம், ஊழல், கருத்துச் சுதந்திரப் பறிப்பு, சர்வாதிகாரம் போன்றவற்றை திணித்து –40 ஆண்டுகள் இந்தியத் துணைக் கண்டத்தை ஆட்சி புரிந்து வந்த காங்கிரசின் நேரு குடும்ப ஆட்சியை வடபுலத்து இந்தியப் பொதுமக்கள் தூக்கியெறிந்து விட்டு, நேர்மை, வாய்மை, உறுதி, அரசியல் அனுபவம், சோசலிசக் கொள்கை, மதச்சார்பின்மை, போன்ற பண்பாடுகளை வெறும் வாயளவின்றிச் செயலளவிலும் பின்பற்றி வந்த விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்களிடம் இந்தியத் துணைக் கண்டத்தை ஆளும் பொறுப்பை– அவரைப் பிரதமராக்கியதன் மூலம் மக்கள் ஒப்படைத்துள்ளனர்.

"மாநில மக்களுக்கு சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி" என்ற கொள்கையையும், இந்தியத் தொலைக் காட்சி நிறுவனத்தை, பாரபட்சமற்ற ஒரு குழுவிடம் பொறுப்புக் கொடுத்து லண்டன் பி.பி.சி போல, சுதந்திரமாக அது இயங்கவும், ஆட்சிக்கு வந்தவுடனேயே திரு.வி.பி. சிங் எடுத்து வரும் நடவடிக்கை ஆசிய நாடுகளுக்கே ஓர் முன்னுதாரணமாகும்.

தமிழீழம் – சிறீலங்கா, என்கிற இருநாடுகளை உள்ளடக்கிய இலங்கைத்தீவில் (சிங்கள) ஸ்ரீலங்கா எங்கே போய்க் கொண்டிருக்கிறதென்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை!

8000 சதுர மைல்களையும் 40 இலட்சம் தமிழ் மக்களையும் உள்ளடக்கிய தமிழீழம், உலகின் நான்காவது பெரிய ராணுவம் என்று பேசப்படுகின்ற இந்திய முப்படைகளையும் சேர்த்து சுமார் ஒரு இலட்சம் படைகளை கடந்த இரண்டாண்டுகளில், போதும் போதும் என்கிற அளவுக்கு அசர வைத்து விட்டது!

தமிழீழநாட்டு மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்றதும் திரு வேலுப்பிள்ளை பிரபாகரனின் உன்னதமான தலைமையைக் கொண்டதும், கட்டுப்பாடு, அர்ப்பணிப்புத்தன்மை, கொரில்லாப்போர்த் தந்திரம், திறமை, ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கிய விடுதலைப்புலிகளின் தமிழீழத் தேசிய விடுதலை உணர்வின் முன்னால் இந்திய ராணுவம் எண்ணி வந்தது தமிழீழ நாட்டில் துளியும் கைகூடவில்லை.

பிரபாகரனை அணைத்தோ மிரட்டியோ, இதமாகப் பேசியோ, பணத்தை அள்ளியிறைத்தோ– புலிகளுடன் கலந்தாலோசிக்காமல் ஏதேச்சாதிகாரமாக சிங்கள ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் தாம் தமது எண்ணப்படி 29.7.87 அன்று செய்து கொண்ட உடன்பாட்டில் கட்டாயப்படுத்தி, ஐந்து நாட்கள் டெல்லியில் சிறைப்படுத்தியும் பிரபாகரன் அதில் கையெழுத்திட மறுத்தமை–இந்தியப் பேரரசின் அன்றைய பிரதமருக்கு முகத்தில் பூசிய கரியாகிறது. தமிழீழ மக்களினதும் அதன் தலைவனதும் உறுதிக்கும் திண்மைக்கும் அகவலிமைக்கும் ஆண்மைக்கும் இது ஓர் பாரிய சான்றாக அமைந்தது.

இந்திய ராணுவத்தை தமிழீழத்தில் குவித்து வைத்துக் கொண்டு மாகாண மன்றத்தேர்தலை, இந்திய அரசு நடத்திட முற்பட்ட போது விடுதலைப் புலிகளும் ஏனைய இயக்கங்களும் அதில்போட்டியிட முன் வர வில்லை. தேர்தல் நடவாவிடின் தன் மானம் போய் விடும் என்பதை உணர்ந்த ராஜிவ்காந்தி, EPRLF, 'ரா' வினால் உருவாக்கப்பட்ட ENDLF மற்றும் டெலோ ஆட்களை விமானத்தில் டெல்லிக்கு அழைத்து

"நீங்கள் தேர்தலில் போட்டியிடுங்கள். இந்திய ராணுவம் உங்களுக்கு முழுப்பாதுகாப்புத் தருவதுடன் உதவியாயிருக்கும். உங்கள் தேர்தல்செலவுகள் எவ்வளவாயினும், அதை இந்திய அரசு தரும். தாமதமின்றிச் சென்று கொழும்பில் உங்கள் வேட்பாளர் பட்டியலைக் கொடுங்கள்"

என்று ராஜிவ் கட்டளையிட, அதுவரை மதில்மேற் பூனைகளாக இருந்த மேற்கண்ட மூக்காலிக் கூட்டணியினர், உளமெலாம் பூரித்து, வருகின்ற குருட்டு அதிர்ஷ்டத்தை உதறாமலின்றி இந்திய வல்லரசின் ஏவல் பேய்களாயினர். வடக்கில் வாக்களிக்க யாருமே முன்வரவில்லை. கிழக்கில் இந்திய ராணுவமும், மூக்காலிக் கூட்டணியாரும் மக்களை உருட்டி மிரட்டியும், சுட்டுக் கொன்றும், இவர்களே எல்லோரது வாக்குகளுக்கும் புள்ளடியிட்டதும், அப்போது நடந்த ஏனைய தில்லுமுல்லுகளும் உலகப் பிரசித்தம்.

தாம் வெளியேறியதும், தாம் உருவாக்கிய பெருமாள் அரசைப் பாதுகாத்திட, புலிகளை எதிர்த்துப் போரிட இந்திய ராணுவமும் 'ரா' வுமாகச் சேர்ந்து, மக்கள் பாதுகாப்புப்படை, தமிழ் தேசிய ராணுவம் என்று இரண்டு பெயர் கொண்ட ஆயுதப் படை ஒன்றை உருவாக்கி அதற்குப் பயிற்சியும் ஆயுதமும், பணமும் வழங்கினர்.

இப்படைக்கு ஆட்களைத் திரட்டிட, பாடசாலை செல்லும் சிறுவர்களும், மாணவர்களும் அப்பாவி இளைஞர்களும் கபடத்தனமாகத் துப்பாக்கி முனையில் கடத்தி வரப்பட்டனர்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள T.N.A. மீது விடுதலைப்புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தி T.N.A விடமிருந்த அனைத்து ஆயுதங்களையும் கைப்பற்றி அவர்களை நிராயுதபாணிகளாக்கி விட்டனர். இன்றைக்கு மேற்படி இரண்டு மாவட்டங்களும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன.

திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய தமிழீழ மாவட்டங்களில் இன்னும் இந்தியப்படை முகாம்கள் அகற்றப்படவில்லை. தனது தேர்தல் அறிக்கையில் கூறியவாறு- வி.பி. சிங் அரசு மேற்படி இடங்களிலுள்ள இந்தியப்படைகளை கூடிய விரைவில் வாபஸ் பெற்று விடும் என்று நம்புகிறோம்.

இதே சமயம் மலரும் புத்தாண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளையும் புதியதோர் மாற்றத்துக்கு இட்டுச் சென்றுள்ளது.

ஒற்றையாட்சியின் கீழ் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு செல்வதனால், தமிழீழ விடுதலையைப் பெற முடியாதென்றும், ஆயுதப் போராட்டத்தின் மூலமே, தமிழீழ மக்கள் சுயநிர்ணய உரிமையையும், சுதந்திரத்தையும் பெறமுடியுமென்றும், கடந்த 13 ஆண்டுகளாகப் போராடி, 1205 விடுதலைப்புலிகளை களத்தில் இழந்து, தமிழனின் வீரத்தையும் மானத்தையும் நிலைநாட்டி வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவு – "விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி" என்ற பெயரில் ஸ்ரீலங்காவின் சட்டதிட்டங்களுக்கமையத் தம்மை ஓர் அரசியற் கட்சியாகப் பதிவு செய்து கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

முப்பது ஆண்டுகளாக அரசியல் சட்டத்துறைகளில் மூழ்கித் திளைத்த வல்லுனர்களான தமிழர்கள் பலர் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலிருந்து எத்தனையோ வழிகளில் வாதாடியும், போராடியும் 'லொபி' பண்ணியும் எதனையும் சாதிக்க முடியவில்லை என்ற நிலையில்தான், தமிழீழ மக்கள்! பாராளுமன்றத்தை நிராகரித்து, ஆயுதப் போராட்டத்திலிறங்கிய தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தங்கள் முழு ஆதரவையும் வழங்கினார்கள்.

1986 ஆம் ஆண்டு முழுவதும் தமிழீழம் எங்கனும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசாங்கமே (DE-FACTO) நடைபெற்றது.

உலக நாடெங்கனும் வாழும் தமிழர்கள்–தமிழ நாட்டிலுள்ள இனமானமும் விடுதலை வேட்கையும் கொண்ட தமிழர்கள் மட்டுமின்றிப் பூமிப்பந்தின் பல்வேறு நாடுகளில் அகதிகளாகி அடைக்கலம் புகுந்துள்ள தமிழீழ மக்களும், சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ நாட்டிலேயே 'அகதி' என்ற இழிநிலை அகன்று சுதந்திர மக்களாக சென்று வாழ்வோம் என்ற முழு நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழீழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவு, 'ஐக்கிய' இலங்கை என்ற கோட்பாட்டுக்குள் அமைந்த ஸ்ரீலங்காவின் தேர்தல் குழுவிடம் மனுச் செய்து தம்மை ஓர் அரசியற்கட்சியாகப் பதிவு செய்திருப்பது, சுயமரியாதையையும் தமிழீழ விடுதலையையே உயிர் மூச்சாகக் கொண்டிருப்பவர்களுமான தமிழ் உள்ளங்களில் சிறிது குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

நமக்கு ஒன்று புரிகிறது. வடக்கு கிழக்கு மாநிலத்தில்– அதாவது தமிழீழ மாநிலத்தில், இந்தியா திணித்த பெருமாளின் ஆட்சி, தமிழீழ மக்கள் மீது நடத்திவரும் அராஜக, அட்டூழிய, கொடூர ஆட்சியை வீழ்த்தி தமிழீழ மாநிலத்தில் ஒரு சீரான, பாரபட்சமற்ற ஆட்சியை நிறுவ விடுதலைப்புலிகள் விரும்புகிறார்கள். அதற்காகவே விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தோன்றியுள்ளது. இதன் பின்னணியில் ஏதாவது அரசியல் சாணக்கியம் இருக்கலாம்.

ஆயினும் ஓர் உண்மையை இங்கு முன் வைக்கிறோம். பதவி, அதிகாரம், ஆள், அம்பு என்று வரும் போது, காலம் செல்லச் செல்ல பதவியிலும் அதிகாரத்திலும் விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டிருப்பது மனித இயல்பு. இவ்வாறான மமதையும் அதிகார பதவி மோகமும், தமிழ் மாநில சபையைக் கைப்பற்றினாலும் கூட விடுதலைப்புலி அரசியற் பிரிவுக்குத்துளியும் ஏற்பட்டு விடக்கூடாது.

> "மகோன்னதமான இலட்சியத்துக்குபோராடி வரும் ஒருவன், இடையிலே கிடைக்கும் அற்ப சலுகைகளில்ஆசை வைப்பானாயின், அவனால் சலுகை பெறவும் முடியாது. தனது அடிப்படை இலட்சியத்தையும் வென்றெடுக்க முடியாது"

என்பது மேலை நாட்டறிஞர் ஒருவரின் பொன்மொழி!

ஸ்ரீலங்கா அரசியலமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை அகற்றுதல், தேசியக்கொடியாக வானேந்திய சிங்கக் கொடியை ஏற்க மறுத்தல் மதச்சார்பற்ற மத்திய அரசு (சிங்கள) ஸ்ரீலங்காவின் தேசிய கீதத்தைப் பாட மறுத்தல், தமிழீழ மாநிலத்தில் நடைபெறும் பெரிய, சிறிய, அனைத்து நீர்ப் பாசனத் திட்டங்களும் குடியேற்றத் திட்டங்களும் தமிழ் மாநில ஆட்சியின் பொறுப்பில் விடுதல், தமிழ் மாநிலத்தில் தாய்மொழி, ஆங்கிலம் என்ற இரு மொழிக்கொள்கை, போன்ற சில அடிப்படை நிலைகளில் விட்டுக் கொடுக்கவோ சமரசம் காணவோ அணுவளவும் இடமில்லை!

வீரவேங்கையைப் பொறுத்த அளவில், அது தனது இலட்சியமான இறைமையும் சுதந்திரமும் உள்ள தனித்தமிழ் ஈழநாட்டுக்கே எந்த நிலையிலும், வாதாடும், போராடும்!!

தமிழீழம் உலகோடு
சமமாக நின்று
தலை தூக்கி நிலை பெற்று
வளமாக வேண்டும்!

என்னும் முழக்கத்தோடு வீரவேங்கை தமிழீழ சுதந்திரத்துக்குப் போராடும் விடுதலைப்புலிகளுக்கு தொடர்ந்து தனது முழு ஆதரவை வழங்கிட பொங்கற் புது நாளில் உறுதியளிக்கிறது.

**பொங்குக தமிழர் நெஞ்சம்!**
**மலரட்டும் தமிழர் ஈழம்!!**

## மாவூரில் தமிழீழத் தலைவர் பிறந்தநாள் விழா!!

தமிழீழ மக்களின் தாகமான தனித் தமிழீழப் போராட்டத்தை முன்னெடுத்து பலவாறான இன்னல்களுக்கு இடையேயும் கொண்ட கொள்கை, குறிக்கோள் இவைகளுக்காகப் போராடி உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கின்ற தமிழீழத் தேசியத் தலைவர், ஈழவேங்கை. தமிழ்த் திரு வே. பிரபாகரன் அவர்களின் சீரும் சிறப்பு மிக்க 37வது பிறந்தநாள் சென்ற 26.11.89 ஞாயிறன்று காலை மாவூர் ஆண்டவர் கல்வி நிலையத்தில் 150 மாணவ– மாணவியர்கள் ஆசிரியர்– ஆசிரியைகளுடன் பெருமகிழ்வோடு கொண்டாடப்பட்டது. ஒரு உன்னதத் தியாகத் தலைவனின் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டிய அவசியம் தமிழீழத்தின் இன்றைய நிலை இவற்றை உரை மற்றும் கவிதை மூலம் அனைவருக்கும் பலர் உணர்த்தினார்கள்.

"தமிழீழ மக்களின் உடைமை, உரிமை இவைகளை நிலைநாட்டி, சுதந்திரத் தமிழீழத்தை மலர வைக்க அல்லும் பகலும் அயராது பாடுபடும் திரு. பிரபாகரன் அவர்கள் பன்னூற்றாண்டு காலம் நீடுழி வாழ்க! தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வாழ்க! விரைவில் தமிழீழம் மலர்க" என இதய பூர்வமாக வேண்டி வாழ்த்தியதுடன் இனிப்பு வழங்கு விழா நிறைவு பெற்றது.

### முகாம் மீது புலிகள் தாக்குதல்

1989 டிசம்பர் 6 ஆம் நாள் தமிழீழத்தின் கிழக்கிலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமம் என்னும் இடத்திலுள்ள ஈ.என்.டி.எல்.எப் முகாம் மீதும், காவல் அரண் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதன் போது ஈ.என்.டி.எல்.எப்பைச் சேர்ந்த 5 பேர் கொல்லப் பட்டனர். எமது தரப்பில் கப்டன் ஜெபேட், யசோ ஆகிய வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். இத்தாக்குதலின் போது ஈ.என்.டி.எல்.எப் இவரிடமிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் பற்றிக் கிடைத்த தகவல் வருமாறு:-

1. பீறென் எல்.எம்.ஜி–12, குழல்கள்–10, ரவைக்கூடுகள்–65.
2. கால்கஸ்ரோ லோஞ்சர்–03, ஷெல்கள் 20, ஸ்கோப் 04.
3. எம்–70 தாக்கு ரைபிள்கள்–61, ரவைக்கூடுகள்–124, மசில்ஸ்–25.
4. ஜீ–3 தானியங்கி ரைபிள்கள் –20, ரவைக்கூடுகள்–21.
5. எஸ்.எம்.ஜி. துப்பாக்கிகள்–10, ரவைக்கூடுகள்–22
6. எஸ்.எல்.ஆர் ரைபிள்கள்–04, ரவைக்கூடுகள்–05,
7. 2 இஞ்சின் மோட்டார்கள்–02, ஷெல்கள்–44
8. பிஸ்ரல்கள்–05,
9. வோக்கி டோக்கி–01
10. ரி.என்.ரி.–22
11. 7.62 இடைத்தர சக்தி–26050
12. 7.62 நேட்டோ ரவைகள்–25300
13. 9 மி மீற்றர் ரவைகள்–1081

# சரணடையுங்கள்! வீணே மோதிச் சாகாதீர்கள்! துரோகிகளுக்கு புலிகள் எச்சரிக்கை!

"இந்திய ராணுவம் இம்மாத இறுதியுடன் தமது நாட்டுக்குச் சென்றுவிடும். இந்திய ராணுவ ஆக்கிரமிப்பாளரின் பேச்சைக் கேட்டு – அவர்களின் நிர்ப்பந்தத்துக்குட்பட்டு – விடுதலைப்புலிகளாகிய எம்முடன் மோதி வீணகச் செத்து மடியாமல் – உடனடியாக எம்மிடம் ஆயுதங்களுடன் வந்து சரணடையுங்கள். அதன் மூலம் தமிழீழ சுதந்திரப் போரில் நீங்களும் பங்காளிகளாவீர்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் 'தமிழ்த் தேசிய ராணுவம்' என்ற பெயரில் இந்திய ராணுவத்தால் உருவாக்கப்பட்ட இந்தியக் கூலிப்படைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. புலிகளின் வேண்டுகோள் பின்வருமாறு:-

இந்திய இராணுவம் தமிழீழ மண்ணில் இல்லாத வேளையிலும் தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்கி இந்தியாவின் நலன்களைக் காப்பதற்கென்றே தமிழ்த் தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது.

பலாத்காரமாக சேர்க்கப்பட்ட இளைஞர்களாலும் நிர்ப்பந்தத்தின் பேரில் சேர்ந்து கொண்ட இளைஞர்களினாலும் தொடங்கப்பட்ட அப்படைப்பிரிவு இன்று ஓர் இக்கட்டான நிலையில் உள்ளது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப்படை வெளியேறியதைத் தொடர்ந்து அங்கே வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஆயுதங்களுடன் வந்து எம்மிடம் சரணடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே போல தமிழீழத்தில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இதுவரை 250க்கும் மேற்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆயுதங்களுடன் வந்து எம்மிடம் சரணடைந்துள்ளனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திருந்தும் இந்தியப்படைகள் வெளியேறுகின்றன. எனவே இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் மட்டக்களப்பில் இருக்கும் தமிழ்த்தேசிய இராணுவத்தினரும் ஆயுதங்களுடன் சென்று விடுதலைப்புலிகளிடம் சரணடைந்து விடுவார்கள் என்று இந்திய அரசு அஞ்சுகிறது.

இந்த நிலையில் மட்டக்களப்பிலிருந்து தமிழ்த்தேசிய இராணுவத்தினரை இந்திய இராணுவத்தினர் கைதிகளைப்போன்று வாகனங்களில் ஏற்றி திருகோணமலைக்கு கொண்டு செல்கின்றனர்.

நாளை திருகோணமலையிலிருந்தும் இந்தியப்படை வெளியேறத்தான் போகின்றது. அப்போது தமிழ்த்தேசிய இராணுவம் இந்தியாவிற்கு கொண்டு செல்லப்படமாட்டாது.

பதிலாக விடுதலைப்புலிகளிடம் சண்டையிடுமாறு இந்திய இராணுவத்தால் நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு வீணக செத்து மடியப்போகின்றீர்கள். அதன் பின்னரும் எஞ்சியிருக்கும் தமிழ்த்தேசிய இராணுவத்தினரின் ஆயுதங்களும் இந்திய இராணுவத்தினரால் பறிக்கப்பட்டு அனாதைகள் போன்று நீங்கள் கைவிடப்படுவீர்கள்.

எனவே தமிழ்த் தேசிய இராணுவத்தில் அங்கம் வகிக்கும் இளைஞர்களே, இன்னும் சில நாட்களின் பின் இந்திய இராணுவத்தினரால் பூரணமாக கைவிடப்படப் போகும் நீங்கள் தொடர்ந்தும் இந்தியப்படைகளுடன் இருந்து குற்றச் செயல்களைப் புரிந்துக் கொண்டு இருக்காது உடனடியாகவே ஆயுதங்களுடன் வந்து சரணடையுங்கள். அதன் மூலம் தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்தில் நீங்களும் பங்காளிகளாக மாறமுடியும்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.'

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்– இராணுவக்குழு EPRLF சமூக விரோத இயக்கமும் அதன் இந்திய முதலாளிகளும் சேர்ந்து உருவாக்கியுள்ள தொண்டர்படை என்கிற குண்டர் படையில் அப்பாவி தமிழ் இளைஞர்களை பலவந்தமாகவும் ஆசை காட்டியும் சேர்த்து, பலிக்கடாக்களாக்க முனைகிறார்கள். அந்தப்படையிலுள்ள இளைஞர்கள் தங்கள் ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகளிடம், அடைக்கலம் கோருவார்களானல், அவர்கட்கு மன்னிப்பு அளிக்கப்படும்.

துரோகப்படைகளாலும், இந்திய ஆக்கிரமிப்புபடைகளாலும் வலுக்கட்டாயமாக தொண்டர்படையில் சேர்க்கப்பட்டுள்ள இளைஞர்களும் நாட்டின் நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் முன்யோசனை எதுவுமின்றி தொண்டர்படையில் இணைந்துள்ள இளைஞர்களும் ஆயுதங்களுடன் எம்மிடம் சரணடைந்தால் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப்பிரதேசத்திலிருந்து மாகாணசபையின் தொண்டர்படையைச் சேர்ந்த 17 இளைஞர்கள் எம்மிடம் சரணடைந்துள்ளார்கள். அவர்களுள் 7 பேர் ஆயுதங்களுடன் சரணடைந்தவர்களாவர். இதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 இளைஞர்கள் சரணடைந்துள்ளார்கள். அவர்களுள் 4 பேர் ஆயுதங்களுடன் சரணடைந்துள்ளார்கள். இவ்வாறு சரணடைந்துள்ளவர்களும், மேலும் சரணடைய இருப்பவர்களும் எமது இயக்கத்தால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவார்கள்.

நாட்டு நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாத, அல்லது பணத்திற்காக எதையுமே முன் யோசனை எதுவுமின்றி செய்யக் கூடிய இளைஞர்கள் பெரும்பாலோனுர் தொண்டர்படைக்குச் சென்றுள்ளார்கள். அங்கு சென்ற பின்னர்தான் நாட்டு நிலைமையை அவர்களால் தெரிந்து கொள்ள முடிகின்றது.

வாகனங்கள் சோதனையிடப்படல், மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படல் என்றெல்லாம் சொல்லப்பட்டுத்தான் இவர்கள் தொண்டர்படைக்கு சேர்க்கப்பட்டார்கள். ஆனல் அங்கு சென்ற பின்னர்தான் தாங்கள் இந்திய ஆக்கிரமிப்புப்படைக்கும், துரோகக்கும்பல்களுக்கும் அடியாட்களாக வைக்கப்பட்டிருப்பதை உணரத் தொடங்கியுள்ளனர்.

பொதுமக்களை அடித்தும், துன்புறுத்தியும், கொலை செய்தும், எமது தமிழ்ப் பெண்களை இந்திய உயர் அதிகாரிகளுக்கு கடத்திச் சென்று கொடுப்பதற்குமே இந்த தொண்டர்படை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உதாரணமாக தர்மபுரம் என்ற (கிளிநொச்சி மாவட்டம்) இடத்தில் பாடசாலை மாணவி ஜீவராணி (17 வயது) என்பவர் அவரது வீட்டில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இன்றுவரை அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல் யாருக்கும் தெரியாது.



இதேபோன்று சோதனைக்காக நிறுத்தப்பட்ட பஸ் வண்டியிலிருந்து இரண்டு இளம்பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விருவரையும் பலாலி இந்திய இராணுவ முகாமில் கொண்டு சென்று இறக்கிவிடும் படி பஸ் வண்டியில் சாரதி பணிக்கப்பட்டிருந்தார். ஆனல் சாரதி அவ்வாறு செய்யாமல் இரு பெண்களையும் இராணுவத்தினரிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு இடைவழியில் இறக்கி விட்டு பாதுகாப்பாகச் செல்லும் படி கூறிசென்றுவிட்டார். இதை அறிந்த துரோகக்கும்பல்கள் தொண்டர்படையினருடன் சாரதியின் வீடு தேடிச் சென்று சாரதியை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்திய இராணுவமும், மாகாணசபைப் பிரதிநிதிகளான ஐந்தாம்படையினரும் தாம் செய்யும் கொலை, கொள்ளைகளுக்கு துணைபோக உங்களை பயன்படுத்துகிறார்கள். தம்மை பாதுகாக்கும் பொருட்டு தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உங்களை முன்னல் அனுப்புகிறார்கள். நீங்கள் உங்கள் சகோதர சகோதரிகளை, பெற்றோர்களை கொலை செய்ய இந்திய இராணுவத்தாலும் ஐந்தாம்படைகளாலும் நிர்ப்பந்திக்கப்படுவீர்கள் மறுத்தால் தண்டிக்கப்படுவீர்கள்.

கடந்த சில மாதங்களில் 150க்கும் மேற்பட்ட தொண்டர் படையினர் இந்திய அரசின் நிர்பந்தத்தால் எம்முடன் மோதி உயிரிழந்தனர். உண்மை நிலையை உணர்ந்த நீங்கள் ஆயுதங்களுடன் சரணடையுங்கள். உங்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப புலிகள் இயக்கத்தலைமை, வழிதவறியோ ஏமாற்றப்பட்டோ, ஈ.பீ.ஆர்.எல்.எவ், மற்றும் அதன் நேச இயக்கங்களும் "மக்கள் தொண்டர்படை" என்ற பெயரில் அமைத்துள்ள இந்தியக் கூலிப் படையில் சேர்ந்துள்ள தமிழ் இளைஞர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# புலிகளிடம் சரணடைந்த துரோகப்படை விபரம்

விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோளையடுத்து ஆயுதங்களுடன் வந்து விடுதலைப்புலிகளிடம் தமிழ்த் தேசிய இராணுவத்தினர் நூற்றுக்கணக்கில் சரணடைந்து வருகின்றனர். அதுபற்றி விடுதலைப்புலிகள் இயக்கம் தந்துள்ள விபரம் வருமாறு:-

**1.10.1989** வந்தாறுமூலை இந்திய இராணுவ முகாமிலிருந்து 800 யார் தொலைவில் வந்த E.N.D.L.F. இனருக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் மூன்றுபேர் கொல்லப்பட்டனர், 3 பேர் காயமடைந்தனர். ஏ.கே.எம்.எஸ். ஒன்று புலிகளால் கைப்பற்றப்பட்டது.

**5.10.1989** மாங்குளம் இராணுவ முகாமில் இருந்து மூன்று E.N.D.L.F. இனர் எம்மிடம் வந்து சரணடைந்தனர். ஜி 3–2, எஸ்.எம்.ஜி–I, என்பவையுடன்

**5.10.1989** திருநெல்வேலி எனும் இடத்தில் குடிமக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவர் (C.V.F) எம் 84 ஒன்றுடன் வந்து புலிகளிடம் சரணடைந்தார்.

**6.10.1989** வேலனை இந்திய இராணுவ முகாமில் இருந்து 11 E.P.R.L.F. இனர் புலிகளிடம் வந்து சரணடைந்தனர்.

**7.10.1989** மட்டக்களப்பிலுள்ள கரடியனுறு எனும் இடத்தில் எமது இயக்க உறுப்பினர் மூவர் அவர்களது வீட்டுக்குச் சென்றனர். இதில் ரோகி என்பவரை அவரது வீட்டு வாசலிலேயே இந்திய ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

**9.10.1989** முல்லைத்தீவு இந்திய ராணுவ முகாமிலிருந்து 'ரேலோ" இயக்க உறுப்பினர் ஒருவர் பிஸ்ரல் ஒன்றுடன் புலிகளிடம் வந்து சரணடைந்தனர்.

**11.10.1989** மட்டக்களப்பிலுள்ள வந்தாறுமூலை எனும் இடத்தில் "டெலோ" வைச் சேர்ந்த ஜீவன் எனும் தேசத் துரோகி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**12.10.1989** மட்டக்களப்பிலுள்ள கோமாரி எனும் இடத்திலுள்ள இந்திய இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

**14.10.1989** மன்னூரில் C.V.F. ஐச் சேர்ந்த மூன்று பேர் எம்.84 ஒன்றுடன் புலிகளிடம் வந்து சரண் அடைந்தனர்.

**14.10.1989** மட்டக்களப்பிலுள்ள கிரான் எனும் இடத்தில் சிறி எனும் E.P.R.L.F. தேசத் துரோகி புலிகளினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**14.10.1989** வேலனை இந்திய இராணுவ முகாமில் இருந்து 11 .பி.ஆர்.எல் எப். இனர் எம்மிடம் வந்து சரண் அடைந்தனர்.

**15.10.1989** காங்கேசன் துறை பெற்றோல் குதம் அருகே மூன்று E.P.R.L.F. இனரை எம்மவர்கள் சுட்டுக்கொன்றனர்.

**16.10.1989** பாலையடி வெட்டை தாண்டமலை ஆகிய இடங்களிலருந்து முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

**19.10.1989** செட்டிகுளம் எனும் இடத்தில் இரண்டு E.N.D.L.F. இனர் ஜி3–1, ஏ.கே–1, என்பனவற்றுடன் புலிகளிடம் வந்து சரணடைந்தனர்.

**20.10.1989** மன்னூரில் உள்ள உயிலங்குளம் எனும் இடத்தில் C.V.F படையைச் சேர்ந்த மூன்று பேர் எம். 84 மூன்றுடன் புலிகளிடம் வந்து சரண் அடைந்தனர்.

**22.10.1989** இருபாலைஎனும் இடத்தில் இரண்டு E.P.R.L.F. இனரை புலிகள் சுட்டுக் கொன்றனர். இவர்களிடமிருந்து பிஸ்டல் ஒன்று புலிகளால் கைப்பற்றப்பட்டது.

**23.10.1989** திருகோணமலை ஆலங்கேணி எனும் இடத்தில் வீரசுத்தி, வீரசிங்கம், (ஓப்பிலா) வயது 54 என்பவரை காட்டிக் கொடுத்த துரோகத்துக்காகப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

**25.10.1989** மட்டக்களப்பு வாகரை எனும் இடத்தில் இரண்டு C.V.F இனர் எம். 84–2 உடன் எம்மிடம் வந்து சரணடைந்தனர்.

**25.10.1989** மட்டக்களப்பு கொம்மான்துறை எனும் இடத்தில் நடராஜா சின்னவன் எனும் தேசத்துரோகி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரிடமிருந்து பிறவுனிங் பிஸ்டல் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

**25.10.1989** மாங்கேணி இராணுவ முகாமிலிருந்து கிண்ணியடி எனும் இடத்தில் இரண்டு சி.எவி.எப். இனர் புலிகளிடம் சரணடைந்தனர். இவர்களில் இருந்து எம்.84–2, புலிகளிடம் ஒப்படைத்தனர்.

**26.10.1989** மூதூரில் உள்ள ஈச்சிலம்பத்தை எனும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# "தமிழீழ விடுதலைப் போரில் தம்முயிரை அர்ப்பணித்த தியாகிகள் சுதந்திர பூமியின் அடிக்கற்கள்"

## வீரர்கள் தினம் பற்றி புலிகள் அறிக்கை!

**விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்று வரை 1306 போராளிகள் மக்களுக்காக மடிந்திருக்கின்றார்கள்,மக்களின் விடுதலைக்காக தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளார்கள் மக்கள் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார்கள். மக்களின் விடிவிற்காக மரணத்தைத் தழுவிக்கொண்ட இந்த மாவீரர்களுக்கு ஆண்டுதோறும் விழா எடுக்க எமது இயக்கம் முடிவு செய்துள்ளது.**

முதலில் களத்தில் வீழ்ந்த சத்தியநாதன் (சங்கர்) உயிர்நீத்த நாளை தேசிய சுதந்திர தினமாக தமிழீழமெங்கும் கொண்டாடி எமது தியாக தீபங்களை நினைவில் ஏற்றிவைக்குமாறு எமது மக்களை அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.

வாழ்வில் உயிர்களைப் போல அளப்பரிய செல்வம் எதுவும் இல்லை என்பார்கள். அப்படியான உயிர்ச்செல்வத்தை தியாகம்செய்ய ஒருவன் துணிந்திருக்கின்றான் என்றால் அது உயிரினும் மேலான உன்னதமான இலட்சியம் ஒன்றுக்காகத்தான். இந்த உன்னதமான இலட்சியத்திற்காகவே எமது போராளிகள் சாவைச் சந்திக்கிறார்கள். அடிமையாக வாழ்வதைவிட சுதந்திரத்திற்காக மரணிப்பதில் அர்த்தமுண்டு என்பதில் உலகிற்கு உணர்த்துகிறார்கள்.

இந்தச் சாவுகள் சாதாரண சாவுகள் அல்ல. சோகமான தனி மனித நிகழ்வுகள் அல்ல. இவை யோர் புனிதமான குறிக்கோளுக் காக மனிதன் படைக்கும் அற்புத மான காவியங்களாகும். விடுதலைக்காக மரணித்தவன் வரலாற்று நாயகனாகின்றான்.

ஏனென்றால் விடுதலை முன்னாகவே வரலாற்றின் சக்கரம் சுழல்கிறது. விடுதலைக் காகக் களத்தில் சாய்ந்த எமது வீரர்கள் காலத்தால் அழியாத வரலாற்றுத் தீபங்கள்.

மனித வாழ்வு என்பது மனித உறவுகளினால் ஆனது. மனித உறவுகளில் ஒட்டுமொத்தமான கூட்டமைப்பு அமைகின்றது. மனிதன் ஓர் சமூகப்பிறவி. சமூக உறவுகள் தனிமனித வாழ்வை நிர்ணயிக்கின்றன. நாம் வாழும் சமூகம், இனம், அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டிருக்கும். தனிமனிதப் பிறவியாகிய நாம் விடுதலை காண முடியாது. எமது சமூகத்தின், எமது இனத்தின் விடுதலைதான் எமது விடுதலை. சுதந்திரமான, சமத்துவமான ஓர் உன்னத அமைப்பில்தான் தனி மனித விடுதலைப் பற்றி முழுமை பெற முடியும்.

தமிழீழச் சமூதாயம் கிட்டத்தட்ட ஐநூறு ஆண்டுகள் அடிமை வாழ்வில் திகழ்கின்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியர்கள் என்ற வகையில், பல கட்டங்களில், பல வடிவங்களில் அடக்கு முறை எமது சமூகத்தியும் திணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐநூறு ஆண்டுகால அடக்குமுறையில் புலிகள் இயக்கத்தில் தோற்றமும், வளர்ச்சியும், வீரம் செறிந்த போராட்டமும் ஒரு மகத்தான ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்தது. ஆண்டாண்டு காலமாக தூங்கிக் கிடந்த தமிழீழமண்ணில் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

புலிகளின் துப்பாக்கி வேட்டில் தமிழ்த்தேசிய ஆன்மா விழித்துக் கொண்டது. தேசிய விடுதலை வரலாற்றுச் சக்கரம் சுழன்றது. 1306 அற்புதச்சுடர்களாக தமிழீழச் சுதந்திரத் தீபத்தில் எரிந்தது.

மக்களின் விடிவிற்காக மரணித்த எமது மாவீரர்களை நினைவு கூரும் இந்தப் புனித நாளில் எந்த உன்னத இலட்சித்திற்காக அவர்கள் உயிரை அர்ப்பணித்திருக்கின்றார்களோ அந்த இலட்சியப்பாதையில் தவறாது செல்ல நாமும் உறுதி கூறுவோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

இவ்வாறு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து 27.11.89 இல் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

எமது தாயக விடுதலைக்கான நீண்ட போராட்டப் பாதையில் விடுதலைப் புலிகள் அளப்பரிய தியாகங்களைப் புரிந்துள்ளனர். அவர்களது கடமையுணர்வு, அர்ப்பணிப்பு, வீரம்- ஒப்புவமை அற்றது. விடுதலைப் போராட்ட வரலாறுகள் எவற்றிலும் காண முடியாதது. அவர்களது வாழ்க்கை தியாகம் நிறைந்த ஒரு வீரகாவியம். அவர்களை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்ய கார்த்திகை 27ந் திகதியை 'மாவீரர் தின' மாக பிரகடனப்படுத்த முடிவு செய்துள்ளோம். ஏனெனில் முதலாவது களப்பலியான விடுதலைப் புலி சங்கர் என அழைக்கப்படும் லெப்டினன்ட் சத்திய நாதன் 1982 ம் ஆண்டு அதே தினத்தில் தான் வீரமரணமடைந்தார்.

1972 ல் உருவான எமது விடுதலை இயக்கம் அடக்கப்பட்ட எமது மக்களின் விடுதலைக்காக அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் போராடி வருகின்றது. தமிழ், முஸ்லீம் மக்களை உள்ளடக்கிய தமிழீழம் 40 வருடங்களாக அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறைக்கு உள்ளாகியது. இனப்படுகொலை என்ற பயங்கர வடிவெடுத்த அவ்அடக்கு முறை தமிழீழ மக்களின் தேசியத் தன்மையை அழிக்க முனைந்தது. அரச ஒடுக்கு முறைக் கெதிரான் தமிழீழ மக்களின் அமைதி வழி அகிம்சைப் போராட்டங்கள் இராணுவ பயங்கர வாதத்தால் நசுக்கப்பட்ட போது எமது மக்களின் சுய நிர்ணய உரிமையை நிலை நாட்டுவதற்காக எமது இயக்கம் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது.

எமது மண்ணையும் மக்களையும் மீட்பதற்கான எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி, அரசியல் மயப்படுத்தி தலைமை தாங்கி வருகிறோம். வீரம் செறிந்த எமது ஆயுதப்போராட்டத்தின் விளைவாக எமது தாயகத்தின் பெரும்பகுதிகள் எமதுகட்டுப்பாட்டுக்குள் வந்தன. எமது சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்து, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக உருவெடுத்தது.

எமது போராட்டம் உயர்ந்த வளர்ச்சியை எய்திய ஒரு கட்டத்தில்தான் இந்தியா இராணுவ பலத்தால் எமது விடுதலை இயக்கத்தை அழிக்க முற்பட்டது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும், அது எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட போரும் எமது போராட்டத்திற்கு புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. எமது போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாகப் பரிணமித்தது. கடந்த இரண்டு வருடங்களாக எமது போராளிகள் இந்தியாவின் மிகப்பெரிய இராணுவத்தை தீரத்துடன் எதிர்த்துப் போராடி வந்துள்ளனர். மக்கள் சக்தியை எத்தகைய இராணுவ பலமும் அடக்க முடியாது என்பதை நாம் இந்திய அரசுக்குத்தெளிவாக உணர்த்தியுள்ளோம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியாக நாம் இலங்கை அரசாங்கத்துடன் கடந்த வைகாசி மாதத்திலிருந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதன் மூலமும் அரசியல் தீர்வொன்றைக் காணுவதற்குரிய அரியதொரு சந்தர்ப்பத்தை இலங்கை அரசுக்குக் கொடுத்துள்ளோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்திய அரசு தனது படைகளை விரைவாக வெளியேற்றுதில் காட்டிவரும் தயக்கமும், தனது அடிவருடி ஆயுதக் குழுக்களைப் பாதுகாக்க அதனால் உருவாக்கப்பட்டு வரும் சட்ட விரோத இராணுவமும் சமாதானப் பாதையில் பாரதூரமான தடைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இந்திய அரசு இப்பிராந்தியத்தில் தனது ஏகாதிபத்திய அபிலாசைகளை நிறைவேற்றும் திட்டத்திற்காக இத்தீவினை தனது ஆதிக்க வியூகத்தினுள் சிறைபிடிக்க விரும்புகிறது. இத்திட்டம், இத்தீவில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான சமாதான முயற்சிகளைத் தாமதப்படுத்தும் அல்லது தடைசெய்யும்.

எத்தகு தடைகள் எம்மை எதிர் கொண்டபோதிலும் ஒடுக்கப்பட்ட எமது மக்களின் நியாயமான உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதி கொண்டுள்ளனர். எந்த மாபெரும் சக்தியாலும் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்க முடியாது. சகல எதிர்ப்புக்களையும் முறியடித்து எமது விடுதலைப் போர் தொடரும்.

– தமிழீழ விடுதலைப்புலிகள்

*Our martyred comrades*
*Sculptors of freedom,*
*Children of world historical law*
*For the Liberation of our people*
*You transcended fear and selfishness*
*You embraced death and became immortal*
*Truth shall be your witness,*
*Dharma shall justify your deeds,*
*History shall give life to your ideal*
*Along your noble path our heroic struggle shall continue*
*The tomb - stones of the martyred tigers*
*Shall be corner - stone of our newborne state.*

களம் கண்ட தோழர்களே!
உலக வரலாற்று நியதியின்
ஒப்பற்ற சுதந்திரச் சிற்பிகளே!
எமது மக்களின் விடிவிற்காக
பயத்தைவென்றீர்கள்.,சுயத்தைக் கொன்றீர்கள்,
சாவை அணைத்து சாகாவரம் பெற்றீர்கள்
சத்தியம் உங்களுக்கு சாட்சி சொல்லும்,
தர்மம் நீதி சொல்லும்
சரித்திரம் உங்கள் இலட்சியத்தை சாகவிடாது.
உங்கள் உன்னதப்பாதையில் எமது வீரப் பயணம் தொடர்கிறது.
பிறக்கப் போகும் புதிய நாட்டிற்கு
புலிகளின் கல்லறைகள் அத்திவாரமாகத் திகழும்.

## வலுச்சண்டையில் 21 துரோகிகள் உயிரிழப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்திய செயற்குழுவின் தீர்மானப்படி 'தமிழீழ விடுதலை வீரர்கள்' தினம் நவம்பர் 27ம் நாள் தமிழீழ மடங்கும் நினைவு கூரப்பட்டது. முதலாவதாக மறைந்த வீரன் சத்தியநாதன் (சங்கர்)முதல், ஏனைய முன்னணி வீரர்கள் பண்டிதர், அன்ரனி சீலன், ஆனந்தன், விக்டர், புலேந்திரன், குமரப்பா, திலீபன், போன்ற 1062 வீரர்களின் படங்கள் கொண்ட சுவரொட்டிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் "புலிக்கொடி" பறந்திட ஒட்டப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கெனவே, ஏனைய இயக்கங்கள் மீது தாமாகச் சென்று தாக்குதல் நடத்தப் போவதில்லையென்றும், தமது நடவடிக்கைகளில் யாராவது குறுக்கிட்டால், எதிர் நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்றும் எச்சரித்திருந்தது தெரிந்ததே.

பண்டத்தரிப்பு பகுதியில் வீரர்கள் தினத்தையொட்டி 27-11-89 இல் பெரிய சுவரொட்டிகளும், புலிக்கொடியும் ஏற்றப்பட்டிருந்தது. இதைக்கண்டு உளம் பொறுக்க முடியாத தமிழீழ மக்களை ஏமாற்றிட தமிழ் தேசிய ராணுவம் என்றும்., சிங்கள அரசை ஏமாற்றிட 'மக்கள் தொண்டர்படை' என்றும் கூறிக் கொள்ளும்பெருமாளின் இந்திய எடுபிடிகளான கூலிப்படையைச் சேர்ந்தோர், அன்று இரவு மேற்படி படங்களை கிழித்தும், கொடியைக் கிழித்தும், அடாவடித்தனத்திலிறங்கினர்.

இதைக்கேள்வியுற்ற புலிகள், அவ்விடத்துக்கு விரைந்து வந்து மேற்படி செயலை நிறுத்தும்படி பெருமாளின் கூலிப்படையிடம் கேட்ட போது, அவர்கள் துப்பாக்கியை எடுத்து புலிகளைத் தாக்க ஆரம்பிக்கவே வேறு வழியற்ற நிலையில் புலிகளும் கூலிப்படைகளை எதிர்த்து அதிரடித்தாக்குதல் நடத்தினர்.

இதில் இந்தியராணுவம் உருவாக்கிய கூலிப்படையைச் சேர்ந்த 21 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்த அனைத்து இந்திய ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

இம்மோதலில் புலிகள் தரப்பில் சேதம் ஏதுமில்லை.

# தமிழீழத்தின் மெழுகுவர்த்தி!

கோணாவு மகேசன்

"எமது காலத்தில் ஈழத்தமிழினம்
விடுதலை பெறுமென
விசுவாசிக்கின்றேம்!
அஃது பொய்ப்பினும்
எமக்குப் பின்ஞல்
எம்மிலும் வீரர்கள்
ஈழத்தில் தோன்றி
ஈழத்தின் மீட்சிக்குப்
போராடுவார்கள்...."

மேற்படி வார்த்தைகள்
தந்தை செல்வாவின்
தீர்க்க தரிசனம்!
தமிழரசு இயக்கத்
துவக்க விழாவில்
நாற்பதாண்டு முன்
நவின்ற மொழிகள்...!

"சிங்களருடனே சேர்ந்தினி வாழ்ந்திடின்
ஈழத்தில் தமிழினம் வேரொடு சாயும்!
வீழ்ந்திட்ட தமிழினம்
எழுந்திட வேண்டின்
சுதந்திர ஈழம்
மலர்ந்திட வேண்டும்!
இதுவே எனது இறுதிப் பேரவா!

**புனித சுதந்திரம் மலர்ந்திட ஒரேவழி**
**போராடுவதே போராடுவதே"**
எழுபத்தி ஐந்தில் இவ்விதம் கூறி
இயற்கையடைந்தார் அரசியல் ஞானி!
செல்வாவின் கனவை
நனவாக்கிடவே

வல்லையின் வார்ப்படம்
வலிமையின் இருப்பிடம்
உறுதியின் உறைவிடம்
உண்மையின் உருவமாய்
ஈழமண்ணின் விடுதலைப்போரை
நிலைகுலையாமல் நிலைத்து நடத்திட

நேர்மை நெஞ்சினஞய்
புலிப்படைத் தலைவன்
புல்லரின் எதிரி–
புகழுக்கு மயங்கான்–
இகழ்ச்சிக்கு கலங்கான்!
பிரபாகரன் எனும்

பெயருடைத் **'தம்பி'**
தலையெடுத்தான் தமிழ்
ஈழம் மகிழ்ந்திட!
செல்வாவின் வார்த்தைகள்
பொய்யாக வில்லை!
செல்வாவின் அறவழி
சிவகுமரன் மறவழி
சேர்ந்தொன்ருய் வல்வையிலே
சீறும் புலியாய் எழுந்தான்
சீலம் நிறை எம் தம்பி பிரபா

ஒரேயொரு துவக்குடன்
ஒன்ருரை வீழ்த்திட
தர்மப்போர் துவங்கி
தமிழரைப் புலிகளாக்கி
இயக்கம் அமைத்து
இறுமாந்திருந்த
சிங்களப் படைகளைச்
சிதற அடித்தே
செங்களம் கண்டான்
**செந்தமிழ்ப் பிரபா!**

ஐந்தாண்டுகட்கு முன்
ஐயம் தவிர்த்து
பிரபாகரனெனும் புலிகள் தலைவனே
நொந்து கிடக்கும்
தமிழீழ மக்களின்
நம்பிக்கைச் சொத்து!
மக்களை இணைத்து
ஈழப்போரை வெற்றிப்பாதையில்
விடுதலை நோக்கி
வீரப்பயணம் மேற்கொள்ளும்
தகுதியும், திறமும்
வீரமும் கொண்டவன்

என்று நான் உறுதி கொண் (டு)
எழுதிய போது பேசிய போது
என்னை இகழ்ந்து தூற்றியோர்
இழிவுரை பகன்ருேர்
பழியுரை செப்பியோர்
பயமுறுத்தியோர்
விரட்டியோர், மிரட்டியோர்
எண்ணிலடங்கார்!

ஆயினும் நாஞே கலங்கிடவில்லை!
எடுத்த பேஞவை எறிந்திடவில்லை!
என் மனச்சாட்சி
ஏற்றுக் கொண்டதை
எழுதிட என்றும் நான்
அஞ்சியோனல்லன்! எதிரியின்
காலில் கெஞ்சியோனல்லன்!

"கொலை வெறி கொண்டோன்
கொள்ளைக்காரன்
பட்டம் பெருதான், பாமரன்
அரசியலறியான், ஆத்திரக்காரன்"
இவ்வாறெல்லாம் எம் தம்பி மீது
கல்லை விட்டெறிந்தோர்
கணக்கிலடங்கார்!
பணமுதலைகளும் தமிழீழத்தின் மேல்
பற்றுப்போல் நடித்த பற்றிலா நாய்களும்
இனமானமிழந்த 'சோ' தாக் கும்பலும்
தம்பியை, எங்கள்
தமிழீழத் தலைவனை,
திட்டிய போதெல்லாம்
எரிமலையொன்று
வெடித்தது எனக்குள்!

வழக்குமன்றில் பொய்யுரைபேசி
உண்மைக்கொலைஞனை
விடுவிப்போரும்
ஈழச் சிக்கலை வணிகமாக்கி
உலகத் தமிழரின் நிதி பறித்தோரும்
தானைத் தலைவனை
ஏளனம் செய்தனர்!
பழைமை வாதிகளும்
பரம்பரைத் தலைமையும்
மேல்தட்டு வர்க்கமும்
ஏற்குமா தம்பியை?

என் நெஞ்சு கொதித்தது!
வெள்ளை வேட்டியில்
கறைபடியாமல்,
கறுப்புக் 'கோட்' 'டை' கழற்ருமல்
விடுதலை பேசிய விந்தை மனிதரை
அரசியல் வாதியின் அயோக்கியத்தினை
வாளினும்வலிய என் பேஞ கொண்டு
சாட்டையடி தந்து சந்தியில்
நிறுத்தினேன்!

குடத்து விளக்காய்
இருந்த நம் **'தம்பி'** யை
குவலயமறிந்திட கொள்கை முரசமாய்
வேங்கை எழுந்தது வீரத்துடனே!

'தம்பி'யின் ஆற்றலை
தனிப் பெரும் பண்பை
தன்னையழித்து
தமிழினம் வாழ்ந்திட
அன்னவன் செய்த
அரும்பெருஞ் செயல்களை
எழுதினேன் ஏட்டில்
எல்லோரு மறிந்திட!

எங்கள் தம்பி பிரபாகரன்
ஈழத்தலைவன் பிரபாகரன்
அவனே எமது வழிகாட்டி!

என்றே எழுந்த எழுச்சிப் பண்
ஈழ மண்ணில் மட்டுமன்றி
இந்தியத்தின் தமிழ்நாட்டில்
ஆறு கோடித்தமிழருடன்
அகில உலக நாடுகளில்
வாழும் தமிழர் கூட்டமெலாம்
வாழ்த்தும் தமிழன் **'தம்பி'** யன்ருே?
தமிழீழ நாட்டார் வேட்கையொன்றே!
தமிழீழமெனப்படும் தாய்த்திருநாட்டை
மீள அமைத்து விடுதலை பெற்று
வாழப் போரிடுவது எம் முரிமையன்ருே!

போர்த்துக்கீயன், ஒல்லாந்தன் பின்
ஆங்கிலேயன், சிங்களவன்,
இத்தனை பேருடன் இந்திய நாடும்
ஈழ மண்ணை ஆக்கிரமிப்பதா?
**இந்திய ராணுவம் ஈழம் வந்தது**
**ஈழத்தமிழர்க் குதவிடவல்லவே!**

பொங்கி எழுந்திடும் விடுதலை உணர்வை
"தமிழீழமே எம் தாரக மந்திரம்"
எங்கும் எழுந்த இத்தேசிய அலையை
சங்கொலி எழுப்பும் புலிகளின் உறுமலை
தமிழீழ எழுச்சிக்கு வடிவமைத்திட்ட
விடுதலைப் புலிகளை வேட்டையாடிட
வந்தனர் இந்தியப்படைகள் ஈழத்துள்
மண்டியிட்டனரா தமிழீழ மக்கள்?
'வண்டி' விட்டனர் அவர் தலை மீது!

அச்சம் என்பது மடைமையடா
அஞ்சாமை தமிழரின் உடைமையடா
அடிமை வாழ்வினைத் துடைத்திடவே
எம் ஆருயிர்தனையும்
அர்ப்பணிப்போமெனச்
செயற்படும் புலிகளின்
தனித்தலைவன்!
எழுந்தனன் பிரபாகரன்
எரிமலையாய்
இந்தியப்படைகள்
அஞ்சி நடுங்கிட
ஈழ மக்கள்
எழுச்சிப் பண் பாடிட!

சிங்களப் படை அனைத்தும்
புலிப்படையிடம் மோதித் தோற்று
முகாம்களுக்குள்ளே முடங்கிய பின்னர்
ஜே.ஆர். அழைத்தான்–
இந்தியப்படைகளை!
ஓரிரு நாளில் ஒரு இலட்சம் படை
வந்து குவிந்தது தமிழீழ மண்ணில்!
**தமிழரைக் காக்கவா இந்தியம் வந்தது?**
தமிழரின் இயக்கமாம்
புலிப்படை இளைஞரை
வேரோடழிக்கவே உலக வல்லரசுகளில்
நான்காம் பெரும்படை ஈழம் வந்தது!

"இருப்பதோ ஆக ரெண்டாயிரம் புலிகளே!
இவர்களை அழிப்பதா எமக்குப் பெரிது?
எழுபத்திரண்டு மணிகள் போதும்
புலிகளை அழித்துத் துடைப்போமென்று
இறுமாப்புடனே இந்திய ராணுவம்
ஈழ மண்ணுள் நுழைந்ததாயினும்
சண்டை துவங்கிய முதல் நாளன்றே
சரீரம் சிதறிட இறந்தனர் பல
ராணுவத்தினர்!
**இந்திய வீரம் 'புலிகளால்' உடைந்தது!**
**இந்திய ராணுவம் ஈழத்தமிழரை**
**காக்கவா வந்தது? அல்லவேயல்ல!**
சிங்கள ராணுவக் கொடுமையிலும் விட
இரண்டு மடங்கு இந்திய ராணுவம்
ஈழத்தமிழரை வேட்டையாடியது!

(17ஆம் பக்கம் பார்க்க)

# லண்டன் 'கார்டியன்' பி.பி.சி நிருபர் தகவல்....

களின் அதிரடிப்படைக் குழு, 11-12-1989 திங்கள் அதிகாலை 3000 பேரைக் கொண்ட T.N./A/யின் பிரதான முகாம் மீது கடும் தாக்குதல் நடத்தினர். எதிர்த்தரப்பு வேரோடழிக் கப்பட்டது.

87 குண்டுகள் பாய்ந்ததும், துணியால் மூடப்பட்டதுமான பிரேதங்கள் உள்ளூர் பிண அறையில் போடப்பட்டிருந் தன. கடந்த சில மாதங் களாகத் துப்பாக்கி முனையில் பலாத்காரமாகச் சேர்க்கப் பட்ட சிறுவர்களின் உடல்கள் அக்கும்பலுக்குள் காணப் பட்டன.

மகோன்னதமான தார்மீக மும் கொள்கைப் பிடிப்பு முள்ள புலிப்படையின் முன் னால் — எண்ணிக்கையில் பெருந் தொகையினராக இருப்பினும், நவீனமான ஆயு தங்கள் வைத்து இருப்பினும் T.N.A. பையன்களால் புலிப் படையினருக்கு ஈடு கொடுக்க முடியாது.

புலிகளால் கைது செய் யப்பட்ட TNA வாலிபர் ஒருவர் பின் வருமாறு கூறினார்:- "எனக்கு போதை ஏறக்கூடிய அதிசக்தி வாய்ந்த சாராயமும், ஒரு றைபிளும் தந்துவிட்டு, "சுடு சுடு" என்று கட்டளையிட்டனர்."

சோதனைச் சாவடிகளில் இப்போது புலிப்படை இளை ஞர்களே காவல் புரிகின்ற னர். முக்கியமான கட்டடங் களைத் தமது வசமே வைத்துக் கொண்டுள்ளனர். மட்டக் களப்பு ரயில்வே நிலையக் கண்காணிப்பவராக இருப்ப வர், நஹீல் எனும் பெயருடைய ஓர் இஸ்லாமிய இளைஞர் வயதோ ஆகப் பதினாறுதான். ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர், என்னை இழுத்துக் கொண்டு போய், கையாலும், தடிகளா லும் கண்டபடி அடித்தனர். நான் 14 வயதிலேயே விடு தலைப் புலிகள் இயக்கத் தோடு என்னை இணைத்துக் கொண்டு விட்டேன்" என்று அவ்விளைஞர் கூறினார்.

மட்டக்களப்பு மாநகருக் குள் நுழைய வேண்டுமானால் ஸ்ரீலங்கா பொலீஸ் அதி காரிகளும்சோதனைச் சாவடி யில் வண்டியை நிறுத்தி புலிப்படை இளைஞரின் அனு மதிபெற்றபின்பே நகருக்குள் நுழைய முடியும். வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பிற்கு மாகாணக் காவல்படையொன்று நிறுவப் பட வேண்டும் என்று செப்டம்பர் உடன்படிக்கை யில் குறிப்பிட்டிருப்பினும், இன்றைய தமிழீழ மாநில நிலை முற்றிலும் மாறியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பொலீஸ் சுப்ரீன்டெண்ட் எம். எஸ்.ஸ்டீபன் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ஒரு விசித்திரமான அணுகுமுறையைப் பின்பற்று கிறார். "யாராவது சண்டை யிட்டால், எதற்காக நாம் போய் அதில் தலையிட வேண டும்? எதற்காக பொலீஸ் தலை யிட வேண்டும்-" மட்டக் களப் பில் புலிகளுக்கும் T.N.A.க்கும் இடையில் நடந்த சண்டை பற்றியே அவர் இக்கருத்தினை வெளியிட்டார்.

இந்திய ராணுவம் வெளி யேறியதுடன், தமிழீழ மாநி லத்தில் அமைதியும் சமா தானமும் நிலவ நடவடிக்கை எடுக்கப்படுமென கூறப்பட் டிருப்பினும், தமிழர் குழுக் களிடையே மோதல்கள் நடை பெற்று வருகின்றன.

இந்திய ராணுவம் முழு வதுமாக வெளியேற்றப்பட்ட தும், இந்திய ராணுவத்துக்கு அடிமைகளாக வேலை செய்து வந்த தமிழ் குழுக்கள் அழிக்கப்பட்டு விடும் என் பது இந்தியாவுக்கு உள்ள அச்சம். T.N.A.க்குத் தேர்ந்த திருகோணமலை போன்ற முக்கிய கேந்திரங்களிலுள்ள இந்தியப்படை வெளியேறு வது சற்றுப் பின் போடப்பட லாம்.

"தமிழ்தேசிய இராணுவம்" (T.N.A.) தனது சவக்குழியைத் தானே தோண்டி வருகிறது என்பதே ஸ்ரீலங்கா அரசின் எண்ணமாக உள்ளது.

—இவ்வாறு கார்டியனில் அதன் நிருபரும், பி.பி.சி. (B.B.C.) செய்தியாளருமான திரு. கிறிஸ் நட்டால் (Mr. Chris Nuttal) கிழக்கு மாகாணத் திலும், குறிப்பாக மட்டக் களப்பு மாநகரிலும் சுற்றுப் பயணம் செய்து அங்குள்ள நிலைமையை நேரடியாக அனுப்பியுள்ளார். 16-12-1989 கார்டியனில் இச்செய்தி வெளிவந்துள்ளது.

## பொலீசாருக்கு எச்சரிக்கை!

மட்டக்களப்பு மாவட்ட பொலீஸ் சுப்ரீண்டெண்ட் எம். எஸ். ஸ்டீபன், பத்திரிகை யாளர் மத்தியில் கூறியிருப் பதை தமிழ்நாட்டில் வெளி வரும் 16-12-89 மாலை நாளே டொன்று பின்வருமாறு வெளி யிட்டுள்ளது.

"மட்டக் களப்பைப் பிடிக்க விடுதலைப் புலிகள் முன் கூட் டியே திட்டமிட்டு அந்தப் பகுதி முழுவதையும் சுற்றி வளைத்து விட்டனர். தாக்குதலுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு, இரண்டு புலிகள் மட்டும் மட்டக் களப்பு பொலீஸ் நிலையத்துக்கு வந்த னர். "தமிழ்தேசியப் படையை" விரட்டியடிக்கப் போகிறோம். இலங்கைப் பாதுகாப்புப் படையினரை ஒதுங்கியிருக் கச் சொல்லுங்கள்" என்று எச்சரித்து விட்டுப் போய் விட்டனர்.

எங்களுக்கு விடுதலைப் புலிகள் போலப் போர்ப் பயிற்சி கிடையாது. நவீன ஆயுதங்களும் இல்லை. அத னால் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. விடு தலைப் புலிகளைத் தடுத்து நிறுத்தும் துணிவும் எங் களுக்கு இல்லை.

"இறுதியில் தமிழ் தேசியப் படையினரை விடுதலைப் புலி கள் கூண்டோடு ஒழித்து விட்டனர். இப்பொழுது மட் டக் களப்பு பகுதி முழுவதும் விடுதலைப் புலிகள் கையில் இருக்கிறது.

"மட்டக் களப்பு மாவட்டத் தின் முக்கிய பகுதிகளில் விடு தலைப் புலிகளே காவலுக்கு நிற்கின்றனர். 2000 புலிகள் மிக நவீன துப்பாக்கிகளுடன் ரோந்து சுற்றி-வருகிறார்கள்.

"மட்டக் களப்பு விமான நிலையத்திலிருந்து நகருக்குள் செல்ல வேண்டுமானால், அங்குள்ள சோதனைச் சாவடி யை (Checkpost) கடந்துதான் செல்ல வேண்டும்.

"அந்தச் சோதனைச் சாவ டியை 16 வயது நிரம்பிய ஒரே யொரு விடுதலைப் புலிதான் காவல் காத்து வருகிறார். அவ ரிடம் அனுமதி பெறாமல் யாரும் நகருக்குள் செல்ல முடியாது. பத்திரிகை நிருபர் களை அழைத்து எமது பொலீ சார் கூட அந்த 16 வயது விடு தலைப் புலியிடம் அனுமதி பெற் றுத்தான் செல்ல முடிந்தது.

அந்த 16 வயது விடுதலைப் புலியிடம் இருந்த எந்திரத் துப்பாக்கியும், வெடிகுண்டு களும் எமது பொலீசாரிடமே யில்லை. மட்டக்களப்பு முழு வதும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ்வந்து விட்ட தென்பதற்கு இதுவே உதா ரணம்."

## புலிகள் நிபந்தனை

இலங்கைத் தீவின் அர சியற் கட்சிகளில் ஒன்றாக "விடுதலைப் புலிகள் — மக்கள் முன்னணி" தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற்பிரிவு அங்கீகரிக்கப் பட்டுள்ள போதிலும், அக கட்சியின் பொதுச் செயலா ளர் "யோகி", பி.பி.சிக்கு அளித்துள்ள பேட்டியில்...

"அரசியல் சட்டத்தின் ஆறு வது பிரிவுக்குக் கொண்டு வரப்பட்ட திருத்தம் நீக்கப்பட வேண்டும். தமிழ் தேசிய இனத்தின் மறுக்க முடியாத "சுதந்திர சுய நிர்ணய உரி மையை" மறுக்கும் இச்சட்டத் திருத்தம் முற்றாக நீக்கப்பட் டால் மட்டுமே எமது கட்சி தேர்தலில் போட்டியிடும். அடிப்படை உரிமைகளை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்."


என்று கூறியுள்ளார்.






திருப்பத்தூரில் அண்மையில் நடைபெற்ற தமிழர் இனஎழுச்சி மாநாட்டில் முறையே கவிஞர் அப்துல் ரகுமான், கவிஞர் இக்பால், ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் உரையாற்றுவதையும், மேடையில் தமிழீழத் தலைவர் பிரபா படம் வைக்கப்பட்டிருப்பதையும் மேலே காணலாம்.







தலைவர் பிரபாவின்
பலவித
தோற்றங்கள்!









# இந்தியப்படையும் EPRLF கும்பலும் சேர்ந்து நடத்திய படுகொலைகள்!

இந்திய உளவுத்துறை நிறுவனமான 'ரா'வின் மேற்பார்வையில் மீண்டும் ராணுவப் படை ஈழத்தில் அட்டூழியத்தைத் தொடர்ந்துள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த இரண்டு ஆண்டுகளாக (10.10.87 இல் இருந்து) இந்தியப்படை, சிறீலங்காப்படை மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃ.ப், ஈஎன்.டி.எல்.எப், டெலோ, புளோட் கும்பல்கள் விடுதலைப் புலிகளை அழிக்க முயன்று வந்துள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளும் யாரும் சமாதானம், பேச்சு வார்த்தை, ஒற்றுமை எனப் பேசவில்லை. புலிகள் அழிக்கப்படப் போகிறார்கள் எனக் கவலைப்படவில்லை. இந்த இரண்டு ஆண்டுகளில் 6000 தமிழ், முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 660 விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

மக்கள் பலம் கொண்ட விடுதலைப்புலிகள் அழிக்கமுடியாது. விடுதலைப் புலிகள் இல்லாமல் சமாதானம் இல்லை என்பதை உணர்ந்து சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச முன்வந்தது.

'அமைதிப்படை' என்னும் பெயரில் வந்த இந்திய ஆக்கிரமிப்புப் படை, ராணுவத்தீர்வு மூலம் தமது நலனைக் காக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டது. தமது ஆக்கிரமிப்புப் படையைத் திருப்பி அழைக்க முடிவு செய்தது. இந்தியப்படை திரும்பிச் செல்லும் என்பதில் பலருக்குச் சந்தேகம் இருக்கின்றது.

இந்தியப்படை திரும்பிச் செல்கின்றது என்றதும், இந்தியாவின் கைக்கூலிகள் ஆட்டங்கண்டுள்ளனர். தமது சுய போக்குகளுக்கு ஆபத்து வந்து விட்டது என்பதை இவை உணர்ந்துள்ளன.

தம்மால் பாதுகாக்கப்பட்ட இந்தக் கும்பல்கள் ஒரே நாளில் தமிழ், முஸ்லிம் மக்களால் தூக்கி வெறியப்படுவார்கள் என்பது இந்திய அரசிற்குத் தெரியும்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் தனது கூலிப்படைக்கு ஒரு ராணுவத்தை இந்திய அரசு உருவாக்குகின்றது.

'ரா'வின் முக்கிய அதிகாரிகளில் ஒருவரான சந்திரன் எனப்படும் சந்திரசேகரம் இப்போது அடிக்கடி திரிகோணமலைக்கு வந்து நேரடியாகப் பயிற்சிகளை மேற்பார்வையிடுகின்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃ.ப், என்.டி.எல்.எ.ஃ.ப், டெலோ, புளோட், ஈரோஸ் போன்றவற்றுக்கும் வலுக்கட்டாயமாக பிடிக்கப்பட்ட இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் இந்தியப்படை பயிற்சியளிக்கிறது.

இந்திய அரசு தன் நலனைக் காக்க 12,000 பேரைக் கொண்ட ஒரு படையை உருவாக்குகின்றது.

இவர்களால் தமிழ் பேசும் மக்கள் பாதுகாக்கப்பட மாட்டார்கள். மாறாக இவர்களின் ஆயுதங்கள் இந்த மக்களைக் கொலை செய்யவும், தமிழ் பேசும் பெண்களைக் கடத்திச் சென்று இந்தியப் படையின் காமப்பசிக்கு உள்ளாக்கவும், கொள்ளையடிக்கவுமே பயன்படும்.

அன்று பல இளைஞர்களை, இளம் பெண்களை ஆயுதப்போராட்டம் என ஏமாற்றி இந்திய அரசிற்கு விற்றார்கள்.

இன்று தமது பாதுகாப்பிற்காக பல அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் இளம் பெண்களையும் கட்டாயப் பயிற்சிக்காகப் பிடித்துச் செல்கின்றார்கள்.

பிடித்துச் செல்லப்பட்ட பிள்ளைகள் பற்றி விசாரிக்கச் சென்ற பெற்றோர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்படுகின்றார்கள். தமது அதிகாரத்தையும் சுகபோக வாழ்க்கையையும், பாதுகாக்க அப்பாவி இளைஞர்களையும் இளம் பெண்களையும் முன்னணிப்படையாக உபயோகிக்கத் திட்டமிட்டிருக்கின்றார்கள்.

இவர்களிடமிருந்து தப்பியோட முயன்ற பலர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கட்டாயப் பயிற்சிக்காக தொடர்ந்து இளைஞர்களும் இளம் பெண்களும் பிடிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு கொண்டு செல்லப்படும் இளைஞர்களையும், இளம்பெண்களையும் மது அருந்தச் செய்வது, பெண் கடத்தல் மற்றும் ஆபாச நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப்படை வெளியேறிய முகாம்களிலெல்லாம் இந்தக் கும்பல்கள் முகாம் அமைத்துள்ளனர்.

திருக்கோயில், காரைத்தீவு மூன்றாம் குறிச்சி ஆகிய இடங்களில் டெலோவும், கோளாவிலில் ஈ.என்.டி.எல்.எ.ஃ.பும் அக்கரைப்பற்று, வெலிங்டன் இம்மா கொட்டகை, காரைத்தீவு, சம்மாந்துறை, சம்புலிகை மேகலா சினிமாக்கொட்டகையில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃ.பும் அக்கரைப்பற்று சினிமாக் கொட்டகையில் ஈரோசும் முகாம்கள் அமைத்துள்ளன. தமிழ் பேசும் மக்களையும் அவர்களின் சுதந்திரத்தையும் அழிக்க ஒரு பெரும்படையை உருவாக்கிக் கொண்டு ஜனநாயகம், சமாதானம் என இக்கும்பல்கள் பேசுகின்றன.

புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு ஜனநாயக வழிக்கு வரவேண்டும் எனவும் இக்கும்பல்கள் வேண்டுகோள் விடுக்கின்றன.

மக்களால் தெரிவு செய்யப்படாத மாகாண சபை இந்திய அரசின் கைபொம்மையாக இந்திய அரசின் நலன்களைப் பாதுகாக்க ஆயுதம் சந்தி நின்று தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்புப் பற்றிப் பேசுகின்றது. ஜனநாயகம் பற்றிப் பேசுகின்றது.

எமது மக்களை தேர்தலில் சந்திக்கத் துணிவில்லை. எமது மக்களைத் தேர்தலில் சந்திக்கத் துணிவில்லையாயின் தமது பாதுகாப்புத்தான் முக்கியமென இவர்கள் கருதினால் எம்மிடம் சரணடையலாம். நாம் பாதுகாப்புத் தருவோம். எம்மிடம் பலர் சரணடைந்து வருகின்றார்கள். நாம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றோம்.

அதை விடுத்து தம்மையும் இந்திய அரசின் நலன்களையும் பாதுகாக்க தொடர்ந்து கட்டாய படைப் பயிற்சியை விரிவாக்கி வருவதாயின் அப்படையாலேயே இவர்கள் அழிக்கப்படுவார்கள். இவர்கள் மற்றும் இந்தியப்படைகளின் மக்கள் விரோத நடவடிக்கைகள் வருமாறு:-

24.10.89 அன்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் எழுத்து வினைஞரான பெரிய தம்பி யோகன் (வயது 35, இரண்டு பிள்ளைகளின் தந்தை) என்பவரை இந்தியப் படையும் டெலோவும் சுட்டுக் கொன்றுள்ளன.

31.10.89 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் வண்டியை கிளிநொச்சியில் வழி மறித்து ஈ.பி.ஆர்.எல்.எ.ஃ.ப், ஈ.என்.டி.எல்.எ.ஃ.ப் கும்பல்கள் வண்டியிலிருந்த 250 அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கடத்திச் சென்றுள்ளன. இதே நாள் பரந்தனில் பல இளைஞர்களை இக்கும்பல் கடத்திச் சென்றுள்ளன. இதே நாளில் மட்டக்களப்பிலுள்ள அம்பலாந்துறை, கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு போன்ற இடங்களைச் சுற்றி வளைத்த இந்தியப்படைகளும் ஈ.என்.டி.எல்.எ.ஃ.ப் யினரும் அங்கிருந்த 100 இளைஞர்களைப் பிடித்து மணற்பிட்டி

---

(.?.ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆறாயிரம் அப்பாவித் தமிழர்கள்
கோரமாய்ச் சுட்டுக் கொல்லப்பட்டனர்!
அடியும் உதையும் அக்கிரமங்களும்
காந்தி நாட்டு ராணுவம் செய்தது!
ஆயிரமாயிரம் தமிழ்க்குல மகளிரின்
மானம் கெடுத்து கற்பையும் உறிஞ்சினர்!
கொலையும் செய்து தெருக்களில் வீசினர்!
வணிகர் கடைகளில், தமிழரில்லங்களில்
கொள்ளையடித்த நகை, பொருள், பெறுமதி
கோடிக் கணக்கில்! கோடிக்கணக்கில்!!
சிறையிடப்பட்டோர் சித்திரவதைகளின்
உச்சக்கட்டத் துயரனுபவித்தனர்!
மக்களோடு தம்மைக் கார்த்திட எழுந்த
புலிகளின் போரோ, புதியதோர் பரணி!

இரண்டரையாண்டுகள் நடந்தப்
இப்போரில்
புலிகளின் தாக்குதல் காரணமாக
இந்திய ராணுவம் பேரழிவுற்றது!
தலையற்றவர் பல்லாயிரம்
உடல் சிதறியோர் பல்லாயிரம்!
கையற்றவர், காலற்றவர்
கண்ணற்றவர், காதற்றவர்
எண்ணிலடங்கா இந்தியப்படையினர்!
முப்பது காசுக்குக் காட்டிக் கொடுத்தான்
கிறிஸ்துவை யூதாஸ் எனும் துரோகி!
முப்பது இலட்சம் தமிழீழ மக்களை
தமிழின மாந்தரின் விடுதலைப் போரை—
முதுகில் குத்தவும் தமிழரை பிரிக்கவும்
ஆட்சி அதிகாரம் எதுவுமற்ற

மாகாண சபை எனும் எலும்பைக்காட்டி
தமிழரில் கயவரை இந்திய அரசு
எடை போட் டறிந்து தன்
கைக்குள் போட்டது இந்திய அரசு!

ஈழ விடுதலைக்கு எதுவுமே செயாத
EPRLF, ENDLF, TELO, மற்றும்
'புளாட்' என்பாரை வலையில் போட்டு
கூலிப்படையாய் ஆக்கிய திந்தியா!
ஈழவிடுதலைக்கு எதிரிகளாகி
மக்களின் உடமையை கொள்ளையடித்து
சமூக விரோதிகள் எனப் பெயர் பெற்றோர்
இந்தியாவின் நண்பர்களாயினர்.
சிங்களத்தின் சட்டத்துக்கமைந்து
துப்பாக்கி முனையில் மக்களை மிரட்டி
தில்லு முல்லுத் தேர்தல் நடத்தி
'பொம்மை' முதல்வராய் பதவி பிடித்தோர்
கொல்லைப்புறத்தில் புலிகளை எதிர்த்திட
இந்தியா தந்த ஊக்கத்தில் திளைத்து
பள்ளி செல்லும். மாணவர் சிறுவரை
கட்டாயப்படுத்தி இழுத்து வந்து
முக்காலிப்படை (T.N.A.) முகாம்கள்
அமைத்தனர். இந்தியா பணமுடன்
பயிற்சியளித்து கருவியும் தந்தது!
தான் வெளியேறினும்
புலிகளை அழித்திட
துரோகப்படையை அமைத்திடுவதில்
இந்திய ராணுவம் வரிந்து கட்டியது!
மானத்தமிழனும் துரோகித் தமிழனும்
தமக்குள் மோதிச் சாவதற்கென்றே
இந்திய வேடன் விரித்த வலையே
T.N.A. எனுமினத்து துரோகப்படை!

இந்திய ராணுவம் தமிழீழத்தில்
தமிழினக் கொலையில் ஈடுபட்டது
புலிகளை அழித்திட வியூகம் அமைத்தனர்!
வியூகம் அனைத்தையும் புலிகள்
உடைத்தனர்!

போதும் போதும் இந்தச சண்டைகள்!
வீணாக நாம் ஏன் செத்திட வேண்டும்!
எந்த நிமிடமும் எந்த நிலையிலும்
எங்கும் புலிகள் தாக்கலாம் எமை!
இருபதாண்டுகள் செல்லினும் புலியை
வெற்றி கொள்ளுதல் இயலாத காரியம்!
இந்திய ராணுவம் இந்த உண்மையை
ஒப்புக் கொண்டது உலக நாடறிந்திட!

சீனப் போரில் ஏற்பட்ட இழப்புக்கள்
பாகிஸ்தான் போரில் நிகழ்ந்த அழிவுகள்
அனைத்தையும் விட
ஈழப்போரில் இந்திய ராணுவம்
ஈட்டிய அழிவுகள் அளப்பில புலிகளால்!
என்று புலம்பினர் இந்திய அரசினர்!

வெற்றிகரமாக இந்திய ராணுவம்
விடை பெறுகின்றது ஈழத்திலிருந்து!
அராஜகச் செயலும் அட்டூழியமும்
துரோகத் தனமும் துட்டர் கொட்டமும்
விடுதலைக்காகப் புரட்சி நடத்திடும்
மக்களின் முன்னே தூள் தூளாகும்!

இருபதாம் நூற்றாண்டில் ஈடிணையற்ற
புரட்சியாளன்! பிரபாகரனெனும்
பெயருடைத்தலைவன்! உறுதி நெஞ்சினன்!
ஒளியுமிழ் கண்ணினன்! உலகத்தமிழர்
நெஞ்செலாம் நிறைந்த நீலமேனியன்!
வஞ்சக மற்ற அவன் சிரிப்பிலே
வையகமெங்கும் தமிழர் மயங்குவர்!

நேர்மை, வாய்மை, தூய்மை
அவன் வழி வெற்றித் திருமகன்
அவனது துணைநலம்!
'சுதந்திர ஈழம்' அவனது குறிக்கோள்!
'கோழைகள் விலகட்டும் வீரர்
பின் தொடரட்டும்' என்று முழங்கும்
எம் மருத்தலைவன்!
சலுகைகளுக்கோ பதவிகளுக்கோ
விலை போகாத கர்ம வீரன்!
தமிழீழம் அவன் உயிர்!
தமிழீழம் அவன் உடல்!
உயிரும் உடலும் உழைப்பும்
தமிழீழ மண்ணின் விடுதலைக்காய்த் தரும்
தலைவன் பிரபா! அவன் புகழ் ஓங்குக!
ஐந்து நூறு ஆண்டுகளாய்
அடிமைச் சேற்றில் புதையுண்டு
விடியலுக்கு வழியின்றி
வீழ்ந்து கிடக்கும் தமிழர்களை தூக்கி
நிறுத்தி துயர் துடைத்து
வாழ்ந்திடத் தமிழீழ தேசத்தின்
முழுமையான விடுதலைக்கு
தன்னையழித்து ஒளிபரப்பும்
தண்ணொளி மெழுகுவர்த்தியாகி
வாழ்ந்திடும் தலைவன் என் தம்பி
வாழிய நிலைத்து வாழியவே!

# தமிழீழ விடுதலைப்போரில் புலிகள் இயக்க மகளிரின் பங்கு! தொடர்ந்தும் போராட மகளிர் அணி உறுதி!

'விடுதலை தேடிய வேங்கைகளே! உங்கள் கனவுகளைச் சுமந்து இன்னும் பல நூறு பெண்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். சமதர்ம தமிழீழ இலட்சியம் என்ற வீர எண்ணம் நிறைவேறும் வரை உங்கள் பாதையில் எங்கள் பயணம் தொடரும். தமிழீழ தேசத்தின் வரலாறு நாளை எங்கள் கதையைச் சொல்லும். அத்தோடு எமது தமிழினமும் பெண்கள் சமுதாயமும் தலை நிமிர்ந்து நிற்கும்'.

விடுதலை தேடிய வேங்கைகள்' என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

'இலங்கைத் தீவின் வரலாற்றில் 400 ஆண்டுகளுக்கும் மேலாக (1505-1948) எமது தேசம் போர்த்துக்கீசியர், ஒலலாந்தர் ஆங்கிலேயர் ஆகிய அன்னிய நாட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு சூறையாடப்பட்டு வந்தது. அக்காலக் கட்டத்தில் இலங்கைத் தீவின் தென்பகுதியில் சிங்கள மக்களும், வடபகுதியிலும், வட மத்தியிலும், கிழக்குப் பகுதியிலும் தமிழ் மக்களும் போராடிக் கொண்டுதான் இருந்தார்கள். இம்மக்களுக்கு தலைமை தாங்கிய சிங்கள மன்னர்களும், பண்டார வன்னியன், சங்கிலியன் போன்ற தமிழ் மன்னர்களும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடி பணிய மறுத்து வீர மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

### ஏன் ஆயுதம் ஏந்தினோம்?

இதன்பின் ஏறக்குறைய 200 ஆண்டுகள் நாம் அடிமை நிலைக்குள் ஆளாக்கப்பட்டோம். அன்னியபடை இத்தீவை விட்டு அகன்றபோது (1948) நாம் சிங்கள மேலாதிகர்களால் அடக்கி ஒடுக்கப்படும் நிலையை அடைந்தோம். எம்மின மக்களின் அகிம்சை போராட்டங்கள் பலாத்காரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டதனால் எமது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாம் ஆயுதம் ஏந்த வேண்டியவர்களானோம்.

உலகில் எந்தவொரு தேசிய விடுதலை இயக்கமும் பிராந்திய வல்லாதிக்கம், அன்னிய ஏகாதிபத்தியம், இனமேலாதிக்கம் போன்ற அடக்குமுறைகளை தகர்த்தெரியும் சிறந்த போர்த் தந்திரோபாயமாக கொரில்லா போர் முறையைத் தேர்ந்தெடுக்கின்றது. இக்கொரில்லாப் போராட்டம் எத்தனையோ தேசிய இனங்களை விடுவித்துள்ளது.

### கொரில்லா போர் முறை

இத்தகைய ஓர் போர் முறையைத்தான் இன்று எமது விடுதலை இயக்கம் மேற்கொண்டிருக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது மண்ணை நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது உரிமையை மீட்பதற்காகவும், அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது இனத்தைப் பாதுகாப்பதற்காகவும் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டியது தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் பொதுவான கடமையாகியது. இதை உளப்பூர்வமாக உணர்ந்து கொண்ட தமிழீழப் பெண்கள், தம்மையும் கொரில்லாப் படையில் சேர்த்துக் கொண்டனர். அத்தோடு இத்தேச விடுதலைப் போராட்டத்தோடு தம்மை அழித்துக் கொண்டிருக்கும் சமூக அடக்குமுறையைத் தகர்த்தெறியும் வழிகளையும் வகுத்துக் கொண்டனர்.

எமது கொரில்லாப் போராட்டத்தின் சரியான போக்கை பல சந்தர்ப்பங்களில் கண்டு கொள்ள முடியும். ஸ்ரீலங்காவுடனான மோதலில் குறுகிய கால இடைவெளிக்குள் தமிழ்ப் பிராந்தியங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தோம்.

தமிழீழ விடுதலைப் போர் உன்னத நிலையை அடைந்து வரும்பொழுது அதனை அழித்தொழிக்கும் நோக்குடன் எமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்ட இந்திய வல்லாதிக்கத்தின் முகத்தில் கரியைப் பூசினோம். உலகமே வியந்து பார்க்கின்றது. இத்தகைய சாதனைகளை ஈட்டுவது பெண்கள் படையணி வீரம் செறிந்த சாதனைகளைப் படைத்துள்ளது என்பதை நாம வார்த்தைகளாலோ, எழுத்துக்களோ தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

ஸ்ரீ லங்கா ராணுவத்தினரையும், அவர்களில் 9 பேர்களின் உடல்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றிய 12.10.89 இல் மன்னாரில் நடந்த நேரடி மோதலில் லெப். விக்டரின் தலைமையில் பெண்கள் படையணி தமது பணியைச் செய்தார்கள் என்பதும், யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதல் 5.7.87 இல் நடந்த கரும்புலி கேப்டன் மில்லரின் நெல்லியடி மகாவித்தியாலய ராணுவ முகாம் மீதான தாக்குதல், வல்வெட்டித்துறை மயிலியதனை முகாம் மீதான தாக்குதல். இவை போன்ற இன்னும் பல தாக்குதல்களில் பெண்கள் படையணி பெரும் பங்காற்றியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய ராணுவத்துடன் முதல் தாக்குதல்

இவை மட்டுமல்ல 10.10.87 இல் தமிழீழ இந்தியப் போர் ஆரம்பமானபோது அன்றைய தினம் கோப்பாயில் உலகில் நான்காவது பெரிய ராணுவமான பிராந்திய வல்லாதிக்க காலாக்ரையின் பெருமளவிலான கவச வாகனங்களின் தொடரை இடைமறித்து முதல் தாக்குதல்களைத் தொடுத்தவர்களும் இவர்களே. இக்களத்தில் முன்னணியில் நின்று 2- வது லெப்டினன்ட் மாலதி காலில் சூடுபிடித்து சைனட் உட்கொண்டு தமிழீழ இந்தியப் போரில் முதல் சாவைத் தழுவிக் கொண்டவர். இதே களத்தில்தான் எமது தோழிகள் தயா. ரஞ்சி, கஸ்தூரி ஆகியோரும் விடுதலைக்காக தம்மை முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

அன்னியன் எமது மண்ணை விட்டகலும் வரை எமது போரைத் தொடர்வோம் என்று போர்க்களத்தில் நின்ற பெண்புலிகளில் விஜியும், ஜனாவும், 19.10.87 இல் கோப்பாயில் நடந்த மோதலில் அன்புத் தோழியர் சபரியும், ரூபியும் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

### தமிழீழம் அடையும் வரை போர்

விடுதலை தேடிய வேங்கைகளே! உங்கள் கனவுகளை சுமந்து இன்னும் பல நூறு வேங்கைகள் அணிவகுத்து நிற்கின்றோம். சமதர்ம தமிழீழ இலட்சிய தாகம் தீரும் வரை உங்கள் பாதையில் எங்கள் பயணம் தொடரும். எமது தேசத்தின் விடுதலை வரலாறு நாளை எங்கள் கதையைச் சொல்லும். அத்தோடு எங்கள் இனமும் பெண்கள் சமுதாயமும் தலை நிமிர்ந்து நிற்கும்.

இதயத்தில் தங்கியுள்ள இவ் இலட்சிய வேங்கைகளுக்கு எமது வீர வணக்கங்கள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

இவ்வாறு 'தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

## இலட்சியவீரர் பிரபாகரன்

**பிரபாகரன் என்று சொன்னாலே பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் உள்ளங்கள் பூரித்துப் போவதும் மெய்சிலிர்த்துப் போவதும் மறுக்கொணு உண்மை.**

1984ல் ஒரு முறை பிரபாகரன் சிங்கள ராணுவத்தால் சுடப்பட்டு இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. அப்போது மிகுந்த வருத்தமடைந்த நெடுமாறன் வாசலில் ஜீப் சத்தம் கேட்க, யார் இந்த வேளையில்? என்று எண்ணிக் கொண்டே வாசலுக்குப் போனார். "நான்தான் வந்திருக்கேன். என் ஆவி அல்ல!" என்று கூறியபடியே பிரபாகரன் இறங்கி வீட்டுக்குள் வந்தார்!

வல்வெட்டித்துறையில் திருமேனியார் குடும்பம் ரொம்பப் பிரசித்தி. அதில் பிறந்த வேலுப் பிள்ளை பிரபாகரன் தமது முன்னோர்களைப் போலவே இறை உணர்வு மிக்கவர். முருக பக்தர். வாரியாரிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். அவரைவிட ஒரு படி அதிகமாகப் பிரபாகரனின் மதிப்பில் உயர்ந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்!

பத்தாம் வகுப்புடன் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த பிரபாகரனின் பள்ளித்தோழர்தான் மாத்தையா என்னும் மகேந்திரராஜா. இருவரும் கொரில்லாப்போர் முறைகளைப் பயின்றது லிபியா நாட்டில்.

பிரபாகரனின் மனைவி மதிவதனி. இது காதல் திருமணம் மட்டுமல்ல. கலப்புத்திருமணமும் கூட. இயக்கத்தின் அனுமதி பெற்று மணந்தார்.

மதிவதனியும் புலிகளுக்கு ஆதரவாகப் பல போராட்டங்களில் கலந்து கொண்டவர். ஆண் குழந்தைக்கு இயக்கத் தோழரில் ஒருவராக இருந்து மரணமடைந்த சார்லஸ் அன்றனி என்பவரின் பெயரைச் சூட்டினார். பிரபாகரன் மகள் துவாரகா 1987 இல் கடுமையான நோய்வாய்ப் பட்டபோதும், மரணத்தைத் தழுவிய போதும் காட்டில் தலைமறைவாக இருந்த பிரபாகரனால் இறுதிச் சடங்குகளுக்குக் கூட வர முடியாமல் போய்விட்டது.

பிரபாகரனின் கொள்கைகள், செயல்முறைகள் ஆகியன. சிலருக்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அந்த லட்சிய வீரரைப் பிடிக்காதவர் யாரும் இருக்க முடியாது!

— கௌசல்யா (கல்கி)

## வீராங்கனை அனித்தா தமிழீழத்தின் ஆன்மா!

தமிழீழ போர் பிராந்தியங்களில் சிக்கலான புவியியல் அமைப்பும் குடிப்பரம்பலும் மிகுந்த பிராந்தியமாக கிழக்குப் பிராந்தியம் இருக்கின்றது. இங்கே எமது கொரில்லா வீரர்கள் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதும் எதிரி மீதான தாக்குதல் இலக்குகளை தேர்ந்தெடுத்துக் கொள்வதும் மிகவும் சிரமத்துக்குரிய விடயமாகும்.

தமிழ் ஈழத்தின் நிலப்பரப்பில் இரண்டாயிரம் சதுர மைல்களில் பெரும் பகுதி தமிழீழத்தில் எல்லை மாவட்டங்களாக கிழக்குப் பிராந்தியத்தைச் சார்ந்ததாகும். எனவே இங்கே சிங்களக் குடிகளும் பொலிஸ் இராணுவ முகாம்களும் பெரும் எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

வன்னி, மன்னார், யாழ்ப் பிராந்தியங்களைப் பொறுத்த மட்டில் இந்த வகையில் சிக்கல்கள் குறைவு. எனவேதான் கிழக்குப் பிராந்தியத்தில் எங்கள் கெரில்லா வீரர்களுக்கு தனது குழுக்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதும் தமக்குத் தேவையான உணவினை சேகரித்துக் கொள்வதும் ஆயுதங்களைப் பாதுகாத்துக் கொள்வதும் சிரமத்துக்குரிய வேலையாக உள்ளது.

ஒரு குறுகிய கவனக்குறைவு கூட கெரில்லா வீரர்களுக்கு மிகவும் பெரிய பாதிப்பை அல்லது இழப்பை ஏற்படுத்தி விட முடியும். இத்தகைய சூழ்நிலையில் தான் பெண்புலி லெப்டினன்ட் அனித்தா தனது பணியினை மேற்கொண்டு வந்தார்.

ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அண்ணளவாக எண்பதினாயிரம் முஸ்லீம்களும், இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் தமிழர்களும் வாழுகின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தார். கெரில்லாக் குழுக்கள் தம்மை நெறிப்படுத்திக் கொள்வதற்கும் இராணுவ இலக்குகளைத் தாக்குவதற்கும் அவசியமான மிக முக்கிய தேவைகளை அனித்தா உறுதியாக நின்று செய்து கொண்டிருந்தார். அவளின் துணிச்சலும் வேலைகளைத் திட்டமிடும் திறனும் எதிரிகளை ஏமாற்றி தனது வேலைகளை நடைமுறைப்படுத்தும் விதமும் மிகவும் போற்றத்தக்கவை.

தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதில், தமிழீழ மண்ணை மீட்டெடுப்பதில் அனித்தா எவ்வளவு உறுதியாக இருந்தாளோ அதே அளவு தமிழ் பேசும் பெண்கள் தம்மை சுதந்திரமுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டிருந்தாள். எனவே தான் சமூக பெண்களைச் சுற்றி அமைந்திருக்கும் சிறையினையும் உடைத்துக்கொண்டு தாயக மண் மீட்புக்காக தன்னை ஒரு கெரில்லா வீராங்கனையாக ஆக்கிக் கொள்ளவும் முடிந்தது.

அவள் தன் உன்னதமான விடுதலைப்பணியைச் செய்து கொண்டிருந்த வேளை கடந்த வருடம் நவம்பர் மாதம் (28.11.88) ஈ.பி.ஆர்-எல்.எப். தேசவிரோதக் கும்பல்களினுல் அடையாளம் காணப்பட்டு களுவாஞ்சிக்குடியில் வைத்து கைது செய்யப்பட்டாள்.

சோதனை இடுவதற்காகவும் சித்திரவதை செய்து தகவல்களைப் பெறுவதற்காகவும் அனித்தாவை ஈ.பி.ஆர்.எல்.எப். தேசத்துரோகிகள் காரியாலத்திற்கு கொண்டு சென்ற சமயம் எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற எமது இயக்க மரபிற்கிணங்க சைனட் உட்கொண்டு வீர மரணத்தைத் தழுவிக் கொண்டாள்.

கிழக்குப் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட முதல் கெரில்லா வீராங்கனை இவள்.

அனித்தா உட்பட தமிழீழத்தில் இதுவரையில் 23 பெண்புலிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

இவர்கள்தமது இன்னுயிரைக் கொடுத்து, நாளை மலரப்போகும் தமிழீழத்தில் ஆன்மா ஆகி விட்டார்கள். இவர்கள் ஈழம் முழுவதும் வரலாறுக வாழ்பவர்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவு மறைந்த வீராங்கனை அனித்தாவுக்கும் ஏனையோருக்கும் வீர அஞ்சலி தெரிவித்துள்ளது.

# புலிகளின் தாக்குதலில் மூன்று இந்திய ராணுவ ஜீப் சேதம்!

2.9.89 காலை 7.45 மணியள வில் மந்திகை முகாமிலிருந்து முற்றுகைக்கு வந்த இராணுவத் தினருக்கு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். பின் அதே அணியினருக்கு ஆலைவிழுந் தான் கிராமத்துக்கு அண்மையில் நீதிமன்றத் அன்ரன் கடை எனும் இடத்தில் மீண்டும் புலிகள் தாக்கி னர். ஓர் இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டார். பின்னர் பருத் தித்துறை இந்திய இராணுவ முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினருக்கு 2ம் குறுக் குத்தெரு எனும் இடத்தில் வைத்து மீண்டும் தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு இராணுவத்தான் காயமடைந்தான்.

அதே நாள் காலை தொண்டமா னாறு இந்திய இராணுவ முகா மிலிருந்து உடுப்பிட்டி இராணுவ முகாம் நோக்கி ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு இராணுவசிப்பாய் கொல்லப்பட் டார்.

7.9.89 மட்டகளப்பிலுள்ள சித்தாண்டி கோவிலுக்கு வேட்டி யுடுத்தி ஆயுதத்துடன் வந்த ஈ. என்.டி.எல்.எப். காடையர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தி னர். இதில் ஈ.என்.டி.எல்.எப். ஐ சேர்ந்த வெங்கட் என்பவர் கொல்லப்பட்டார். ஒருவர் காய மடைந்தார். இதில் எ.கே.–1, ஏ. கே. மகசின் –1 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

8.9.89 பருத்தித்துறை இந் திய இராணுவ முகாமிலிருந்து மந்திகை நோக்கி சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு. இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டு 2 பேர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பில் கந்தையா தேவநாயகம் 38ம் காலனி வயது–22 இவரை ஈ.பி.ஆர்.எல்.எப். ஐ.பி.கே.எப். இனரும் சேர்ந்து சுட்டுக்கொன்றனர்.

9.9.89 இருபாலை எனும் இடத்தில் ஐ.பி.கே.எப். முகா முக்கும் போலீஸ் ஸ்டேசனுக்கும் இடையில் வைத்து ஈ.பி.ஆர். எல்.எப்.இனருக்குபுலிகள் தாக்கு தல் நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் காயம் ஈ.பி.ஆர்.எல்.எப், ஏ.கே.எம். எஸ் –1, ஏ.கே. மகசின் –4, 7.62 (எம்) ரவை–120 என்பன புலி களால் கைப்பற்றப்பட்டன.

களிக்காடு எனும் இடத்தில் விடுதலைப்புலிகள் வைத்த மிதி



கண்ணி வெடியில் அகப்பட்டு ஒரு இந்திய இராணுவத்தினருக்கு கால் சிதறியது.

நீர்வேலி சந்தியில் 2 கிராம சேவகர்கள் விடுதலைவீரர்களைக் காட்டிக் கொடுத்த குற்றத்துக் காகப் புலிகளால் அவர்கட்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் பெயர்கள் 1. சண்முக நாதன் 2. கிருஷ்ணமூர்த்தி

10.9.89 காரைத்தீவுக்கும் அம்பாறைக்கும்ரோந்து சென்றுக் கொண்டிருந்த மூன்று இந்திய இராணுவ ஜீப் மீது விடுதலைப்புலி கள் ஆர்.பி.ஜி தாக்குதல் நடாத் தினர். இதில் ஒரு ஜீப் முற்றுக எரிந்து சாம்பலாகியது. மிகுதி இரண்டும் சேதமடைந்தது. எஸ். எல்.ஆர்–4, எஸ்.எல்.ஆர் மக சின் 20, 7.62 (என்) ரவை 350 என்பன புலிகளால் கைப்பற்றப்பட் -டு.

11.9.89 மணல்பிட்டி இரா ணுவ முகாமிலிருந்து மண்முனை எனும் இடம் நோக்கி உழவு இயந்திரத்தில் வந்த ஈ.பி.ஆர். எல்.எப். துரோகிகள் மீது விடு தலைப்புலிகள் தாக்குதல் நடத்தி னர். இதில் 7 பேர் கொல்லப்பட்டு 3 பேர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில் 2ம் லெப்டினண்ட் அசோ கன் வீரமரணம் அடைந்தார். கோல்சர் –4, ஜி-3–4, சாச்சர் கிளிப்–41, ஜி.3 மகசின்–11, 7.62 (என்) ரவை–551, டி.என்.டி.–4 என்பன புலிகளால் கைப்பற்றப்பட் டன.

13.8.89 காலை 8 மணியள வில் திருகோணமலை கும்பிறு பிட்டி எனும் இடத்தில் முற்றுகைக் கென வந்த இந்திய இராணுவத் தினருக்கு கொத்திக்குளம் எனும் காட்டுப்பகுதி இடத்தில் வைத்து எம்மவர்கள் தாக்குதல் நடத்தி னர். இராணுவத்தினர் பின் வாங்கி ஓடினார்கள்.

கட்டைபறிச்சான் இந்திய இராணுவமுகாமிலிருந்து இறால் பாலம் நோக்கி வந்த இராணு வத்தினருக்கு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 8 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் 2ம் லெப்டினண்ட் ரூபன் 2ம் லெப்டினண்ட் சுருளி ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

புலிகள் தரப்பில் விடுபட்ட ஆயுதம் ஏ.கே.2 வோக்கி–1

கும்பிறுபட்டி காட்டுப்பகுதி யில் முற்றுகைக்கு வந்த இந்திய இராணுவத்தினர் விடுதலைப்புலி கள் வைத்த மிதி கண்ணிவெடி யில் அகப்பட்டு 2 பேர் உயிரிழந் தனர். இவர்களை நோக்கி செல் லும் வழியில் எம்மவர்கள் இராணு வத்தினருக்கு மீண்டும் தாக்குதல் நடத்தினர். அவர்கள் (இந்திய இராணுவம்) 2 இறந்த இராவத் தினரையும் போட்டு விட்டு ஓடி னார்கள். இதில் மைன்ஸ் இன்றி கேற்றர்–1, எஸ்.எல்.ஆர்.மகசின் –1, ஸ்ரெச்சர்–2 என்பன எம்மால் கைப்பற்றப்பட்டன.

14.9.89 நீர்வேலியில் ஈ. என்.டி.எல்.எப் துரோகிகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஜீ.3–1, ஜீ.3 மகசின்–2, கிரனைட் –2 என்பன எம்மால் கைப்பற்றப் பட்டன.

16.9.89 நீர்வேலி சந்தியில் மதனு எனும் பெண்ணை E.N.D.L.F. சமூக விரோதிகள் சுட்டுக் கொன்றனர். இதை கேள்வியுற்ற புலிகள் உடன் சென்று E.N.D.L.F. துரோகிகள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 2 E.N.D.L.F. இனர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் கப்டன் – அக்காச்சி வீரமரணம் அடைந்தார். G 3-1. AK-1,AK மகசின்-3.G3 மகசின்–2, T.N.T. -2 என்பன புலிகளால் கைப் பற்றப்பட்டன.

15.9.89 கொக்குவில் பகுதி யில் E.P.R.L.F. I.P.K.F. ஆகி யோர் சுற்றி வளைக்க முற்பட்ட போது விடுதலைப்புலிகள் எதிர் தாக்குதல் நடாத்தினர். இதில் 3 E.P.R.L.F இனர் கொல்லப்பட்ட னர்.

18.9.89 கரும்புத்தோட்டம், ஸ்கந்தபுரம், கோணாவில், அக் கரையான், உருத்திரபுரம் ஆகிய பகுதிகளை I.P.K.F இனர் சுற்றி வளைத்து பின் கரும்புத் தோட்டம், அக்கரையான் ஆகிய இடங்களில் முகாம் அமைத்துள்ளனர்.

19.9.89 நெடுங்கேணி சந்தியில் சமூகத்துரோகிகளான மகேந்திரன் (26 வயது) த. ரவீந்தி ரன் (வயது 24) ஆகியோருக்கு புலிகள் மரணதண்டனை வழங்கி னார்கள்.

19.9.89 மன்னார் மருத்துவ மனைக்கு அண்மையில் உள்ள இந் திய இராணுவ முகாமுக்கு அருகா மையில் E.P.R.L.F. இனருக்கு புலிகள் தாக்குதல் நடாத்தினர் இதில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

19.9.89 உருத்திரபுரம் எனும் இடத்தில் புதிதாக ஒரு I.P.K.F முகாம் அமைத்துள்ளனர்.

19.9.89 நீர்வேலி சந்தியில் E.P.R.L.F இனருக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதில் 10 பேர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் சிறி வீரமரணம் அடைந்தார். G3 -2. S.L.R.-3. S.M.G-5. வோக்கு–1, T.N.T.-2. ரிக்காஸ்–1, G3 மக சின்–6, S.L.R.–11, S.M.G–21, 9 M.M. ரவை –1040, 7.62 (M) ரவை –302. 7.62 (N) ரவை–720 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

20.9.89 கனகபுரம் எனும் இடத்தில் ரெயிலர் கடை சந்தி யில் புதிதாக I.P.K.F. முகாம் அமைத்துள்ளனர்.

23.9.89 மட்டக்களப்பில் பாலையடிவெட்டை, தும்பன் கேணி, காக்காமுனை ஆகிய I.P.K.F முகாம்கள் அகற்றப்பட்டுள் ளது.

23.9.89 காலை யாழ்பாண நகருக்குள் புங்குடு தீவை சேர்ந்த 3 பேரை E.P.R.L.F இனர் வெட்டிக் கொன்றனர். அவர்கள் பெயர் தர்மகுலேந்திரன் இயக்கச்சி, பாலேந்திரன், திட்டி, இந்திர நாதன், வேலனை

25.9.89 காலை 8 மணியளவில் திலீபனின் படத்துக்கு வாழை, தோரணம் என்பவற்றை பொது மக்கள் கட்டிக் கொண்டிருக்கும் போது I.P.K.F. இனர் துப்பாக்கி பிரயோகம் செய்ததால் 5 அப்பாவி தமிழ் பொது மக்கள் கொல்லப் பட்டனர்.

# புலிகளிடம் சரணடைந்த துரோகப்படை விபரம்

இடத்தில் E.N.D.L.F. ஐ சேர்ந்த ஒருவர் ஏ.கே.எம்.எஸ். ஒன்றும், றிச்சிட்டல்வோக்கி ஒன்றுடனும் புலிகளிடம் வந்து சரணடைந் தார்.

26.10.1989 மட்டக்களப்பி லுள்ள புதுக்குடியிருப்பு I.P.K.F முகாம் ஒன்று அகற்றப்பட்டுள் ளது.

27.10.1989 திருகோமலை வவுனியா வீதியில் வெளிகுளம் எனும் இடத்தில் இரண்டு தமிழர் களை சிங்களமக்கள் வெட்டிக் கொன்றனர். அதைப் பார்க்கப் போன 'டெலோ'வினர் இரண்டு பேரை போலீசார் பிடித்து வைத்தனர்.

27.10.1989 வேலணை எனும் இடத்தில் இரண்டு சி.வி. எப். இனர் புலிகளிடம் வந்து எஸ்.எல்.ஆர்–1, எஸ்.எம்.ஜி–1 என் பனவற்றுடன் சரணடைந்தனர்.

28.10.1989 மட்டக்களப்பி லுள்ள திருக்கோயில் எனும் இடத்தில் இரண்டு (C.V.F.) சி. வி.எப் இனர் எம்.84–2, உடன் புலிகளிடம் வந்து சரண் அடைந் தனர்.

27.11.89 மட்டக்களப்பு சந்திவெளி எனும் இடத்தில் இரண்டு ஈ.என்.டி.எல்.எப். இனர் பின்வரும் ஆயுதங்களுடன் எம்மிடம் வந்து சரணடைந்தனர். எம். 70 –2, மகசின்–6, ரவை–832. டி.என்.டி. — 4.

திருகோணமலை கிண்ணியா எனும் இடத்தில் ஈ.பி. ஆர்.எல். எப். ஒருவரிடமிருந்து பிரவுனிங் பிஸ்டல் ஒன்றை பொதுமக்கள் பறித்து எம்மிடம் ஒப்படைத்த னர்.

மட்டக்களப்பு முனைக்காடு எனும் இடத்தில் 3 சி.வி. எப். எம்மிடம் வந்து சரணடைந்தனர்.

மட்டக்களப்பு அம்பலாந் துறை எனும் இடத்தில் ஈ.பி.ஆர். எல்.எப் ஒருவர் டி.என்.டி. ஒன்றுடன் எம்மிடம் வந்து சரண டைந்தார்.

வந்தாறுமலை எனும் இடத்தில் ஈ.என்.டி.எல்.எப். இனருக்கு எம்மவர்கள் தாக்குதல் நடத்தி னர். இதில் இரண்டு ஈ.என்.டி. எல்.எப் இனர் கொல்லப்பட்ட னர்.

30.11.89 மட்டக்களப்பு மணல்பிட்டி எனும் இடத்திலி ருந்து 5 ஈ.பி.ஆர்.எல்.எப் இனர் பின்வரும் ஆயுதங்களுடன் எம்மி டம் வந்து சரணடைந்தனர். ஏ. கே.எம்.எஸ்.–5. மகசின்–15, ரவை– 1490, டி.என்.டி.–4, மசிலை–4.

வாழைச்சேனையில் மூன்று ஈ.என்.டி.எல்.எப் இனர் எம்மி டம் வந்து சரணடைந்தனர். அவர்கள் ஒப்படைத்த ஆயுதங் கள்... எம்.70–2, ஜி.3–1, எம்70 மகசின்–6, ஜி.3–3, நேட்டோ ரவை–160, ஐ.எம்.460

கிளிநொச்சியில் எம்மவர் கள் 10 பேர் நிற்கும் போது அதை கேள்வியுற்று ஈ.என்.டி.எல்.எப் இனர் 150 பேர் எம்மவர்களை சுற்றி வளைத்தனர். அப்போது எம்மவர் கள் அவர்களை நோக்கித் தாக்கு தல் நடத்தினர். இதில் 6 ஈ.என். டி.எல்.எப் இனர் கொல்லப் பட்டு 25 பேர் காயமடைந்தனர். பின்வரும் ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டன. எம்.70–9, ஜி3–3, பிஸ்டல்–1,2 மோட்டார்–1, 2 மோட்டார் செல்–2, வோக்கி–1.

கிளிநொச்சியில் ஈ.என்.டி. எல்.எப் ஒருவர் எம் 70 ஒன்றுடன் எம்மிடம் வந்து சரணடைந்தனர்.

1.12.1989 காலை 10 மணி யளவில் திருகோணமலை தம்பல காமம் எனும் இடத்தில் இந்திய ராணுவத்தினர் எம்மவர்களுக்கு தாக்குதல் நடத்தினர். எம்மவர்க ளும் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் 4 I.P.K.F. ஜீ ர் கொல லப்பட்டு 3 பேர் காயமடைந்தனர். எமது தரப்பில் லெப்டினண்ட் திவாகர் வீரமரணம் அடைந்தார். எஸ்.எம்.ஜி–1. மகசின்–3. பிறன் மக சின்–4 என்பன எம்மால் கைப் பற்றப்பட்டன.

1.12.1989 கல்முனையில் ஈ. என்.டி.எல்.எப் ஒருவர் எம்மிடம் சரணடைந்து பின்வரும் ஆயுதங் களை ஒப்படைத்தார். கால்காஸ் ரோ–1, 2 மோட்டார் செல்–21, நேட்டோ ரவை–691, ஐ.எம்–1116, டி.என்.டி.–84. தம்பிலுவில் எனும் இடத்தில் ஈ.பி.ஆர்.எல். எப் இனர் பின்வரும் ஆயுதங்களு டன் எம்மிடம் வந்து சரணடைந்த னர். நேட்டோ ரவை–2047, ஐ.எம். ரவை–742, ஏ.கே. மகசின்–18, பிறன் மகசின்–3, ஏ.கே.மக சின்–1, எம்.84 மகசின்–4, டி. என்.டி.–1, கால்கஸ்ரோ கிளி னிங் சொற்–1.

2.12.1989 வவுனியாவில் குழுமாட்டுச் சந்தி எனும் இடத் தில் இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எப் பின்வரும் ஆயுதஙகளுடன் எம்மி டம் வந்து சரணடைந்தனர். ஏ. கே.எம்.எஸ்–1, எஸ்.எல்.ஆர்–1, ஏ.கே. மகசின்–3, எஸ்.எஸ். ஆர் மகசின்–2, நேட்டோ ரவை–193, ஐ.எம். ரவை–242.

மட்டக்களப்பு தேத்தாத்தீவு எனும் இடத்தில் ஈ.பி.ஆர்.எல். எப் இரண்டு பேர் எம்மிடம் வந்து சரணடைந்தனர். அவர்கள் ஒப் படைத்த ஆயுதங்கள் வருமாறு:- ஜி.3–1, மகசின்–3, ரவை–315.

கிரான் எனும் இடத்தில் ஈ. பி.ஆர்.எல்.எப் ஒருவர் பிறவு னிங் பிஸ்டல் ஒன்றுடன் எம்மிடம் வந்து சரணடைந்தார்.

# அபிவிருத்தி எனும் பெயரால் தமிழர்களை பிரித்தாளும் இந்தியக் கூலிப்படை திட்டம்!

தமிழீழத்தில் இனப்படுகொலை தொடர்கிறது. அத்துடன் பொருளாதாரத்தடையும் போக்குவரத்து தடைய்ம், கல்வித் தடையும் தொடர்கிறது.

இந்திய அரசுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் குறித்தும், அவர்கள் நலன் குறித்தும் எந்த வித அக்கறையும் கிடையாது. மாகாணசபையில் உள்ளவர்களை பொறுத்தவரை எப்படியாவது பதவியில் இருந்து பணத்தை கொள்ளையடித்து தங்கள் நலன்களை பாதுகாத்தால் போதும் என்ற நிலையில்தான் இருக்கிறார்கள். இந்திய அரசு என்ன சொன்னாலும் சரி என்று சொல்லும் அடிமைகள் தான் மாகாணசபை உறுப்பினர்கள்.

இந்தியப்படையை இங்கு அழைத்த ஸ்ரீலங்கா அரசு, இந்திய அரசை போரை நிறுத்தி படையை திருப்பி அழைக்கச் சொல்லி விட்டது. போரை நிறுத்த மறுக்கும் இந்திய அரசு திரும்பி போக ஏதோ காரணங்கள் சொல்கின்றது.

தாம் போனால் தமிழீழம் அமைந்து விடுமாம். தாம் போனால் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லையாம் என கவலைப்படுகிறது இந்திய அரசு.

இந்தியா பாதுகாக்க நினைத்தது தனது நலன்களை மட்டும் தான். தனது நலன்களை பாதுகாக்க இளைஞர்கள், யுவதிகள், பள்ளிக்கூட மாணவர்கள், மாணவிகளை படைக்கு பயிற்சி அளிக்கிறது.

2500 ரூபா படியும் வேறு பல சலுகைகளும் செய்து தரப்படும் என இவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

போதைப்பொருள்களுக்கு இவர்களை அடிமைப்படுத்துவதன் மூலம் தமிழீழத்திற்கு துரோகம் செய்ய தூண்டப்படுகின்றார்கள்.

பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் கடத்தப்படுவதைத் தொடர்ந்து, பள்ளிக்கூடங்கள் யாவும் மூடப்படுகின்றன.

தகவல்களைத் திரட்டவும், மக்கள் தம்மிடம் எதிர்த்தும் பணிந்தும், தமது துரோகங்களுக்கு எதிராக செயல்படக் கூடாது என்பதற்காகவும் பொருளாதாரத்தடை.

உள்ளூர் கடைகள் மூடப்பட்டுள்ளன. எந்தப்பொருள் வாங்க வேண்டுமானாலும் இந்தியப்படை முகாம்களுக்குள் இருக்கும் துரோகிகளிடம் ஒப்புதல் பெற வேண்டும். ஏன் வாங்குகிறார்கள் என காரணம் சொல்லப்பட வேண்டும். இத்தகை நடவடிக்கையின் பின்பு ஒரு நாளைக்கு மேல் தேவையான பொருட்களை வாங்க முடியாது.

கல்வித்தடை, பொருளாதாரத்தடையோடு இப்போது போக்குவரத்து தடையும் விதிக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு செல்லும் வாகனங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களுக்குள்ளாகின்றார்கள். ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும் ஒருவரை மருத்துவ நிலையத்திற்கு எடுத்துச் செல்லவும் முடியவில்லை.

தமிழீழ மக்கள் தாமாக செயல்படாமல் இந்திய அரசும், இந்திய அரசின் கூலிப்படைகளும் தங்கியிருக்க வேண்டும், எனத் திட்டமிட்டு இந்திய அரசும், இந்திய அரசின் கூலிப்படைகளும் செயல்பட்டு வருகின்றன.

ஒருபுறம் தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தியப்படையாலும், தேசத்துரோகிகளாலும் கொல்லப்படுகின்றார்கள். அதன்பின் இவர்களுக்கு அவர்களே நிவாரணம் அளிக்கின்றார்கள்.

பொருளாதார தடை மூலம் மக்களை மேலும் அல்லலப்படுத்திக் கொண்டு மக்களின் துன்பங்களைத் தீர்க்க பொருளாதார உதவி செய்யப்போவதாக ஆசை காட்டுகின்றார்கள்.

போக்குவரத்துகளை நிறுத்திய பின் மக்களின் போக்குவரத்துச் சிக்கலை தீர்ப்பதாக கூறிக் கொண்டு சில இடங்களுக்கு இந்தியா அளித்த பேருந்துகளை செயல்பட அனுமதிக்கின்றார்கள்.

## மக்களுக்கு புலிகள் எச்சரிக்கை

அன்பார்ந்த தமிழீழ மக்களே,

எம்மைப் பொறுத்தவரை இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் இங்கிருக்கும் காக்கை வன்னியனின் துணையோடு எம்மீது நடத்தும் இனப்படுகொலையை, கல்வித்தடையை, பொருளாதாரத்தடையை, போக்குவரத்துத்தடையை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழ் பேசும் மக்களை அழித்துக்கொண்டு தமிழ் பேசும் மக்களுக்கு உதவுவது போல் நடந்து உலகை ஏமாற்றும் இந்திய அரசை அம்பலப்படுத்த வேண்டும்.

6000க்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லீம் மக்களை கொலை செய்த இந்திய அரசு 1000 கோடி ரூபாய்க்கும் மேலான சொத்துக்களை அழித்துள்ளது.

இன்று எம் மக்கள் மீது அக்கறை உள்ளவர்கள் போல், ஒரு சிலர் கோடி ரூபாய்களை விளம்பரத்துடன் பெறுகின்றனர். சில பேருந்துகளையும் பெறுகின்றனர்.

வர்த்தக நிலையங்களை குண்டு போட்டு தகர்த்த பின் மருத்துவர்களையும், நோயாளிகளையும் மருத்துவ நிலையத்தில் வைத்து சுட்டுக்கொன்றபின் மருத்துவ நிலையங்களுக்கு சில உதவிகளைச் செய்கின்றது.

எலிப்பொறியில் உணவை வைப்பது எலியின் மேலுள்ள அன்பினால் அல்ல.

இந்திய அரசு உதவி செய்வது தமிழ் பேசும் மக்கள் மேலுள்ள கரிசனையால் அல்ல.

"புனர்நிர்மாணம், புனர்வாழ்வு, புனருத்தாரணம்" இன்று இந்திய பிரச்சார சாதனங்களினாலும், தமிழத்துரோகக் கும்பல்களினாலும் உச்சரிக்கப்படும் சொற்கள் இவை.

யுத்தத்தால் அவலமாக்கப்பட்ட எமது தமிழீழ தேசத்திற்கு இவைகள் அவசியம், நாட்டின் சுபீட்சத்திற்காகவும், எதிர்காலத்திற்காகவும் தேவையான உதவிகள் பொருத்தமான நேரத்தில் செய்வதற்கு தேசத்தின் நலனில் உண்மையான அக்கறை கொண்ட மக்களின் பிரதிநிதிகளால்தான் இது முடியும். இல்லையாயின் பெரும் ஊழல்கள் நடப்பதுடன் நாட்டின் நலனுக்கும் குந்தகம் ஏற்படும் விதத்திலேயே அந்த வேலைகள் திட்டமிடப்படும்.

வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் உதவிகளை ஒரே கண் கொண்டு பார்க்க இயலாது. கிடைக்கப்படும் உதவிகளில் இரு வகை தன்மைகள் இருக்கும்.

1. மனிதாபிமான முறைப்படி துயருறும் மக்களுக்கு வழங்கப்படுவது.

2. இலாப நோக்கத்தோடு செய்யப்படும் உதவிகள்

இதில் இலாபம் என்பது பொருட்கள் வழங்கலில் இருந்து பெறப்படுவது மட்டுமல்ல,, மாறுகபுரட்சிகள் மழுங்கடிக்கபடல், முதலாளித்துவம் வளர்தல், வல்லரசுகளின் நலன்கள் காக்கப்படல் போன்றவையாக இருக்கும். இலாப நோக்கதோடு செய்யப்படுகின்ற வல்லரசுகளின் உதவியையும், உறுதியான தேசாபிமான மக்கள் பிரதிநிதிகளால் தந்திரோபாயமாக பெற்று தமது தேசத்தை வளம்படுத்த முடியும்.

ஆனால் கொடுக்கப்படும் உதவிகளும் குற்ற நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட (இந்தியா) அதைப் பெறுபவர்களும்



(தமிழத்துரோகிகள்) சுயநல நோக்கத்தோடு பெற்றால் அங்கே உதவி என்பது உபத்திரத்திற்கு மட்டுமல்ல இந்த தேசத்தின் அழிவுக்கும்தான் அது உதவும்.

உதவி என்றதும் எடுத்த எடுப்பிலேயே எமது மக்கள் நம்பிவிட மாட்டார்கள். அது தொடர்பாக ஏற்கனவே அவர்களுக்கு பல கசப்பான அனுபவங்கள் உண்டு. உணவு போட்ட இந்திய விமானங்கள் குண்டுகள் போட நீண்ட நாள் செல்லவில்லை. இன்று இந்திய இராணுவம் தமிழீழ மக்களை அழித்தொழித்துக் கொண்டிருக்கும்போது உதவி செய்கின்றோம்என கூப்பாடு போடுவதை எமது மக்கள் விளங்கிக் கொள்வார்கள். எந்தவொரு ஏகாதிபத்தியமும் தனது எதிர்கால அறுவடைக்காகப் போடும் புதிர் தான் இந்த உதவிகள், உதவுவதாகக் கூறிக்கொண்டு ஒரு கையை நீட்டும் போது மறுகை என்ன செய்கின்றது, அல்லது என்ன செய்யப்போகின்றது என அவதானியுங்கள்.

செயற்கையாகப் பட்டினி போட்டு எமது தமிழீழச் சுதந்திரப்போரை ஒடுக்க திட்டம் தீட்டியிருக்கும் இந்திய அரசு, எமது மக்களுக்கு உதவ முன்வருவது வேடிக்கையாகத் தெரியவில்லையா? தமிழ் மக்களைக் கொலை செய்தும் அவர்களின் வீடுகளை உடமைகளை தீயிட்டுக் கொளுத்தியும் தனது மேலாதிக்க நிலையை திணிக்க முயலும் இந்திய அரசு எமது தேசத்தை புனருத்தாரணம் செய்யப் புறப்படுவது விந்தையிலும் விந்தையே.

இங்கு உதவி என்பதன் அர்த்தம் சக மனிதனை சுதந்திரமாக எந்தவித தலையீடுகளுமின்றி வாழ அனுமதிப்பது அல்ல. சுதந்திரத்தைப் பறித்து அடிமைத்தனத்தை ஏற்று வாழ அவரை பழக்கப்படுத்தவும், எதையுமே சுயமாகச் சிந்தித்து செயலாற்றும் ஆற்றல் வளர விடாமல் தடுப்பதுமே அந்த உதவிகள்.

எஜமானர் தன்னில் அன்பாக இருக்கிறான் என எந்த வேள்விக்கடாவும் கருதலாமா? அதற்காகத்தான் இடப்படும் விசேட உணவுகள், பராமரிப்புக்கள் என தம்பட்டம் அடித்தால் அது எவ்வளவு முட்டாளத்தனம்? அதைப்போல்தான் நமது தேசத்தையே இடுகாடாக்க முயற்சிக்கும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமும் அவர்களுக்கு துணைபோகும் தமிழத் துரோக கும்பல்களும் இந்த தேசத்தை புனரமைக்க புறப்படுகிறார்கள் என எண்ணிக் கொள்வது, மாறுக தமிழீழ மக்கள் மீது தொடுக்கப்பட்ட அதர்மமான யுத்தத்தை நியாயப்படுத்த இங்கு நடக்கும் ஆக்கிரமிப்புச் செயல்களை மறைக்கவும் எமது மக்கள் அந்நியர்கள் மீது தங்கியிருக்கும் மனோபாவத்தை வளர்க்கவும் நீண்டகால கண்ணோட்டத்தில் எமது மக்கள் மத்தியில் சமூக பிரச்சனைகளை, பிரதேசப் பிரச்சனைகளை உண்டு பண்ணி மக்களை அந்தப் பிரச்சினையில் ஈடுபட வைத்துவிட்டு தமது மேலாதிக்கத்தை தங்கு தடையின்றி ஏற்படுத்தவுமே இவர்கள் புனர்நிர்மாணம் செய்யப் புறப்பட்டிருக்கின்றார்கள்.

இதை எமது மக்கள் விளங்கிக் கொள்கின்றார்கள். இன்று உண்மையாகவே அவசர உதவி கொடுக்கப்பட வேண்டிய பகுதிகள் தமிழீழ எல்லைப் பிரதேசங்களேயாகும். திருமலை, முல்லைத் தீவு, அம்பாறை பிரதேசங்களில் இந்திய இராணுவத்தின் கண்களுக்கு நேரே சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. பாரம்பரிய தமிழ், முஸ்லீம் கிராமங்கள் சிங்களக் குடியேற்றத்தால் ஒடுக்கப்படுகின்றன. அப்பகுதி மக்கள் கடந்த ஐந்து வருடங்களாக அகதி முகாம் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான அடிப்படை வசதிகள் கூட இல்லாது அவதியுறுகின்றனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் 20 கோடி ரூபாய் 'செலவில்' மேலும் ஓர் பாரிய வைத்தியசாலை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இது யாழ்ப்பாண மக்களின் மேல் உள்ள பற்றினால் அல்ல.

குடிக்கத் தண்ணீர் இல்லாமல் வன்னிப்பகுதி மக்கள் அல்லல் உறும்போது யாழ்ப்பாணத்தில் கிணறு வெட்ட உதவிப்பணம் கொடுக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. வன்னிப் பிரதேச மக்கள் மீதுள்ள வெறுப்பினால் அல்ல.

நெல் விளைக்கக் கூடாது என திருமலை விவசாயிகள் இந்திய இராணுவத்தால் தடுக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அம்மக்களை இராணுவ முகாம்களுக்கு அழைத்து அரிசி கொடுக்கின்றனர்.

இது இந்தியாவின் ஆசைத் துறைமுகம் அமைந்துள்ள திருமலை மக்கள் உடலை வருத்தி உழைக்கக் கூடாது என்ற கரிசனையினால் அல்ல.

தமிழீழத்தின் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரித்தான இந்த விசேட பிரச்சினைகளை இன்னும் சிக்கலாக்கி ஒரு நீண்டகாலத்திற்கு அப்பிரச்சினைகளை வளர விட்டு உலகம் வியக்கும் தமிழீழ விடுதலைப்போரை மழுங்கடிக்கச் செய்வதுதான் இதன் உண்மையான நோக்கம்.

இவ்விதமாக அபிவிருத்தி என்ற பெயரில் எம்மீது இந்திய ஆக்கிரமிப்புச் சக்திகளும் எமது சோசலிசப் புரட்சிக்கு எதிரான சக்திகளும் சேர்ந்து செய்யும் வஞ்சக நாடகத்தின் சில கட்டங்கள்தான் இந்த புனருத்தாரணம், புனர்நிர்மாணம், புனர்வாழ்வு ஆகும். இதையிட்டு எமது மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழு விடுத்த அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

### எமது கவசம்

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்
ஆனால்.....!
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவெனும்
கவசம் எம்மிடமுண்டு!

– தலைவர் பிரபாகரன்

ஆவணி 89 (1.8.89 முதல் 1.9.89) இந்தியப்படையுடன் நடந்த மோதலில் 88 இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். 83பேர் காயமடைந்தனர். 97 அப்பாவித் தமிழ் பொது மக்கள் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டனர். இந்தியப்படையிடமிருந்தும் அதன் கூலிப்படையிடமிருந்தும் 50 ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன.

| | |
|---|---|
| பிறன் எல்.எம்.ஜி. | 5 |
| ஜி.3 | 01 |
| ஏ.கே. | 04 |
| எம்.84 | 01 |
| எஸ்.எல்.ஆர் | 33 |
| எஸ்.எம்.ஜி | 04 |
| பிஸ்டல் | 01 |
| மோட்டார் | 01 |

### வீரமரணமடைந்தோர்

மேஜர் கந்தசாமி (யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)
கப்டன் ரஜனி
கப்டன் தினேஷ் (முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)
கப்டன் வண்ணம் (கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)
கப்டன் தீப்
கப்டன் நடேஸ்
கப்டன் கரன்
கப்டன் நெடுமாறன்
கப்டன் சிவா
லெப்டினண்ட் பிருஸ்னா
லெப்டினண்ட் யூசி
2ம் லெப்டினண்ட் தம்பிராஜா
2ம் லெப்டினண்ட் ஜெயம்

அன்ரன், மகாராஜன், ஈசுராஜன், ரவி, நளின், அலன், கீரன், திசன், வேந்தன், ஜேம்ஸ், கர்ணன், லிங்கம், விநோதன், ஜமின், சுரேன், சுரேஸ், கேதீஸ், கட்டா இவர்களுக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்குழு யாழ்ப்பாணத்திலிருந்து விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# விடுதலைப்புலிகளிடம் இந்தியாவின் கூலிப்படையினர் சரண் தொடர்ந்து வருகிறது!

இந்திய ராணுவத்தினதும், இந்திய அடிமைகளான EPRLF, ENDLF, TELO போன்ற இயக்கங்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கியோ, பலவந்தமாகவோ "தொண்டர் படை" என்றும், "தமிழ்த்தேசிய ராணுவம்" என்று தமிழீழ மக்களை ஏமாற்றிடவும் அமைத்துள்ள கூலிப்படையில் சேர்ந்துள்ள இளைஞர்களுக்கு விடுதலைப்புலிகள் விடுத்துள்ள வேண்டுகோள்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களினதும் தேசத்துரோகிகளினதும் சதி வலைக்குள் வீழ்ந்த தமிழீழ இளைஞர்களில் பலர் உண்மையை உணர்ந்த நிலையில் அடைக்கலம் தேடி எம்மிடம் வந்து கொண்டிருக்கின்றார்கள். அவ்விதம் புகலிடம் தேடி எம்மிடம் வந்த இளைஞர்களில் பலரை அவர்களது பெற்றோர்களிடம் கையளித்துக் கொண்டிருக்கின்றோம்

கடந்த 20ம் திகதி (20.9.89) யுத்த நிறுத்தம் அமலுக்கு வந்த நாளில் இருந்து இந்தியப்படையாலும் ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப், டெலோ, பிளாட் போன்ற மக்கள் விரோத கும்பல்களின் தலைமைகளினாலும் தவறாக வழிநடத்தப்பட்ட நிலையில் தமிழீழ மக்களுக்கு விரோதமாக செயல்பட்டுக் கொண்டிருந்தவர்களில் 32 இளைஞர்கள் மனம் திருந்தி அடைக்கலம் தேடி எம்மிடம் வந்துள்ளனர்.

இவர்களில் 21 இளைஞர்கள் உடனடியாக வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மற்றையவர்கள் வெளியில் சென்று சுதந்திரமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு வசதியாக அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின் அவர்களும் வீடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அடைக்கலம் தேடி எம்மிடம் வந்தவர்களினதும் அவ்வாறு வந்தபின் எம்மால் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டவர்களினதும் பெயர் விபரங்கள் சம்மந்தப்பட்ட அவ்விளைஞர்களின் பாதுகாப்புக் காரணங்களை கருத்தில் கொண்டு வெளியிட முடியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 இளைஞர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 இளைஞர்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 இளைஞர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இளைஞர்களும், வவுனியா மாவட்டத்தில் 4 இளைஞர்களும் எம்மிடம் புகலிடம் தேடி வந்துள்ளனர். இவர்களில் அநேகமானோர் ஆயுதங்களுடன் வந்து சேர்ந்துள்ளனர்.

மேலும் துரோகத்தலைமைகளினால் தவறாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் எமது சகோதரர்களே! உங்களது சக நண்பர்கள் விழிப்புணர்வு பெற்று உண்மையை உணர்ந்து எம்மிடம் வந்து அடைக்கலம் தேடுவதைப் போன்று நீங்கள் ஒரு புதிய பாதுகாப்பான வாழ்க்கையைத் தேடிக் கொள்ள விரைந்து செயல்படுங்கள்.

காலம் தாழ்த்தாது எம்மிடம் வந்து அடைக்கலம் தேடிக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்களினதும் உங்களினது குடும்பத்தவர்களினதும் வாழ்க்கையை ஒளிமயமானதாக்கிக் கொள்ளுங்கள். உங்களது ஆயுதங்களின் உதவியுடன் தப்பி ஓடிவந்து விடுதலைப்புலிகளிடம் அடைக்கலம் தேடிக் கொள்ளுங்கள்.

**28.9.89** முல்லைத்தீவில் சின்னத்தங்காடு எனும் இடத்தில் ஒரு வீட்டில் இருந்த E.P.R.L.F இனருக்கு புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதில் 18 பேர் கொல்லப்பட்டனர். S.L.R-3, S.M.G.-3, A.K.M.S.-3, G 3 (மரபட) -1 சொட்கன்—2, செற்—2 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன

கடந்த 1989 அக்டோபர் மாதத்திலிருந்து இந்தியப்படையினர் தமிழீழத்தில் இருந்து வெளியேறிக் கொண்டிருப்பதைத் தொடர்ந்து, தமிழீழத்தின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ போன்ற குழுக்களிலிருந்து பலர் தங்களது ஆயுதங்கள் சகிதமாக தினமும் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த வண்ணம் உள்ளனர்.

டிசம்பர் 4ம்,5ம்,6ம்,7ம் திகதிகளில் மாத்திரம் மொத்தம் 62 பேர் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ போன்ற குழுக்களிலிருந்து தங்களது ஆயுதங்களுடன் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

டிசம்பர் 4ம் திகதியன்று மொத்தம் 23 பேர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சரணடைந்தனர். இத் திகதியன்று கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கழுதாவளை எனும் இடத்தில் ஈ.என்.டி.எல்.எவ் குழுவைச் சேர்ந்த 13 பேர் சரணடைந்தனர். இவர்கள் கால் கல்ரோ ஒன்று, மூன்று ஷெல்கள், பிறென் எல்.எம்.ஜி. ஒன்று, அதற்குரிய ரவை குண்டுகள் ஐந்து, 2 அங்குல மோட்டார் ஒன்று, ஆறு ஷெல்கள், எம்–70 தாக்கு இயந்திரத் துப்பாக்கிகள் 13, ரவைக்கூடுகள் 39, பிஸ்ரல் ஒன்று, வோக்கி டோக்கி ஒன்று, ரி.என்.ரி குண்டுகள் 16, 7.62–ரவைகள் 1721 என்பவற்றுடன் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

இதே திகதியன்று மட்டக்களப்பிலுள்ள உன்னிச்சை முகாமைச் சேர்ந்த மூன்று ஈ.பி.ஆர்.எல்.எவ் இனர்கள் சரணடைந்துள்ளனர். இவர்கள் எம்–70 தாக்கு இயந்திரத் துப்பாக்கி ஒன்று, மூன்று ரவைக்கூடுகள், மூன்று ரி.என்.ரி குண்டுகள், 370 ரவைகள் என்பவற்றை விடுதலைப்புலிகளிடம் கையளித்தனர்.

மட்டக்களப்பிலுள்ள பகுகாமம் என்னும் இடத்தில் இதே தினம் மூன்று ஈ.என்.டி.எல்.எவ் இனர்கள் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தனர். இவர்கள் எம்–70 தாக்கு இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டு, ரவைக்கூடுகள் இரண்டு, பிஸ்ரல் ஒன்று, ரவைகள் 60 என்பவற்றையும் விடுதலைப்புலிகளிடம் கையளித்துள்ளனர். இதே தினத்தன்று கிளிநொச்சி மாவட்டத்தில் ரெலோவினைச்சேர்ந்த ஒருவரும், ஈ.என்.டி.எல்.எவ் இனைச் சேர்ந்த மூவரும் விடுதலைப்புலிகளிடம் சென்று சரணடைந்துள்ளனர்.

டிசம்பர் 5ம் திகதி அன்று ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் ரெலோ, மக்கள் தொண்டர் படைகளைச் சேர்ந்த மொத்தம் 23 பேர் புலிகளிடம் வந்து சரணடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள நாகதாழ்வு என்னும் இடத்தில் மக்கள் தொண்டர் படை (சி.வி.எவ்) யைச் சேர்ந்த ஒருவரும், தேனடையான் என்னும் இடத்தில் தொண்டர் படையைச் சேர்ந்த மற்றுமொருவருமாக 2 பேர் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

இதே தினத்தன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈ.பி.ஆர்என்.எவ் வைச் சேர்ந்த ஒருவர், ஒரு ஏ.கே.47 இயந்திரத் துப்பாக்கி, நான்கு ரவைக்கூடுகள், ஒருவோக்கி டோக்கி, இரண்டு ரி.என்.ரி குண்டுகள் என்பவற்றுடன் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ரெலோவைச் சேர்ந்த 11 பேரும், ஈ.என்.டி.என்.எவ் வைச் சேர்ந்த 6 பேரும் இதே தினத்தன்று புலிகளிடம் சரணடைந்தனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள குழுமாட்டுச் சந்தி என்னும் இடத்தில் மக்கள் தொண்டர் படை சி.வி.எவ் வைச் சேர்ந்த ஒருவர் ஜி–3 தாக்கு இயந்திரத் துப்பாக்கி ஒன்றுடனும், இரண்டு ரவைக் குண்டுகளுடனும், 175 ரவைகளுடனும், இரண்டு ரி.என்.ரி குண்டுகளுடனும் சரணடைந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனையில் சரணடைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் வைச் சேர்ந்த ஒருவரை விசாரணை செய்ததைத் தொடர்ந்து ஒரு எஸ்.எல்.ஆர், ஒரு ரி.என்.ரி. குண்டும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. அதே தினத்தன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காரைதீவு என்னும் இடத்தில் சரணடைந்த ஈ.என்.டி.எல்.எவ் வைச் சேர்ந்தவரை விசாரணை செய்ததைத் தொடர்ந்து, 303 துப்பாக்கிகள் நான்கு, ரவைக்கூடுகள் நான்கு, எஸ். எல்.ஆர் துப்பாக்கிகள் 7, ரவைக்கூடுகள் 13, எஸ்.எம்.ஜி 1, ரவைக்கூடு 1, எம்– 84 தாக்கு இயந்திரத் துப்பாக்கி ஒன்று, ஏ.கே. 47 ஒன்று, ரி.என்.ரி குண்டு ஒன்று, ரவைகள் 54 என்பவைகள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

டிசம்பர் மாதம் 6ம் திகதியன்று மக்கள் தொண்டர் படை, ரெலோ குழுக்களைச் சேர்ந்த மொத்தம் நான்கு பேர் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

நெடுங்கேணி என்னும் இடத்தில் மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவர் எம்–84 ஒன்றுடனும், ரவைக்கூடு ஒன்றுடனும் புலிகளிடம் சரணடைந்தார். இதே தினத்தன்று கிளிநொச்சி மாவட்டத்தில் ரெலோ குழுவைச் சேர்ந்த மூவர் புலிகளிடம் சரணடைந்தனர்.

டிசம்பர் 7ம் திகதியன்று ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ், தொண்டர்படை, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றவற்றைச் சேர்ந்த மொத்தம் 12 பேர் தமது ஆயுதங்களுடன் புலிகளிடம் சரணடைந்தனர்.

பண்டாரிக்குளம் என்னும் இடத்தில் ஈ.என்.டி.எல்.எவ் வைச் சேர்ந்த 8 பேர் சரணடைந்தனர். இவர்கள் ஏ.கே.47 தாக்கு இயந்திரத் துப்பாக்கி ஒன்று, ரவைக்கூடுகள் நான்கு, ரவைகள் 147, எஸ்.எம்.ஜி ஒன்று, ரவைகூடு ஒன்று, ரவைகள் 51, ரி.என்.ரி குண்டு என்பவைகளை விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர்.

தம்புலுவில் என்னும் இடத்தில் ரெலோவைச் சேர்ந்த இருவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வைச் சேர்ந்த ஒருவரும், மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவரும் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்,

1989 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் இலங்கைத் தீவிலிருந்து இந்தியத் துருப்புகள் திருப்பியழைக்கப்பட்டு விடும் என்ற இந்திய, சிறீலங்கா அரசுகளின் அறிவிப்பிற்கு மத்தியில், தொடர்ந்தும் அதிக இந்தியத் துருப்புகள் யாழ்ப்பாணத்திற்குள் குவிக்கப்படுகின்றன.

31.10.89 லிருந்து 3.11.89 வரை சுமார் 200க்கும் மேற்பட்ட இந்திய ராணுவத்தினர் "பரசீமா" என்ற பெயருடைய கப்பல் உட்பட இரு இந்தியப் கப்பல்களில் காங்கேசன் துறைத் துறைமுகம் வழியாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்திய ராணுவத்தினர் வெளியேறுவதாகச் சொல்லப்படும் அதே சமயம், யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய இந்தியப்படை முகாம்கள் அமைக்கப்படுகின்றன.

8.11.89 அன்று யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோண்டாவில், கொட்டடி, நல்லூர் ஆகிய இடங்களில் இந்தியப் படையினர் புதிய முகாம்களை அமைத்துள்ளனர்.

அத்துடன் கட்டாய ராணுவப் பயிற்சிக்காக பல இடங்களிலிருந்து தொடர்ந்தும் இளைஞர்களும் இளம் பெண்களும் இந்திய ராணுவத்தாலும், ஈ.பி.ஆர்.எல்.எவ் கும்பல்களாலும் பிடித்துச் செல்லப்படுகின்றனர்.

1.11.89 அன்று திருகோணமலை நகரத்தில் 125 தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் பிடித்து செல்லப்பட்டுள்ளனர்.

4.11.89 அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ரயில் கிளிநொச்சியில் வழி மறிக்கப்பட்டு சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

8.11.89 அன்று யாழ்ப்பாணத்தில் இந்திய ராணுவத்தினரும் ஈ.பி.ஆர்.எல். எவ்பினரும் சேர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களையும், இளம் பெண்களையும் பிடித்துச் சென்றுள்ளனர். இதைத் தடுக்க முயன்ற இளம் பெண் ஒருவர் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்திய அரசால் யுத்த நிறுத்தம் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட நாளாகிய 20.9.89ல் இருந்து இன்று வரை யுத்த நிறுத்தம், படை விலகல் என்று உலகை ஏமாற்றிக் கொண்டு, தொடர்ந்தும் போருக்கான முயற்சியையே இந்திய அரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்திய அரசின் இந்நடவடிக்கைகளை கவனிக்கும் போது யுத்த நிறுத்தம், படிப்படியான படைவிலகல் என்ற அறிவிப்புக்கள் தமிழீழ–இந்திய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த இந்திய அரசு தன்னைத் தயார் படுத்தும் ஒரு தந்திரோபாய முயற்சியாக மேற்குறித்த நடவடிக்கைகள் தென்படுகின்றது.

2.11.89 அன்று யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சாவகச்சேரி எனும் இடத்தில் மாகாண சபையின் மக்கள் தொண்டர் படையினர் 6 பேர் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

4.11.89 அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் வண்டியை வழிமறித்த ஈ.என்.டி.எல்.எவ் துரோகக் கும்பல்கள் அவ் வண்டியிலிருந்து 52 வாலிபர்களை வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு அந்த அறிக்கை கூறுகிறது.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் குழு யாழ்ப்பாணத்திலிருந்து விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் ஈழத் தமிழகத்தில் அது பிடர் சிலிர்த்து எழுந்தது. அந்த எழுச்சி பல்வேறு வடிவங்களாக உருமாறி உருமாறி, பிரபாகர வீரனின் தலைமையில் புலிப்படையாக மீசை முறுக்கியது.

நான் வீரன், நீ வீரன் என்று நாத் துடிக்கப் பேசிக் கொண்டு, ஈழத்திலும் வேறு சிலர் கிளம்பினார்கள். அவர்களெல்லாம் அரை வழியில் நின்று அந்நியர்களின் பைக்குள் அடக்கமாகிப் போன பிறகும், புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்னும் முழக்கோடு புறப்பட்டது புலிப்படை. வீரவித்தகன், தளபதி வே. பிரபாகரனின் தலைமைத் தடத்தில் நடைகொண்டது அந்தப் படை.

புறநானூற்றுப் பாடலிலே ஒரு போர்வீரன் சொன்னது போல, "இரும்பு முகம்சிதைய நூறி, ஒன்னார் இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே" என்று சொன்னது போல ஈழத்திலும் பலபேர் தங்களுக்குத் தாங்களே! 'போராளிகள்' என்று பெயர் வைத்துக் கொண்டார்கள், அவர்களுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும் ஆடம்பரச் செலவுக்குப் பணமும் தந்திட அண்டைநாட்டு நயவஞ்சகர்கள் காத்திருந்தார்கள்.

ஆனாலும் பிரபாகரப் பெருவீரன் தலையெடுத்த பிறகு தான், " தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அதற்கொரு குணம் உண்டு!" என்னும் தமிழத் தனிச்செய்தி உலகெங்கும் ஒலிக்கத் தொடங்கியது. பிரபாகரனின் புலிப்படை போர்முனைக்கு வந்த பிறகே, விடுதலை புலிகளைச் சாதாரணமாக நினைக்கக் கூடாது என்கிற அச்சம் கலந்த உணர்வு தமிழின் எதிரிகளுக்கு ஏற்பட்டது.

குறிப்பாக, இந்தியாவும் சிறீ இலங்கையும் ஓர் உலக்கைக் கொழுந்து ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு, போராளிகள் என்று பேர் வைத்துக் கொண்டு திரிந்த புல் பூண்டுகளை எல்லாம் கிள்ளி எடுத்துத் தங்கள் பெட்டிக்குள் போட்டுக் கொண்ட போதுதான், 'தமிழனுக்கும் வீரம் உண்டு, அது எவனுக்கும் தலைவணங்காது' என்கிற வரலாற்றுப் பேருண்மை, பிரபாகரத் தீரனின் வடிவிலே ஒரு பெரிய புதிய உதயம் செய்தது.

இந்தியக் கொலைப்படை மட்டும் என் உதவிக்கு வராதிருந்தால் நான் பிரபாகரனின் காலில் விழநேர்ந்திருக்கும்" என்று புலம்பினான் சிங்கள ஆட்சித் தலைவன். "பிரபாகரனையும் அவனுடைய புலிப்படையையும் மட்டும் பிடித்து அடைத்துவிட்டால் தமிழ் ஈழ விடுதலைப் போருக்கே முற்றுப்புள்ளி வைத்து விடலாம்" என்று இன்றைக்கும் மனத்துக்குள் கொறித்துக் கொண்டு இருக்கிறது. அமைதிப்படை என்ற பெயரிலே ஒரு அமளிப்படையைப் பிரபாகர வீரன் மேல் ஏவிவிட்ட இந்திய அரசாங்கம்!

### இரு்வரின் ஒரு வடிவம்

இத்தகைய ஓர் அச்ச உணர்வையும் குழப்பக் குதுகுகுப்பையும் மாற்றார்க்கு ஏற்படுத்தியவர்கள், மற்றவர்களிலே மட்டுமல்ல, வீரத் தமிழர்களிலே கூட மிகமிகச் சிலரே. அந்த வரலாறு கூட 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூற்றுக் காலத்திலேயே வற்றி நின்று விட்டது. புறம் 309 இல், " பாசறை உளன் என வெருஉம் ஓர் ஒளி" உடைய ஒரு மாவீரனைச் சந்தித்தோம், அவனையே போன்ற மற்றொரு வீரனைப் புறம் 31 ஆம் பாடலில் சந்திக்கிறோம். அவன்தான் புலவர் பாடும் வீரப் புகழால் ஓங்கிய மாவீரன் சோழன் நலங்கிள்ளி.

நலங்கிள்ளியின் படை கிழக்குக் கடற்கரை வழியாக, வெற்றி முழக்கமிட்டுக் கொண்டு தெற்கே நகர்ந்தது. தெற்கை வென்று அடக்கிய வீறுடன், சேர நாட்டில் புகுந்து அதையும் கைப்பற்றியது. பிறகு, அப்படியே மேற்குக் கரை வழியாக வடக்கே திரும்பும் நினைவுடன் சற்றே இளைப்பாறியது. இதைக் கேள்விப்பட்ட வடபுலத்து அரசர்கள், வந்து விட்டதே தமிழ்ப்படை' என்று பதறியவர்களாகக் கண்ணுறங்காமல் கிடக்கிறார்கள். கோவூர் கிழார் என்னும் மேதைக் கவிஞன், நலங்கிள்ளியின் நினைப்பிலே வடபுலத்து அரசர்கள் துயில் மறந்து துவண்டு கிடப்பதைப் பின்வருமாறு சொல்லிப் பெருமைப்படுகிறான்.

*குணகடல் பின்னதாக, குடகடல்*
*வெண்தலைப் புணரி நின் மான்குளம்பு அலைப்ப*
*வலமுறை வருதலும் உண்டு என்று அலமந்து*
*நெஞ்சு நடுங்கு அவலம் பாய*
*துஞ்சாய் கன்ண, வடபுலத்து அரசே!*

அங்கே அவன் போர்க்களத்துக்கு வந்து பாசறையில் இருக்கிறான். நாம் இனிப் பிழைப்பது அரிது என்று அவனுடைய பகைவர்கள் அஞ்சிப் பதைத்தார்கள். இங்கே சோழனின் படை வடதிசை நோக்கித் திரும்பும் முன்பே, நம்மீது படையெடுத்து வந்து விடுவானோ! என்று உறங்காமல் கிடக்கிறார்கள் வடநாட்டு மன்னர்கள்.

இந்த இரண்டு வீரச் சித்திரங்களையும் நினைக்கிறேன். பிரபாகர மாவீரனை நினைத்து நினைத்து நெஞ்சு பதறும் சிங்கள அரசை நினைக்கிறேன். அதற்கு அடுத்த நிலையில் தன் ஏலாமையால் கறுவிக் கொண்டு இருக்கும் இந்திய ஈவை ஆளும் கும்பலை நினைக்கிறேன். இந்த இருவரின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு தமிழ் ஈழத்தில் பதவி நாற்காலியில் அமர்ந்த பெருமான்கள் இந்தியப் படை திரும்பிச் செல்லுகிறது என்று அறிந்தவுடன், நடுநடுங்கிப் பதைபதைத்து நாக்குளறி ஏதேதோ புலம்பி அரற்றுவதையும் நினைக்கிறேன்.

### மீட்க வந்த பெரு வீரன்!

"பிரபாகர மாவீரனே! பாசறையில் இருந்தபடியே பகைவர்களின் இதயத்தில் அச்ச நடுக்கத்தைப் பாய்ச்சிய எங்கள் முன்னோரின் வழி வந்த இளையவனே! உன்னை நினைத்துப் பதறுகிற புல்லர் கூட்டத்துக்காக மிக மிக இரக்கப் படுகிறேன். இவர்கள் படுகிற பாட்டைப் பார்க்கிற போதுதான் பாசறை உளன் என்று மாற்றார்கள் வெருவிய அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும் என்று புரிகிறது. சோழன் படையை நினைத்துக் கண்ணுறங்காமல் இரவைக் கழித்த வடபுலத்து அரசுகளின் அவல நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதும் விளங்குகிறது!

வீரத் தமிழ்த் தளபதி பிரபாகரா என் நெஞ்சிலும், என் போல் தமிழ்மானம் உடையவர்களின் நெஞ்சிலும் எவ்வளவு பெரிய இன்பத்தை ஏற்றி விட்டாய். அப்பனே! 3000 ஆண்டுகளாக முனை மழுங்கிக் கிடந்த தமிழ் வீரத்தை நினைத்து நினைத்துப் புலம்பினேன். மேற்கண்ட புற நானூற்றுப் புகழ் மறவர்களின் நினைவு வரும்போதெல்லாம், தமிழ் வீரத்தின் மீது ஒரு புதிய நம்பிக்கை வரப்பெற்று, "புதையுண்ட பழமரமும் வயிரமாகும், பொழிந்து உதிர்ந்த கருமேகம் வெள்ளமாகும்!" என்று புத்துயிர்ப்புப் பாடல் பாடி, எனக்கு நானே நம்பிக்கை ஏற்றிக் கொண்டேன்.

அந்த நம்பிக்கையின் வடிவாக வீர உதயம் செய்த என் இளவலே, இற்றைத் தமிழர் இதயம் தோறும் வீற்றிருக்கும் எங்கள் இனத்தின் தளபதியே, தமிழ் வீரமரபை மீட்டுக் கொணர்ந்த நீ தமிழனின் அனைத்துப் பெருமைகளையும் மீட்டுக் கொண்டு வரப் போகிறாய், அதை வரலாறு காணப் போகிறது, விரைவிலேயே காணப் போகிறது!

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக வளாகத்தின் முன்னாலேயே பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியப் படையினரோ அல்லது கருங்காலிகளான ஈ.பி.ஆர்.எல்.எப். கும்பலோ காட்டிய கைவரிசைதான் இது என்பது மாணவர்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை.

கடந்த சில மாதங்களாகவே ரஜனி திராணகமாவின் இல்லம் இந்தியப் படையினரால் தொடர்ந்து சோதனை செய்யப்பட்டது. அவர் எழுதிய கட்டுரைகளின் கையெழுத்துப் பிரதிகள் எடுத்துச் செல்லப்பட்டன. அவருக்கு அன்றாடம் கொலை மிரட்டல்கள் வரத் தொடங்கின. தன் மரணத்திற்கு முன்பாக இறுதியாக எழுதிய கடிதம் ஒன்றில் I.P.K.F. தன்னை தொல்லைப்படுத்துவது பற்றி விளக்கியிருந்தார். அங்கிருந்த இந்திய ராணுவ அதிகாரி தன்னை கைது செய்ய முயற்சித்து வருகின்றான் என்று அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கு பாதுகாப்பு என்பது அறவே இல்லை. சில மாதங்களுக்குமுன் இந்தியக்கொலை வெறிப்படை பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்து ஒரு மாணவரை சுட்டுக் கொன்றது. அதனைப் பற்றி படைத் தளபதியிடம் முறைவீடு செய்வதற்காக மாணவர்கள் ஊர்வலமாக மனு ஒன்றைக் கொண்டு சென்றனர். முறையீடு செய்யச் சென்ற மாணவர்கள் மீது இந்தியக் கொலைப்படை துப்பாக்கியால் சுட்டது. இரண்டு மாணவர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயப்பட்டனர்.

இன்றோ மனித உரிமைகளுக்காகப் போராடிய விரிவுரையாளர் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இலங்கையில் மற்ற பல்கலைக்கழகங்கள் அனைத்தும் தொடர்ந்து மூடிக்கிடக்கும் நிலையில் அனைத்து பிரச்சினைகளுக்கும் இடையில் யாழ் பல்கலைக்கழகம் மட்டுமே நடைபெற்று வந்தது. இப்போது திராணகமவின் படுகொலைக்குப் பின் அதுவும் மூடப்பட்டு விட்டது.

ரஜனி திராணகமாவைக் கொன்றதன் மூலம் ஆக்கிரமிப்பாளர்களும் கைக்கூலிகளும் சமூக நலனில் அக்கறைகொண்டு குரலெழுப்பும் அறிவு ஜீவிகளை வாய் மூடி மௌனியாக இருக்கும் படி மறைமுகமாக மிரட்டுகின்றனர். ஆனால் உண்மைக்காக சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி ரத்தத்தின் பின்னும் ஓராயிரம் மக்கள் கிளர்ந்தெழுவது தானே வரலாற்று உண்மை.



## இவனே தலைவன்!

சங்கே முழங்கு! சங்கே முழங்கு!
தம்பி பிறந்தநாள் சங்கே முழங்கு!
கார்த்திகை மாதம் கடற்கரையோரம்!
பூத்ததோர் பூவின் புகழை முழங்கு!

ஆயிரம் ஆண்டுகள் அசதியில் கிடந்தபின்
ஈழமண் மீண்டும் எழுந்தநாள் முழங்கு!
'தம்பி' பிறந்த நாள் சங்கே முழங்கு!

இன்று கார்த்திகையில் வந்த
இருபத்தியாறு? வீரக்
கனலொன்று ஈழமண்ணில்
கனன்றிட்ட நாளா?

தென்றலே—வருக! ஈழத்
தேசியத்தலைவன் பேரை
என்றுமே பாடிப்பாடி
எழுந்து நீ மெல்ல வீசு

இந்தியப் பெரும்படையும்
இலங்கையின் படையும் சேர்ந்து
வந்திட்ட போதும் அஞ்சி
வளைந்திடாத் தலைவன் நாமம்

சந்ததம் பாடு அந்தச்
சரித்திரம் தன்னைப்பாடு!
விந்தைகள் படைக்கும் எங்கள்
வீரனைப் பரணிபாடு!

ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனைத் தமிழீழத்தின்
பாயிரமாகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை

ரவியபடைகள் வந்து
என்னடா செய்யும்?
காவியம் களத்தில் வெல்லும்
காலங்கள் அவன்பேர் சொல்லும்!

வல்வெற்றித்துறையே! உன்னை
வணங்கினோம்! தமிழர் வீரம்
கல்வெட்டில் பொறித்தோர் தம்மை
கருவிலே.... சுமந்த மண்ணே!

சொல்லெட்டும் வரையும் பாடித்
துதிக்கிறோம் வீரவேங்கை
செல்லட்டும் என்றே கூட்டைத்
திறந்திட்ட மண்ணே வாழி!

அஞ்சிடாநெஞ்சன்! யார்க்கும்
அடங்கிடா வீரன்! இன்று
வெஞ்சமர்க்களத்தில் நின்று
வென்றிடும் தலைவன் எங்கள்

பிஞ்சுகள் புலியாய் மாறிப்
போர்க்களம் போகச் செய்தோன்!
செந்தமிழ் ஈழம் மீட்டு
சிறப்புடன் வாழ்க! வாழ்க!!

# அந்நிய எதிரியை வீழ்த்த உள்நாட்டு எதிரியுடன் தற்காலிக கூட்டு தவிர்க்க முடியாததே!

ஈழத் துரோகிகளின் இறுதிக்காலம் வந்து விட்டது. ஒன்று அவர்கள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தோடு சேர்ந்து மூட்டைக்கட்டிக் கொண்டு வெளி நாடுகளுக்குத் தப்பி ஒடி விட வேண்டும். அல்லது ஈழ மண்ணிலேயே பூண்டோடு அழித்தொழிக்கப்படுவார்கள். ஈழ துரோகிகளின் எஜமானர்களான பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சி இந்தியப் பொதுத் தேர்தல்களில் தூக்கி எறியப்பட்டு விட்டது. இது அவர்களின் வீழ்ச்சியை விரைவுபடுத்தி விட்டது.

ஈழத்தின் எட்டப்பர்களுக்கு ஏற்படும் இந்த இறுதி முடிவு குறித்து ஈழ மக்கள் எவரும் வருந்தப் போவதில்லை. ஏனெனில் அந்நிய, ஆதிக்க, ஆக்கிரமிப்புப் படைக்கு தாயகத்தைக் காட்டிக் கொடுத்த சொந்த சகோதரர்களை படுகொலை செய்யவும், சொந்தச் சகோதரிகளையே கற்பழிக்கவும் துணை போனவர்கள். ஆக்கிரமிப்புப் படையினர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்த போதும் அதை எதிர்த்ததோடு, ஈழத்தையே இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் நோக்கத்தோடு தேசத்துரோகக் கொலைகாரப் படையெழுப்பினார்கள்.

இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறுவதாக கெடுவைத்து பிரேமதாசா கும்பலுடன் ஒப்பந்தம் போட்ட போது கூட எழுதினோம்: இதை நம்பக் கூடாது; ஏதாவது ஒரு முகாந்திரத்தை முன்வைத்து இந்திய இராணுவம் தங்கியிருக்கவே முயலுகிறது; இந்தியாவின் முன்னாள் இராணுவத்தினரை ஆள் சேர்த்து இரகசியப்படை திரட்டுகிறது; இந்திய ஆலோசகர்கள் என்கிற பெயரில் அவர்களை ஈழத்துக்கு அனுப்பி ஈழ துரோகிகளின் ஆணையில் இயங்கும் இரகசியக் கொலைப்படை ஒன்றைத் திரட்டுகிறது.

பிறகு இதை உறுதிப்படுத்தும் வகையில் "தமிழ் தேசிய இராணுவம் என்ற இராணுவத்துக்கு இந்திய ஆக்கிரமிப்புப் படையின் பயிற்சி ஆயுதங்களைக் கொண்டு ஈழத் துரோகிகளை உருவாக்கி வருகிறார்கள். அதற்காக ஈழச் சிறுவர்—சிறுமிகளைப் பலாத்காரமாகக் கடத்திக் கொண்டு போகிறார்கள்" என்று புலிகள் குற்றஞ் சாட்டினர்.

பலநாட்டுப் பத்திரிகையாளர்களும் இதை உறுதி செய்தனர். தமிழ் தேசிய இராணுவத்தில் சேரும்படி ஈரோஸ் அமைப்பினரை மிரட்டுவதாக அவர்கள் புகார் கூறினர். இதையெல்லாம் மறுத்து "அப்படி ஒரு இராணுவமே கிடையாது; இருப்பதெல்லாம் சட்ட பூர்வமாக இயங்கும் குடிமக்கள் தொண்டர் படைதான்; அதனிடமிருப்பது இலங்கை அரசு கொடுத்த சாதாரண துப்பாக்கிகள் தாம் என்று, துரோகிகளின் அதிகாரப்பூர்வத் தலைவர் வரதராஜப் பெருமாள் புளுகினார்.

கடந்த டிசெம்பர் மாதம் அம்பாறை மாவட்டத்தை விட்டு இந்திய இராணுவம் வெளியேறியது. அங்கே அக்கரைப்பற்று பகுதியில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் டெலோவுக்குச் சொந்தமான இராணுவ முகாம்களை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தனர். 60க்கும் மேற்பட்ட துரோக இராணுவத்தினரைக் கொன்று, 140 பேரை சிறைப்பிடித்ததோடு, எட்டுலாரி நிறைய ஆயுதங்களைப் பறித்தெடுத்தனர். அப்போதும் தமிழ் தேசிய இராணுவம் என்பதே கிடையாது; தாக்கப்பட்டது குடிமக்கள் தொண்டர் படைதான் என்று வரதராஜப் பெருமாள் சாதித்தார்.

அதன் பிறகு அம்பாறை மாவட்டத்தில் யாருடைய ஆதிக்கத்தை நிறுவுவது என்பதற்கான மோதல் ஏற்பட்டது. அக்கரைப்பற்று மற்றும் கல்முனையில் நிறுவப்பட்ட இலங்கை இராணுவ போலீசு அதிரடிப்படை முகாம்களை தமிழ் தேசிய இராணுவம் நவீன ஆயுதங்களைக் கொண்டு தாக்கி 75 பேரைப்பலி கொடுத்து 250 பேரைக் கொன்றது.

இந்திய இராணுவம் வெளியேறும் முன்பு சட்ட விரோத, இரகசிய இராணுவத்தை உருவாக்கி பயிற்சியும் நவீன ஆயுதங்களும் வழங்கியதாக இலங்கை அரசு புகார் கூறியது. அப்போதும் அதை அடியோடு மறுத்தனர் இந்திய அரசும், ஈழத்துரோகிகளும். ஆனால் மேற்கண்ட சம்பவங்களை அறிவித்து இந்தியப் பத்திரிக்கைகள் இந்தியாவின் நாசகார சதிவேலைகளைப் பற்றிப் பெருமையோடு எழுதிவருகின்றன.

இந்தியாவின் இலங்கை ஆக்கிரமிப்புக் கொள்கைகளை முழுமூச்சாக ஆதரிப்பது 'இந்து' நாளேடு அதன் மாமிருமுறை ஏடான 'ஃபிரண்ட்லைன்' (நவ 11. 24) பின்வருமாறு எழுதுகிறது.

"இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கும் இறுதிக் கட்டமாக வடகிழக்கு மாகாண அரசைப் பாதுகாப்பதை உறுதி செய்வது இந்தியாவின் முக்கியக் கொள்கையாக இருந்தது. இதற்காக பெருமளவு கட்டாய ஆள் சேர்ப்பு மூலம் குடிமக்கள் தொண்டர் படை மற்றும் தமிழ் தேசிய தொண்டர் படை ஆகியவற்றை உருவாக்கியது. இவற்றிலே. குடி மக்கள் தொண்டர்படை போலீசைப் போல உடையணிந்தது; சட்டபூர்வமானது; இந்திய அமைதிப்படை வெளிப்படையான பயிற்சியளித்தது. ஆனால் தமிழ் தேசியத் தொண்டர் படை இரகசியமானது; இந்திய அமைதிப் படைக்கு பதிலாக; 'இந்திய ஆலோசகர்களால் பயிற்சியளிக்கப்படும் சட்ட விரோதமானது; மிகவும் அபாயகரமான தாக்குதல் சக்தியுடையது; ஒளிந்து வாழும் இராணுவ உடுப்புகளும், ஏ.கே.47, ஏவுகணை கள் போன்ற அதி நவீன ஆயுதங்களை ஏந்தியிருப்பது ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.என்.டி.எல்.எஃப், டெலோ ஆகிய மூன்று புலிகள் எதிர்ப்பு அமைப்புகளின் கூட்டுத் தலைமையில் இயங்குகிறது.

இவ்விருபடைகளுமே இந்திய இராணுவத்தைப் போலவே அணிவகுப்பு மரியாதை செலுத்தி இந்தி மொழி ஆணைகளுக்குப் பழக்கப் பட்டவர்கள். அம்பாறையில் இருந்து இந்தியாவின் மலை பிராந்தியப்படை விலகிய பிறகு இவ்விரு படைகளும்தான் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன.

இப்படி அவர்களின் ஊது குழல்களே ஒப்புக் கொண்டுள்ள போதும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களின் எடுபிடிகளும் "தமிழ் தேசிய இராணுவம் என்று எதையும் உருவாக்கி, பயிற்சியும் ஆயுதமும் தரவில்லை" என்று அடியோடு புளுகுகின்றனர். ஆனால் இந்தப் புளுகெல்லாம் அவர்களின் வீழ்ச்சியைத் தடுத்து விட முடியாது. ஈழத் தமிழரின் எதிரியான இலங்கை இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து புலிகள் தம்மைத் தாக்குவதாகக் கூறி அவர்களின் ஆதரவைத் திரட்டிக் கொண்டுத் தாக்குப் பிடித்து விட முடியும் என்று ஈழத்துரோகக் குழுக்கள் நம்புகின்றன.

இனப் படுகொலைப் போர் தொடுத்து பல ஆயிரம் ஈழத் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் அதை விடக் கொடிய ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து மேலும் பல ஆயிரம் ஈழத் தமிழர்களை இந்திய இராணுவம் கொன்றது. இந்திய—இலங்கை பாசிச கும்பல்களுடன் கூட்டுச் சேர்ந்து அதற்குத் துணை போனவர்கள்தான் இந்த ஈழத் துரோகக்குழுவினர்.

பிறகு இவ்விரு ஆளும் கும்பல்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றி, இரண்டு எதிரிகளை எதிர்த்து ஒரே நேரத்தில் போரிட முடியாத போது மிகவும் அபாயகரமான, உடனடி, அந்நிய எதிரிக்கு எதிராக உள்நாட்டு எதிரியுடன் தற்காலிகக் கூட்டு ஏற்படுவது தவிர்க்க முடியாதது; அவசியமானது. இதை ஈழத் தமிழர்கள் நன்கறிவர். அந்நிய எதிரியோடு துரோகிகளையும் ஒழித்துக் கட்டுவதற்காகப் போரிடுவர் என்பதில் சந்தேகமில்லை.

— புதியஜனநாயகம்




இந்திய உளவுப்படை 'றா' T.N.A.க்கு பயிற்சி அளிக்கும் காட்சி

(-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்கு பிரச்சினை வரக் கூடும் என அஞ்சிய இந்திய ராணுவம் வழியில் காருடன் வைத்து மூன்று பிரேதங்களையும் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியது.

இந்திய ராணுவத்தின் அட்டூழியங்களை எல்லாம் சொல்வதாயின் கடிதம் போதாது. இதுவரை அய்யாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான கோடி பெறுமதியான உடமைகள் சேதமாக்கப் பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். மக்கள் அன்றாட வாழ்க்கை யாவும் ஸ்தம்பித்துள்ளது. மனித உயிர்ப் படுகொலை சர்வ சாதாரணமாகி விட்டது. மனிதாபிமானம்என்பது மருந்துக்குக் கூட இல்லை. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாமல் அச்சமுற்ற நிலையில் தமிழ் மக்கள் பரிதாப வாழ்க்கை வாழ்கிறார்கள்.

வெடிச்சத்தம் கேட்டால் அழுகின்ற சிறு குழந்தை கூட பயத்தால் வாயைப் பொத்தும். எவ்வளவு அதிகமாக வெடிச் சத்தம் கேட்கிறதோ அவ்வளவு அதிகமாக மக்கள் கவலைப்படுவர், பயப்படுவர்; பயத்தால் மக்கள் சிதறிஓடுவர். பின் திரும்பிவந்து பார்க்கும்போது சற்று நேரத்திற்கு முன் எம்முடன் சாப்பிட்டவர், உரையாடியவர், இறந்து கிடப்பதைக் காணலாம். இவ்வாறு அன்றாடம் எமது உறவினர்களை, நண்பர்களை, மக்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம்.

இன்று எம்முன் இருக்கும் கேள்வி என்னவென்றால் ஒன்றும் பேசாமல் மடியப் போகின்றாயா? அல்லது அநியாயத்திற்கு எதிராகப் போராடப் போகின்றாயா? என்பதே ஆகும். ●

## இந்திய ராணுவம் E.P.R.L.F. நடத்திய கொலைகள்

● கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய குமரேஸ் என்பவரை இந்திய ராணுவம் விசாரணைக்கென 3.9.89 இல் அழைத்துச் சென்று, அங்கு வைத்துச் சுட்டுக் கொன்றது.

● நெடுங்கேணி பெரிய குளம் எனுமிடத்தில் அவசகாலை செல்லத்துரை என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையை இந்திய ராணுவத்தினர் 4.9.89 இல் சுட்டுக் கொன்றனர்.

● போர் நிறுத்தம் செய்துள்ளதாக அறிவித்த இந்திய ராணுவத்தினர், அதை மீறி தொடர்ந்தும் (புலி) வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். திருகோணமலை பன்குளம் 4ஆம் கண்டம் என்னுமிடத்தில் பாஸ்கர் எனும் புலிப்படை இளைஞரை 5.9.89 ஆம் நாள் இந்திய ராணுவம் சுட்டதில், அவ்விளைஞர் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

● வவுனியாவில், வியாபாரி வல்லிபுரம் என்பவரை IPKF துரோகிகளும், இந்திய ராணுவமுமாகச் சேர்ந்து 20.9.89 சுட்டுக் கொன்றனர்.

● குமரபுரம் பரந்தனைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் (வயது 14) வீட்டு இல உ. கரேஸ்வரன் (வயது 19) வீட்டு இலக்கம்11 ஆகிய இருவரையும் E.N.D.L.F. இனர் பலாத்காரமாக 21.10.89 இல் பிடித்துச் சென்றனர். இந்திய முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

1.11.89 அன்று இந்தியப்படை முகாமிலிருந்து வாய்க்கால் பாலம் என்னும் இடத்திற்கு சுமார் 50 ஷெல்கள் ஏவப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 24ஆம் தேதி காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.என்.டி.எல்.எஃப் கும்பல்களால் (மாலை 6மணி முதல் காலை 8 மணி வரை) அமுல்படுத்தப்பட்டுள்ளது.

1.10.89 இல் இருந்து 1.11.89 வரை தமிழீழ, இந்தியப்போரில் புலிகள் தரப்பில் 7 தோழர்கள் வீர மரணம் அடைந்துள்ளனர். ஆனந்தன், பாரத், ரகு, பாலன், யோகி, விஜயன், கண்ணன் - ஆகியோர்க்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களினாலும் அவர்களது கைக்கூலிகளாலும் பணத்தாசை காட்டி ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டவர்களும், பலவந்தமாகப்பிடித்துச் செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப் பட்டவர்களுமாகிய எமது சகோதரர்கள் 78பேர் உண்மைகளை உணர்ந்த நிலையில் இம்மாதம் எம்மிடம் அடைக்கலம் தேடி வந்துள்ளனர். இவர்கள் 32 ஆயுதங்களையும் எடுத்து வந்து எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். அவை வருமாறு:-

எம்.84.14, ஜி.3.06, ஏ.கே.03, எஸ்.எல்.ஆர் 03, எஸ்.எம்.ஜி – 02, கைக்குண்டு–01, செட்கண் – 02 போன்றனவாகும்

20.10.89 இல் இருந்து 1.11.89 வரை இந்திய ஆக்கிரமிப்பாளர்களாலும் தேசத்துரோகிகளாலும் கொல்லப்பட்ட மக்கள் சிலரின் பெயர்கள் வருமாறு:-

பழையயாழ்ப்பாணம்—அரசரத்தினம், மட்டக்களப்பு—யோகன், மட்டக்களப்பு புண்ணியமூர்த்தி, உருத்திரபுரம்— அருட்செல்வம், குருசாமி, நித்தாவூர்—மன்சூர், நஷீர், மன்னார்— அலாவுதீன், மருதிச்செட்டி— ஷதிக், சலீம், முதூர்— முகம்மது இவர்களுக்கு எமது வீரவணக்கம்.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

★அம்பாறை மாவட்டத்தில் இந்திய ராணுவம் வெளியேறியபின்னர். இந்திய அரசு தனது நலன் பேண அமைத்து, விடுதலைப்புலிகளுக்கு போட்டியாகவும், EPRLF கைக்கூலி அரசுக்கு உதவி புரியவும் உருவாக்கி விட்ட "தமிழ் தேசிய ராணுவம்" என்ற நல்ல பெயரை வைத்துக் கொண்டு குண்டர் படையாக இயங்கும் பெருமாள்படை, சிங்கள போலீசாருடன், இலங்கை சிங்கள ராணுவத்துடனும் மோதுவது ஏன்?

❑ ஒரு காரணம் டிசம்பர் 31 1989 ஆம் திகதியுடன் இந்திய ராணுவம் வெளியேறுமல் தடுப்பதற்கு இந்திய அரசுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தல், இரண்டாவது, விடுதலைப் புலிகளுடன் தமது குண்டர்களால் மோத முடியுமா என்று பார்க்கும் ஒரு ஒத்திகை. (REHERSAL) வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஐக்கிய இலங்கையின் ஒரு பகுதி என்றும் இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்புக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் 'சத்தியமெடுத்து' முதலமைச்சரான பெருமாள், தனக்கு இலங்கை ராணுவ உதவி தேவையெனப் புலிகளுக்குப் பயந்து சிங்கள மத்திய அரசைக் கோரி விட்டு, பின்னர் அவர்களைத் தாக்குவது கோழைத்தனம் தாம் சுதந்திரமும் இறையுணர்வும் கொண்ட தனித்தமிழீழ நாட்டின் பிரதமர் என்று அதிகாரமற்ற மாகாண சபையின் முதலமைச்சர் பெருமாளுக்கு எண்ணம் போலும்.

★ மாகாண சபையைக் கலைத்தால் 'தனித்தமிழீழம்' கோரிப் போராடுவோம் என்று வாய் வீரம் பேசுகிறாரே பெருமாள்?

❑ முன்பு மாகாண சபைக்கு அதிக அதிகாரம் தராவிட்டால் தனிநாடு கோருவோம் என்றார் பெருமாள். சிங்கள அரசு "இது தேசத்துரோகம்" என்று மிரட்டியவுடன், 'நான் தனிநாடு கேட்பதாகக் கூறவில்லை' என்று மறுதலித்தார். இப்போது மீண்டும் வாய்வீரம் பேசுகிறார். சுதந்திரத் தமிழீழத்தை மீட்கும் புனித இலட்சியப் போராட்டத்தை, பெருமாள் இப்படிப் பேரப் பொருளாக்குவது கீழ்த்தரமானது. கொச்சைத்தனமானது.

★ இந்திய அடிமைகளின் கூட்டணியான EPRLF ENDLF TELO விரைவில் மாகாண அரசு, தமிழீழம் பிரடகனம் செய்தால், அதை ராஜீவ் காந்தி அரசு அங்கீகரிக்குமா?

❑ இதற்குப் பதிலெழுதும் போது, ராஜீவ்காந்தியின் அரசியல் தலைவிதியே ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. அப்படித்தான் ராஜீவ் காந்தி அரசு மீண்டும் பதவியைப் பிடித்தாலும், இந்தியாவில் மாநிலங்களுக்கு சுயாட்சி (AUTONOMY) அளித்தால் இந்தியா பிளவு பட்டு விடும் என்று கூறி தனது அரசியல் (அஞ்) ஞானத்தைக் காட்டும் ராஜீவ் காந்தி சுதந்திரத் தமிழீழத்தையா அங்கீகரித்திடப் போகிறார்? தமிழீழப்போரை அடக்கி நசுக்கவல்லவா அங்கு இராணுவத்தை அவர் அனுப்பினார்? ஏன்? 1987 மே 29 உடன்பாட்டில் வட, தமிழர்களுக்கு அவர்களது தாயகத்தில் 'மாநிலசுயாட்சி' (REGIONAL AUTONOMY) பெற்றுத் தருவதற்குக் கூட ராஜீவ்காந்தி அக்கறை எடுக்கவில்லையே!

★ இப்போதைய EPRLF மாகாண அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும்ஏதாவது ஓர் இணக்கத்துக்கு வர முடியாதா?

❑ எட்டப்பனும், கட்டப்பொம்மனும் காக்கை வன்னியனும், பண்டார வன்னியனும் 1619 ஆம் தமிழீழ மன்னன் சங்கிலியனைக் காட்டிக் கொடுத்த துரோகியும், சங்கிலி மன்னனும் இணக்கத்துக்கு எப்போதாவது வர முடியுமா?

★ ஓர் அரசியல்வாதிக்கும் விடுதலைப் போராளிக்கும் வேறுபாடு என்ன?

❑ அரசியல்வாதி ஏதோ ஒரு பதவி பெற்றுத் தனது சுயலாபத்தைப் பெருக்கிடப் பசசோந்தியாக மாறுவான், விடுதலைப் போராளியோ, தனது தாய் நாட்டை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கத் தன் உயிரையும் அர்ப்பணிப்பான்.

★ முருகேசு சிவ சிதம்பரத்துக்கு நாடாளுமன்றக்கதிரையில் ஏன் இவ்வளவு ஆசை?

❑ பதவியில் நீண்டு காலம் இருந்தவன், அதை விடவே மாட்டான், பதவி ஆசை என்பது ஒரு வகை அரிப்பு! 30 ஆண்டுக்காலம் ஜீ.ஜீ பொன்னம்பலம் முதல் அமிர்தலிங்கம் வரை சிங்கள நாடாளுமன்றத்தில் மணிக்கணக்காகப் பேசியும் எதைச் சாதித்து முடித்தார்கள்?

★ சோமசுந்தரம் சேனாதி ராசாவும் இப்போது ஸ்ரீலங்கா நாடாளு மன்றத்தில் உறுப்பினராமே!

❑ ஆமாம் தொண்டை தண்ணீர் காயும் வரை கத்தி, அவரது தமிழீழத்தாகம் வற்றி விட்டது. இப்போது தமிழீழம் கேட்க மாட்டேன் என்று சிங்கள அரசியல் சட்டப்படி சத்தியமெடுத்து, தனது 1977 ஆம் ஆண்டு ஆசையை நிறைவேற்றிக் கொண்டுள்ளார். துரோகிகள் தங்களை அடையாளம் காட்டிக்கொள்வது நல்லது தானே!

★ ஈரோஸ் (EROS), (EPRLF) ஈபிஆர்எல் எஃப் டெலோ (TELO) பிளாட் (PLOTE) இந்திய அரசினால் மேற்படி இயக்கங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை வைத்துத் துவங்கப்பட்ட ஈ. என்.டி.எல்.எப் (ENDLF) போன்ற இயக்கங்கள் தமிழீழம், ஈழம் என்ற பெயர்களில் உதட்டளவில் தனிநாடு கேட்டு விட்டு, இன்று நாங்கள் தமிழீழத் தனிநாடே கேட்கவில்லை என்றும் ஐக்கிய இலங்கைத்தீவில் தமிழர்கள் ஜனநாயக ரீதியாகவும் சமவுரிமையுடனும் வாழ்வதற்கே தாம் போராடியதாகவும் இப்போது பல்டி அடிக்கிறார்களே

❑ ஈழத் தமிழர்களையும், தமிழ் நாட்டுத் தமிழர்களையும், உலகத் தமிழர்களையும் ஒரு சேர ஏமாற்றிக் கோடிக் கணக்கான பணம் திரட்டுவதாக 'ஈழம்' கேட்பதாக நாட்டியமாடியவர்கள் இவர்கள். இவர்கள் தமிழர்களை ஏமாற்றுவதை அறிந்தே இத் துரோகளுடன் விடுதலைப்புலிகள் சேரக் கூடாது என்று அன்றே எச்சரித்தேன். இன்று இந்தியாவினால் விலைக்கு வாங்கப்பட்ட இவர்கள், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக சத்தியமெடுத்து சிங்கள நாடாளுமன்றம் சென்றிருக்கிறார்கள். நக்குகிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன?

★ தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிடுவார்களா?

❑ குறைந்தபட்சம் ஸ்ரீலங்காவின் அரசியல் சட்டத்தின் ஆறு வது பிரிவுக்கு ஜே.ஆர் அரசினால் கொண்டு வரப்பட்டதும் தமிழீழ மக்களின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் பறிப்பதுமான சட்டத்திருத்தம், அரசியல் அமைப்பிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டாலன்றி விடுதலைப்புலிகள் தேர்தல் எதிலும் போட்டியிட மாட்டார்கள், கண்ணீரும் செந்நீரும் சிந்தி, ஆயிரக் கணக்கான விடுதலை வீரர்களைப் பறிகொடுத்தும் இன்னும் உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தாயக விடுதலைக்கு முன் "தேர்தல்கட்சி" ஆக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

★ நமீபிய மக்களின் சுதந்திரப் போராட்டத்தின் வெற்றி எதைக் காட்டுகிறது?

❑ சுதந்திரமும் இறைமையும் (SOVEIGNITY) கொண்ட நாடாகத் தமது நாட்டை மீட்கவும் ஆக்கிரமிப்பாளர்களையும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து தமது விடுதலையை வென்றெடுத்திடத் தீர்மானித்து விட்ட மக்கள் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தமது இலட்சியத்தினை அடைந்தே தீருவர் என்பதற்கு நமீபிய மக்கள் ஓர் எடுத்துக் காட்டு. 1833 ஆம் ஆண்டு அடிமைக் குழிக்குள் வீழ்ந்த நமிபியா, அடுத்தடுத்து இரண்டு பாசிஸ்ட், இனவெறி வல்லாதிக்கங்களுடன் சுமார் 160 ஆண்டுகளாக களைக்காமல் சளைக்காமற் போராடி இன்று சுதந்திரத்தின் வாயிலை அடைந்துள்ளது. இப்போராட்டத்தை நடத்தி முடித்து வெற்றி கண்ட இயக்கமே சுவாப்பூ (Swapo) இதன் தலைவர் நிஜோமா, நமீபிய மக்களின் நம்பிக்கையும், உறுதியும், தியாகமும் ஒரே தலைமையை ஏற்றுச் செயற்படும் ஒற்றுமையுமிருந்தால், தமிழீழம் சுதந்திரம் பெறுவதைத் தடுக்க உலகில் எந்த சக்தியாலும் முடியாது.

## பிரபாகரன் பிறந்தநாள் வாழ்த்து!

இந்தியப் பெரும்படைக்கு எதிர்நின்ற வெம்புலி!
கொந்திய நெஞ்சாங் குலையினி விருந்து, அவன்
சிந்திய அரத்தத்தால் சிவத்தது தமிழீழம்!
பிந்திய தமிழ்மறம் பேணிப் புரந்தான்!—அவன்
வந்தலர்ந்த நாள்மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்!
வளர்க அவன் புகழென்றே
மீட்டுகவே யாழும்!

'பிரபா கரன்' எனும் பிள்ளை வேங்கை
உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து
திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!
பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன்—அவன்
உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!
ஓங்குகவன் புகழென்றே
ஒலிப்பாயே முரசம்!

மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!
இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!
திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த
சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன்!—அவன்
பிறந்தொளிர்த்த நாள்நினைந்து பேரிகையே முழங்கு!
பெற்றான்காண் பெரும்புகழும்!
பிளிறுகவே வேழம்!

பெருஞ்சித்திரனார்

## பல்லாண்டு வாழியவே!

வாழும் உரிமையை
இனவெறி இருட்டில்
தொலைத்த
கிழக்குத் தமிழருக்கு
விளக்காய் வந்த
நெருப்பு நிலாவே!

தமிழர் உலகின்
தன்மான—வீரம்
காக்கும்
புறநானூற்றின்
புதிய பதிப்பே!

வல்லினத் தமிழினம்
இடையினத்தால்
மெல்லினமாக
மெலிந்தவேளை—
மிச்சமான
'ஆய்தமே' (ஃ)
ஆயுதமென
ஆர்ப்பரித்த
புதுப்புலியே!

நாடி நரம்புகளை
பாடித் துடிப்பேற்றும்
பாவேந்தர்
வேட்டு வார்த்தைகளின்
பாட்டு வரியே!

பூவின் வயிற்றில்
புயலும் பிறக்கும்
என்பதற்கு
புதையலாய்க்கிடைத்த
சரித்திரச் சான்றே!

தமிழர் தசையை
கடையில் விற்ற
காடையர்க்கு
பாடை தந்தவனே!

உன்
சூரியப்படையை
சம்காரம் செய்ய
விட்டில்களாய் புறப்பட்டு
படையில் வந்தவர்களை
பாடையில் அனுப்பியவனே!
'புஷ்பிக்க' வருவதாய்
போலிவேடம் போட்டவனை
அஸ்தமிக்க வைத்த
புரட்சிக் கனவே!

மரண ஓலத்தை
மரணிக்க வைத்த
மாணிக்கமே!

ஈழத்தின் விடியலை
உறுதிப்படுத்த
குருதி சிந்துகிற
'ஈழவேங்கை'
தம்பி. பிரபாகரனே!

நீ பிறந்தபோது....
பத்துலட்சம்
பகலவன்களை
ஒரு மகனாய்
பெற்றெடுத்ததாகத்
தமிழ்த்தாய் மகிழ்ந்தாளே!

உறங்காத எரிமலைகளின்
ஒட்டுமொத்தக்
குடியிருப்பே!

உனது வீரநெஞ்சம்—
சுபாஷின்
வீரியச் சிந்தனைச்
சேர்மத்தோடு
தமிழமுத
அமிலம் கலந்த
இரசவாதம்!

களத்திற்கு
உன் துப்பாக்கித் தும்மலோடு
ஒரு முக்குத்திக் கும்மலுமா
துணை வருகிறது?
வீரியச் சூர்யனின்
பாரிய வெற்றிக்கு
மதியான
வதனமுமா
விழி திறந்து
களம் காண்கிறது?

அக்கிரம அசுரர்களை
அழிக்க அவதரித்த
துவாரகாவுக்கு
நீயன்றோ
தந்தையானாய்!
எங்கள் ராஜாவே,
ஈழத்தின் ரோஜாவே!
இன்றுனக்கு
அகவை முப்பத்தேழோ?

உனக்கு மட்டும்
ஆண்டுகள் ஒவ்வொன்றும்
நாள் கணக்கே!

நீ பிறந்து
இன்றோடு
முப்பத்தேழு நாள்கள்தான்!

அந்தக் கணக்கில்
நூறாண்டு வாழ்க!
புகழ் கண்டு வாழ்க!
தமிழர்க்கு
ஈழம் வென்று வாழ்க!

— கோமல் தமிழமுதன்
பிச்சப்பாக்கம்








அண்மையில் அம்பாறை மாவட்ட CVF, TNA முகாம்களை புலிகள் அழித்த போது கைப்பற்றிய ஆயுதங்களின் ஒரு பகுதியை காணலாம். இவை இந்திய உளவுப் படை 'ரா' கள்ளத்தனமாக வழங்கியது என்று புலிகள் குற்றம் சாட்டுகின்றனர்.



பொத்துவிலில் விடுதலைப் புலிகளின் கருத்துக்களைக் கேட்கத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் ஓர் பகுதி.




"தமிழீழ சுதந்திரம் எமது பிறப்புரிமை"

## வீரவேங்கை

### சந்தா விபரம்

- ★ அச்சிடும் தாள் விலை மும்மடங்கு உயர்ந்து விட்டதாலும்
- ★ அச்சக வேலைகளின் செலவு அதிகரித்துள்ளதாலும்

பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது
இந்தியாவுக்குள் (முத்திரை செலவுட்பட)

**ரூபா 60-00**

வெளிநாடுகளுக்கு ஓர் ஆண்டு சந்தா
(முத்திரை செலவுட்பட)

**75 அமெரிக்கன் டாலர்**

எமது கட்டுப்பாட்டை மீறி இச்சந்தா மாறுதலை செய்வதற்கு வருந்துகிறோம்.
ஓர் ஆண்டுச் சந்தா என்பது 12 இதழ்களாகும்.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

எஸ். ஆர் கோவைமகேசன்
89 A, காமராஜ் அவின்யூ
சென்னை-600 020
தமிழ்நாடு, இந்தியா.






அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றில் 27-11-89ம் நாளன்று விடுதலைப் புலிகள் பிரகடனப் படுத்திய "மாவீரர் நாள்" விழாவில் கலந்து கொண்டு "யோகி" உரையாற்றுகிறார். பாலசிங்கம், திருமதி அடேல் ஆகியோரும் உடனிருக்கின்றனர்.